www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 11 | ஜனவரி 2004 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 65

# இடைக்கால நிர்வாக யோசனைக்கு இரு தலைமைகளும் தயாரில்லை!

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு அதன் கீழான யுத்த நிறுத்தம் நடைமுறைக்கு வந்து இரண்டு வருடங்கள் ஆகப் போகின்றது. ஆனால் அதன் கீழான பலாபலன்கள் வடக்கு கிழக்கு மக்களைப் பொறுத்தவரை தூரத்துப் பச்சையாகவே இருந்து வருகின்றன. அவ்வாறே அரசியல் தீர்வையும் நிரந்தர சமாதானத்தையும் எதிர்பார்த்த அனைத்து மக்களுக்கும் ஏமாற்றமே எஞ்சி நிற்கின்றது.

ஆறுகட்டப் பேச்சுவார்த்தைகள் பயனற்று இடைநிறுத்தப்பட்ட சூழலிலேயே வடக்கு கிழக்கிற்கு இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கை எழுந்தது. அரசாங்கம் தனது யோசனையை விடுதலைப் புலிகளுக்கு கொடுத்தது. அதனைப் பரிசீலித்த விடுதலைப் புலிகள் இயக்கம் குறிப்பிட்ட காலக் கலந்தாலோசனைகளுக்குப் பின் தமது இடைக்கால நிர்வாக கட்டமைப்பிற்கான யோசனைகளை நோர்வேப் பிரதிநிதி மூலமாக அரசாங்கத்திடம் கையளித்தது. அத்துடன் மேற்படி யோசனைகளைப் பற்றிய பேச்சு வார்த்தை நடாத்தவும் தயாராக இருப்பதாகவும் புலிகள் இயக்கம் தெரிவித்திருந்தது.

ஆனால் இன்றுவரை அரசாங்கம் புலிகள் முன்வைத்த வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக யோசனைகளைப் பரிசீலிக்கவோ அதனைப் பேச்சுவார்த்தைக்கு எடுக்கவோ முன்வரவில்லை. அதேவேளை ஜனாதிபதியின் தலைமையிலான அதிகார மையம் புலிகளின் யோசனைகளை நிராகரித்து விட்டது. அவ் யோசனைகள் தனிநாட்டுக்குரிய அம்சங்களை உள்ளடக்கியிருக்கிறது என்பதே ஜே.வி.பி. உட்பட எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடாக உள்ளது. இவர்கள் பேச்சு வார்த்தையைக் குழப்பும் தரப்பில் இருப்ப தால் எடுத்த எடுப்பிலேயே புலிகளது யோசனைகளை தனிநாட்டுக்குரிய அம்சங்கள் கொண்டதென நிராகரித்துள்ளதுடன் பேரினவாதப் பிரசாரத்தை மேலும் முடுக்கி விட்டுள்ளனர்.

## பின்னணியில் இருப்போர் யார்?



அத்துடன் மேற்படி இடைக்கால நிர்வாக யோசனைகளைப் பேச்சு வார்த்தைக்கு எடுக்காது திசை திருப்பி விடுவதற்கு ஏற்ற விதமாக ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பறித்து அரசியல் சர்ச்சைகளையும் நெருக்கடியையும் ஏற்படுத்தினார். விடுதலைப் புலிகள் இயக்கம் தமது யோசனைகளை அரசாங்கத்திற்கு கையளித்த நான்காவது நாள் ஜனாதிபதி எடுத்த மேற்படி நடவடிக்கையால் இடைக்கால நிர்வாக சபைக்கான யோசனை மீதான கவனம் திசை திருப்பப்பட்டது. இதன் பின்னணியில் பொதுசன முன்னணிக்குள் உள்ள பேரினவாதிகள் மட்டுமன்றி இந்தியக் கொள்கை வகுப்பாளர்களும் இருந்தனர் என்பது மறைக்கப்பட முடியாத உண்மைகளாகும்.

இத்தகைய சூழலை எதிர்கொண்டு அதனை மேவி பேச்சுவார்த்தையின் மற்றொரு தொடர்ச்சியாக இடைக்கால சபைக்கான புலிகள் இயக்கத்தின் யோசனைகளை பேச்சுவார்த்தைக்கு எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்வதை ரணில் விக்கிரமசிங்காவும் அரசாங்கத் தரப்பும் தவிர்த்துக் கொண்டது. இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை ஒரு மூலையில் மூடிக்கட்டி வைத்துவிட்டு ஜனாதிபதிக்கு எதிரான பிரசாரத்தை முன்னெடுத்துக் கொள்வதிலேயே முன்னிற்கின்றனர். மூன்று அமைச்சுக்களைப் பறித்தெடுத்தமையால் பேச்சு வார்த்தையைத் தொடர முடியவில்லை என்பதை உச்சத் தொனியில் பிரச்சாரம் செய்துகொண்டனர். அதில் ஓரளவுக்கு உண்மை இருப்பினும் பேச்சுவார்த்தை ஏற்கனவே அரசாங்கத் தரப்பின் இழுத்தடிப்பால் ஆறு கட்டத்துடன் நின்றுபோன உண்மை மறைக்கப்பட்டது.

அதேவேளை அடுத்து வரும் ஒரு தேர்தலுக்கான பிரச்சார மேடையாக்குவதில் அரசாங்கம் கவனத்தைக் குவித்துக் கொண்டதே தவிர பேச்சு வார்த்தைப் பற்றி அக்கறை காட்டவில்லை. பாதுகாப்பு அமைச்சை மீளக் கையளித்தாலே தம்மால் பேச்சு வார்த்தையைத் தொடங்க முடியும் என்ற நிலைப்பாட்டை உயர்த்திப் பிடித்துக் கொண்டதன் மூலம் புலிகளின் இடைக்கால யோசனைகளை ஒதுக்கி வைக்க முடிந்துள்ளது.

மேலும் ஜனாதிபதி–அரசாங்கக் குழுவின் இணக்கப் பேச்சுவார்த்தை அர்த்த மற்றவகையில் இழுத்துச் செல்லப்பட்டதுடன் ஜனாதிபதி பிரதமருக்கிடையிலான சந்திப்புகளும் முடிவின்றி தொடரப்படுகிறது. இந்நிலையில் அடுத்தவொரு பிரச்சினையாக ஜனாதிபதியின் பதவிக்காலம் பற்றியும்

12ம் பக்கம் பார்க்க..

# சமாதான நடவடிக்கைகளில் இந்தியாவின் தலையீடு!

இந்திய ஆளும் வர்க்கத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் மாற்றியமைக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சில முக்கிய இந்தியப் பத்திரிகைகளும் முன்னாள் ராஜதந்திர அதிகாரிகளும் தெரிவித்து வருகின்றனர். திக்ஷித், ராஸ்கோத்திரா போன்றோர் அவ் யோசனைகளை நிராகரிக்கப்பட வேண்டியவை என்றும் கூறியுள்ளனர்.

அதேவேளை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் சமாதான நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் ஆதரவு பெறப்பட வேண்டும் என்று கூறிவருகின்றனர். இந்தியாவின் ஆதரவை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளை எடுக்கும்படி புலிகள் இயக்கம் தமிழ் தேசிய கூட்டமைப்பை கேட்டுக் கொண்டுள்ளதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன.

எம்மை இந்தியா கைவிட்டால் நாம் இந்தியாவை கைவிட வேண்டி வரும் என்று ம.ம.மு யின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்திருந்தார்.

அமெரிக்காவிற்கு சென்றிருந்த அமைச்சர் மிலிந்த மொரகொட அங்கிருந்து இந்தியாவுக்கு சென்றார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ இந்தியாவுக்கு செல்ல வுள்ளார். அமைச்சர் ரவூப் ஹக்கீம் அடிக்கடி இந்தியாவுக்கு சென்று வருகிறார். ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரும் அடிக்கடி இந்தியாவுக்கு சென்று வருகிறார்.

சமாதான நடவடிக்கைகளுக்கு இந்திய ஆளும் வர்க்கம் பல வகையில் இடையூறாக இருந்து வருகிறது. இலங்கை முஸ்லீம் மக்களின் பிரச்சினை பெரிதாக காட்டி குழப்பங்களை ஏற்படுத்துவதில் இந்திய ஆளும் வர்க்கம் திட்டமிட்டு செயற்பட்டுவருகிறது. அதற்கு முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் நன்கு பயன்படுத்தப்படுகிறார் என்றே நம்பப்படுகிறது.

பொது ஜனஐக்கிய முன்னணியினூடாகவும், ஜனாதிபதி சந்திரிகாவினூடாகவும் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுவதற்கு இந்தியா பக்கபலமாக இருந்து வருகிறது.

இதனால் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் அமெரிக்காவின் விருப்பு வெறுப்பிற்கேற்ப இயங்கினாலும் இந்தியாவுடன் அனுசரித்து போக வேண்டிய நிர்ப்பந்த நிலையிலேயே இருக்கின்றது. அதனாலேயே பிரதமரும், அமைச்சர் மலிந்த மொரகொடவும் அவ்வப்போது இந்தியாவு க்கு சென்று விளக்கமளித்து வருகின்றனர். அமெரிக்காவின் ஆசிர்வாதத்துடன் ஐக்கிய தேசிய கட்சி இந்தியாவுக்கு இணங்கிப் போய்விடலாம்.

தமிழ் தேசியவாத சக்திகள் இந்திய மேலாதிக்கத்திடமிருந்து எத்தகைய ஆதரவை பெறவிரும்புகின்றனர் என்பது தெளிவாகத் தெரியவில்லை. சமாதான படைகளை அனுப்பி அன்று தமிழ் மக்களை கொன்றுகுவித்த இந்தியாவிடம் இன்று சமாதான நடவடிக்கைகளை குழப்பிவரும் இந்தியாவிடமிருந்து

தொடர்ச்சி 12ம் பக்கம்..

# திலங்க சுமதிபால விவகாரம் சட்டத்தின் முன் சகலரும் சமம். ?

இலங்கை கிரிக்கட் சபைத் தலைவர் திலங்க சுமதிபால சட்டத்திற்கு அப்பாற்பட்டவரா என்ற கேள்வி, எழுகிறது. பாதாள உலக கோஷ்டியினர் செய்த பல கொலைகளுடன் அவருக்கு தொடர்பு இருப்பதாகவும் குடிவரவு குடியகல்வு சட்டத்திற்கு முரணான சில குற்றங்களை புரிந்துள்ளதாகவும் பணமோசடி செய்துள்ளதாகவும் சாட்சியங்கள் இருப்பதாக கூறிய போதும் அவர் மீது சட்டநடவடிக்கைகளை எடுப்பதற்கு இலங்கை பொலிசார் அஞ்சுவதாகவே தெரிகிறது.

அவர் அந்நிய முதலீட்டுச்சபையின் தலைவராக இருந்த போது பல மோசடிகளில் ஈடுபட்டதாக சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. அவரின் சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகள் பற்றி அறிக்கை செய்த பத்திரிகையாளர்களை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டி இருந்ததாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன.

பொதுஜன ஐக்கிய முன்னணியினரில் சிலரும் அதேபோன்று ஐக்கிய தேசிய கட்சியிலுள்ள சிலரும் அவர்மீது குற்றஞ் சாட்டுகின்றனர்.

அவ்வாறெனின் அவருக்கு உறுதுணை யாக இருக்கும் அரசியல் சக்தி எது? முக்கிய பொலிஸ் அதிகாரிகள் அவருக்கு ஆதரவாக இருக்கின்றனரா?

அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவரின் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாக அவர் உயர் நீதிமன்றத்தில் தொடுத்திருந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அவர் மீது சட்ட நடவடிக்கைகளை எடுக்க எவ்வித தடையும் இல்லை என்று உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அவர் மீது சான்றுகள் இருந்தும் அவரை கைது செய்யத் தயங்கிய சி.ஐ.டியினர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்திலிருந்து அவரை கைது செய்ய பிடி ஆணையை வழங்கும்படி கேட்டனர். அவர் மீது பல குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்ட போதும் குடிவரவு குடியகல்வு சட்டத்திற்கு முரணாக அவர் செய்ததாக சொல்லப்படும் குற்றச் சாட்டுக்களையே அவர்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர். அச்சட்டத்தின் விபரிக்கப்பட்டுள்ள குற்றங்களை செய்ததாக அடிப்படை சாட்சியங்கள் இருப்பின் நீதிமன்ற பிடி ஆணை உத்தரவு இல்லாமலே அவரை கைது செய்யலாம் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. அவர் கிரிக்கட் சபையின் தலைவராகப் போட்டியிட்ட போது பிரயோகித்த பலாத்காரங்கள் பற்றி அதிகமே பேசப்பட்டன.

கொழும்பு பிரதான நீதவான் இல்லாத பௌர்ணமி பொது விடுமுறை

தொடர்ச்சி 12ம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# வீட்டுத்திட்டத்தின் உண்மைநிலை

தோட்டத் தொழிளார்களுக்கு வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருவதாக அரசாங்கத்தில் மலையக அமைச்சர்களாக உள்ள தலைவர்கள் கூறி வருகின்றனர். ஆனால் இந்த வீட்டுத்திட்டம் எத்தகையது என்பதை பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிலையம் அண்மையில் வெளிப்படுத்தியுள்ளது.

- இவ்வீட்டுத்திட்டத்திற்கு 7பேர்ச்சஸ் காணி வழங்கப்படும்.
- இதற்குப் பயன்படுத்தப்படும் நிதி தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியைப் பிணையாக வைத்துப் பெறப்படும்.
- 40ஆயிரம் தொடக்கம் ஒரு லட்சம் ரூபா வரை கடனாகப் பெறமுடியும். அதற்கு வட்டியும் அறவிடப்படும். 5வருடம் முதல் 15 வருடத்தில் கடனை முழுமையாக அடைக்க வேண்டும்.
- வீடுகளைக் கட்டும் போது தொழிலளர்களின் விருப்பத்தின்படி கட்டமுடியாது. தேவைக்குத் தகுந்த மாதிரி விஸ்தரிக்கவும் முடியாது!.
- இத்தனைக்கும் இவ் வீடோ காணியோ சம்மந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு எவ்வகையிலும் சோந்தமாக இருக்கமாட்டாது. கூட்டுறவுச் சங்கத்திற்கே சொந்தமாகும்.
- அவ் வீட்டைத் தமது அடுத்த தலைமுறையினருக்கு கைமாற்றிக் கொடுக்கவும் முடியாது .

இது தான் தோட்டத் தொழிலாளர்ளுக்கான வீட்டுத் திட்டத்தின் லட்சணமாகும். அன்று கொலனிய வெள்ளைத்துரைமார் லயன்கள் கட்டித் தொழிலாளர்களை அடிமைவாழ்வில் இருத்தினர். இப்போது நவ கொலனியத்தின் கீழ் கறுத்தத்துரைமார் வீட்டுத்திட்டம் எனக் கூறி புதிய அடிமைகளாக மலையக தொழிலாளர்களை இருத்தி வைத்திருக்க முற்பட்டுள்ளனர். ஆறுமுகமும் சந்திரசேகரனும் தோட்டத் தொழிலாளர்களை ஏய்ப்பவர்களா? அல்லது மேய்ப்பவர்களா? மலையக மக்கள் உண்மைகளை உணரும் வரை ஏமாற்றுக்கள் தொடரவே செய்யும்.

ஆ.ஈசன்
தலவாக்கெல்ல.

# டெங்கு நுளம்பு ஒழிப்புத் திட்டம் யாருக்கு?

வவுனியா நகரசபை உள்ளடங்களிலுள்ள அரசாங்க விடுதி அமைந்துள்ள உள்வட்ட வீதியிலுள்ள ஒரு சில விடுதியான சுகாதார வைத்திய அதிகாரி (*MOH*), அதற்கு முன்பாக உள்ள விடுதி (*DPDHS* அலுவலகத்தில் கடமையாற்றும் அலுவலகர்) பெண்கள் கூட்டு விடுதிக்கும் டெங்கு ஒழிப்புத் திட்ட மருந்து கடந்த 2003-11-25, 2003-12-06, 2003-12-17 ஆகிய தினங்களில் அதாவது 22 நாட்கள் இடைவெளியில் 3 தடவைகள் விசிறப்பட்டுள்ளது. அப்படியானால் டெங்கு காய்ச்சல் சுகாதார திணைக்களத்தில் வேலை பார்க்கும் ஊழியர்களுக்கு மட்டும்தான் வருமா? அதுமட்டுமல்ல. அவர்களின் விடுதிகளுக்கு மருந்து விசிறப்படுவதால் அந்த விடுதிகளுக்கு அப்பால் நுளம்பு மருந்து விசிறப்படாத ஏனைய விடுதிகளுக்கு செல்கின்றதால் மேலும் கூடுகின்றன. இதுமட்டுமல்ல பண்டாரிக்குளத்திலுள்ள தனிப்பட்ட இருவரது வீடுகளுக்கு மட்டும் டெங்கு ஒழிப்பு திட்ட மருந்து விசிறப்பட்டுள்ளது. மேலதிகாரிகளே இவ்வாறாக செயற்பட்டால் சாதாரண பொது மக்கள் எங்கு போய் முறையிடுவது.

இச்செயல் வவுனியாவில் இடம்பெறும் மக்கள் மீதான பாகுபாடு ஊழலுக்கு ஒரு சிறு உதாரணமாகும். மக்கள் என்போர் சுண்டக்காய் போன்ற கவனிப்பாரற்றவர்கள்தான். உயர் அதிகாரிகள் அவர்களது ஆதரவு பெற்ற பணக்காரப் புள்ளிகள் தான் கவனத்திற்குரியவர்களாக இருந்து வருகிறார்கள். இதுபற்றி உரிய உயர் அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. கவனத்திற் கொள்வார்களா?

- க. நடேஸ் -
வவுனியா

### இடைக்கால...

1ம் பக்க தொடர்ச்சி..

இரகசிய சத்தியப் பிரமாணம் குறித்தும் சர்ச்சை எழுப்பப்பட்டுள்ளது. அதனை எழுப்பியது பிரதமரது மாமனாரின் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை நிறுவனமேயாகும்.

இவ்வாறு ஜனாதிபதி தரப்பிலும் பிரதமரின் பக்கங்களில் இருந்து புதிய புதிய பிரச்சினைகளும் சர்ச்சைகளும் கிளப்பப்படுவதன் இர்கசியம் என்ன? அவற்றின் பின்னால் யார் இருக்கிறார்கள்? என்பன பலத்த கேள்விகளாகும்.

இவற்றை ஆழ்ந்து நோக்கும்போது ஜனாதிபதி பிரதமர் ஆகியோரது தலைமைகளிலான அதிகார மையங்கள் இனப்பிரச்சினைக்கான எத்தகைய தீர்வையும் பேரினவாத நிலைப்பாட்டிற்கு அப்பால் நின்று அணுகவோ அவை பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்தவோ தயார் இல்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. வெறுமனே சமாதான வேஷம் கட்டி நின்று பேச்சுவார்த்தை நாடகமாடித் தமது பேரினவாத பெருமுதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதிலேயே ரணில் தலைமையிலான அரசாங்கம் மிகத் தந்திரமாகச் செயல்பட்டு வருகிறது. அரசாங்கத்தின் உண்மையான சுய ரூபத்தைக் காணாது சிலர் ஐக்கிய தேசியக் கட்சியும் பிரதமர் ரணிலும் அரசியல் தீர்விலும் சமாதானத்திலும் பற்றுறுதியுடன் இருப்பதாக நம்புகின்றனர். ஆனால் உண்மை அவ்வாறு இல்லை.

அதேவேளை ஜனாதிபதி பேச்சுவார்த்தையைக் குழப்பும் தரப்பில் இருந்து வருகிறார் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. அடுத்த தேர்தல் மூலம் பாராளுமன்ற அதிகாரத்தைக் கைப்பற்றுவதே அவரது பிரதான இலக்காகும். ஜே.வி.பி.யுடனான கூட்டும் தேர்தல் வெற்றியை நோக்கியதேயாகும். ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு இந்திய ஆலோசனைகள் கிடைத்தும் வருகின்றன.

இவ்வாறு அடிப்படையில் பேரினவாத பெருமுதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதில் இரு தலைமைகளும் ஒரே கோட்டில் தான் இருந்து வருகின்றன. அவ்வாறே புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகளைப் புறந்தள்ளிக் கொள்வதிலும் உள்ளார்ந்து ஒரே நிலைப்பாட்டையே அவை கொண்டிருக்கின்றன. அதேவேளை தாராள பொருளாதாரம் தனியார் மயம் மற்றும் மக்கள் விரோத தேச விரோத நடவடிக்கைகளில் இரு தலைமைத்துவங்களும் ஏறத்தாழ ஒரே கொள்கைகளையே பின்பற்றி நின்கின்றன. அதன் காரணமாகவே இவர்களுடன் அமெரிக்க உலக மேலாதிக்க ஏகாதிபத்தியமும் பிராந்திய மேலாதிக்க சக்தியான இந்தியாவும் தத்தமது நிலைநின்று செல்வாக்கைச் செலுத்தி வருகின்றன. ஜனாதிபதியின் பின்னால் இந்தியாவும் ரணிலுக்குப் பின்னால் அமெரிக்காவும் இருந்து வருவது இன்று பகிரங்கமானதாகும்.

இவற்றால் பேச்சுவார்த்தை தடம் புரண்ட நிலையில் இருந்து வருகின்றது. புலிகளின் இடைக்கால நிர்வாக ஆலோசனைகளைப் பேரினவாதிகளும் அவர்களது ஊடகங்களும் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றன. இதற்கு சமாதான வேஷம் கட்டி நிற்கும் அரசு மௌன ஆதரவும் கொடுத்து வருகிறது.

இரு தலைமைகளும் தமது உள்ளார்ந்ததும் வெளிப்படையானதுமான பேரினவாத நிலைப்பாட்டைக் கைவிட்டு நேர்மையான பேச்சுவார்த்தைக்கு முன்வராதவரை மீண்டும் யுத்தம் வெடிப்பதற்கான அபாயமே வளர்ந்து வருகின்றது. இதனை தென்னிலங்கையின் சமாதானத்தை விரும்பும் மக்கள் தமது கவனத்திற்கு எடுத்து இரு தலைமைத்துவங்களுக்கும் பாரிய அழுத்தங்களை பல்வேறு வெகுஜன இயக்கங்கள் மூலம் கொடுக்க வேண்டும். அவ்வாறான இயக்கங்களுக்கு இடதுசாரி ஜனநாயக மக்கள் சார்பு சக்திகள் முன்நிற்க வேண்டும்.

## அதிரடிச் செய்தித் தணிக்கை!

டிசம்பர் மாதப் பிற்பகுதியில் ஒரு நாள் அமைச்சர் ஹக்கீம் பயணமாகவிருந்த ஒரு வாகனத்தில் குண்டு வெடிப்பு நடந்ததாக ஒரு செய்தித் தலைப்பு 'ஷக்தி' தொலைக்காட்சியில் வாசிக்கப்பட்டது. பின்பு அது பற்றி மூச்சே இல்லை. செய்தித் தலைப்பு உண்மையானதா? அப்படியானால் ஏன் செய்தி கூறப்படவில்லை? செய்தித் தலைப்பு தவறானதா? அப்படியானால் ஏன் திருத்தம் எதுவும் கூறப்படவில்லை? இச்செய்தி இரண்டு நாட்கள் பின்னர் ஐலண்டில் வெளியானது. அமைச்சரைக் கொல்ல நினைத்தோர் விடுதலைப் புலிகளோ தமிழர்களோ என்பதற்கான ஆதாரம் இல்லாததால் அமைச்சரே செய்தியை வாசிக்காமல் தடுத்தாரா? அல்லது குண்டு யாருடையது என்று தெரிந்துதான் தடுத்தாரா?


புதிய பூமி வட புலத்தில்
ஏக விநியோகம் விற்பனை
வசந்தம் புத்தக நிலையம்
405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

புதிய பூமியின் வளர்ச்சிக்கு
- நிதி உதவுங்கள்
- சந்தா அனுப்புங்கள்
- விற்பனைப் பணத்தை அனுப்பிவையுங்கள்
- கட்டுரைகள் - செய்திகள் - கருத்துக்கள் அனுப்புங்கள்

ஆசிரிய பீடம் / நிர்வாக பீடம் :
S-47, 3வது தளம், கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
(C.C.S.M. Complex) கொழும்பு - 11, இலங்கை.
Tel: 2435117, 2335844 Fax : 01-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com

பணம் அனுப்பும் வங்கி விபரம் : சோ. தேவராஜா
கணக்கு இலக்கம் : 0672-21-2002634-6
Bank of Ceylon, Central Super Market, Colombo 11.


# நாலும் நடக்கும் உலகிலே

நற்குணன்

### நொண்டிக் கழுதைக்குச் சறுக்கினது சாட்டு.

கடந்த இருபது மாதங்களாக ரணில் விக்கிரமசிங்ஹ அரசாங்கம் அமைதிப் பேச்சுவார்த்தைகள் மூலம் எதைச் சாதித்தது? விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகிக் கொண்ட பிறகும் மிகவும் மந்த வேகத்திலேயே அரசாங்கம் செயற்பட்டுள்ளது. உண்மையில் எதையுமே செய்யாமல் போர் நிறுத்தத்தை இழுத்தடிப்பது தவிர எதைத்தான் இந்த அரசாங்கம் செய்தது?

இப்போது சந்திரிகா குமாரணதுங்கவின் குறுக்கீட்டால் அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க முடியாதுள்ளது என்று ரணில் சொல்கிறார்.

உண்மையிலேயே அவர் தொடர்ந்தும் எதையும் செய்யாமலிருக்க அவருக்கு ஒரு நல்ல நியாயத்தை வழங்கியுள்ள சந்திரிகா அவருக்கு உதவியையே செய்திருக்கிறாரல்லவா?

### புலியை மிஞ்சிய புலி

பத்திரிகையாளரிடையே விடுதலைப்புலிகள் கேட்கிற சமஷ்டி பிழையென்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் முன்வைக்கும் இடைக்காலத் தீர்வு ஆலோசனைகள் பிழை என்பவர்கள் இருக்கிறார்கள். .இவர்களெல்லாம் பிரிவினையே மனதிற் கொண்டு தான் ஆலோசனைகளும் சமஷ்டித் தீர்வும் முன்வைக்கப்படுகின்றன என்று வாதிப்பார்கள். இந்திய மேலாதிக்கத்தின் குரலாக உள்ள 'இந்து' பத்திரிகை நிறுவனம் முதல் கடைந்தெடுத்த ஈழத்துப் பேரினவாதிகள் வரை இதையே கூறுகிறார்கள். இன்னும், யாழ்ப்பாணத்திலோ பல்கலைக்கழக்கத்திலோ இல்லாத மனித உரிமைக்கு உரிமை கொண்டாடுகிற கூலிப் படையும் இதையே கூறுகிறது. ஒருவருட காலமாக டி.பி.எஸ். ஜெயராஜ் என்கிற கனடாக்காரரும் விடுதலைப் புலி எதிர்ப்பு ஆங்கில ஏடுகளில் இந்தச் சாயலிலேயே எழுதி வருகிறார். இதற்கெல்லாம் அவரவர் நியாயஞ் சார்ந்த விளக்கங்கள் இருக்கலாம். எல்லாமே நேர்மையானவையாயிருக்க அவசியமில்லை.

என்றாலும் விடுதலைப்புலிகள் சமஷ்டி யோசனையை முன்வைத்ததும் மாற்று இடைக்காலத் தீர்வு ஆலோசனைகளை முன்வைத்ததும் தவறு என்று ஒருவர் எழுதிவருகிறார். முன்பு சில காலமாக விடுதலைப்புலிகளின் ஆங்கில ஏடான நோத் ஈஸ்ற் ஃபுறண்டியரில் எழுதி வந்த இவர் இப்போது சில மாதங்களாக வீரகேசரியில் பிரிவினைப் போரை மீண்டும் விடுதலைப் புலிகள் தொடங்க வேண்டும் என்ற தொனியில் ஏன் எழுதி வருகிறாரோ என்று யாரும் யோசிக்கலாம்.

போர் மீண்டும் தொடங்குவதற்கான சூழ்ச்சியைப் புலிகளை எதிர்த்துக் கொண்டு தான் செய்ய வேண்டியதில்லை. கிழக்கில் உள்ள மூன்றாவது விஷம சக்தியும் அதை நன்றாகவே செய்கிறது. நம்முடைய நிபுணரோ புலிகளை ஆதரித்தவாறே அதைச் செய்கிறாரே அது தான் கெட்டித்தனம்.

போர் இல்லாவிட்டால் தன்போல நிபுணர்களுக்கு எழுத விஷயமே கிடையாது என்பதால் இப்படிச் செய்கிறாரா அல்லது வேறு தூண்டுதல்களாற் செய்கிறாரா?

### சதாம் ஹூ ஸேனைப் பிடித்த பிறகு

சதாம்ஹூஸேனைப் பிடித்தாயிற்று. இனி அவரது தலைமையில் இயங்கி வந்ததாகச் சொல்லப்பட்ட அமெரிக்க ஆக்கிரமிப்பு எதிர்ப்பியக்கம் ஓயும் என்று அமெரிக்க மக்கள் எதிர்பார்க்க முடியுமா? இப்போதைக்கு ஜோஜ் புஷ்ஷூம் ற்றோனி ப்ளெயரும் சரிந்து வரும் தமது செல்வாக்கை மேலுஞ் சரியாமற் பார்த்துக் கொள்ளலாம். இன்னுஞ் சில மாதங்களில் ஈராக்கிய மக்களின் எதிரப்பு மேலும் தீவிரமாகும் போது இந்தச் சரிவு மேலும் தொடரும். அடுத்த அமெரிக்க சனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பின் லாடனைப் பிடிக்கிற அக்கறையில் ஜோஜ் புஷ்ஷூம் அவரது பெருமுதலாளிய எசமான்களும் சி.ஐ.ஏ.யும் மிகவும் ஊக்கமாக இருக்கின்றனர்.

அமெரிக்காவை இப்போதைக்கு யாராண்டால் என்ன, பிரித்தானியாவை யாராண்டாலென்ன, ஏகாதிபத்தியம் ஏகாதிபத்தியமாகவே உள்ளளவும் ஆக்கிரமிப்பும் அதற்கு எதிரான போராட்டமும் தொடர்ந்த படியே இருக்கும்.

சதாம் ஷூஸேன் விவகாரம் அமெரிக்காவின் அயல் விவகாரங்களில் ஒரு பெரிய தலைவலியாகவே தொடரும் என்பதும் உறுதி. அதற்கான தடயங்கள் ஏற்கனவே தென்படுகின்றன. சதாம் ஷூஸேனை அமெரிக்கா நினைத்தபடி தண்டிக்க இயலாது என்ற கருத்து வலுப்பட்டு வருகிறது.

### குழந்தைகளைக் கடவுள் காப்பாற்றுவாராக!

ஸேவ் த சில்றன் (குழந்தைகளைக் காப்போம்) என்பது உலகப் பிரசித்தி பெற்ற என்.ஜி.ஓ நிதியம். அதற்குப் பல கிளைகள். ஈராக்கில் அமெரிக்க அத்துமீறல்களைக் கண்டித்து பிரித்தானியக்கிளை ஒக்டோபரில் ஒரு அறிக்கை விடுத்தது. அமெரிக்கப் படைகளைக் கண்டித்தது தவறு என்று அமெரிக்கக் கிளை பிரித்தானியக் கிளையைக் கண்டித்து அறிக்கை விடுத்தது.

இதற்குக் காரணம் எல்லாக் கிளைகளுக்கும் அந்தந்த நாட்டு அரசாங்கம் நிதி உதவி அல்லது வரிச் சலுகை உண்டு. அதை இழந்தால், குழந்தைகளைக் காப்பாற்ற வேறு யாரும் இருந்தாலும், இந்த என்.ஜி.ஓவைக் காப்பாற்ற யார் வருவார்?

இந்த என்.ஜி.ஒக்களிடமிருந்து மனித இனத்தைக் "கடவுள்" தான் காப்பாற்ற வேண்டும்.

### இருளாக விடியும் வேளை?

சில குறைபாடுகள் இருந்த போதும், பொதுமக்கள் தயக்கமின்றித் தமது கருத்துக்களை வெளியிடுங் களமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் காலைத் தமிழ் நிகழ்ச்சியான "விடியும் வேளை" இருந்து வந்தது. கடந்த சில வாரங்களாக விடுதலைப் புலிகட்கு எதிரான கருத்துக்களை உடையவர்களையே நிலையத்திற்கு அழைத்து நீண்ட நேரமாக உரையாடுவதும் போதாமல் தொலைபேசி மூலம் 'தொடர்பு கொண்டு' கேள்வி கேட்கிறவர்கள் கூட மிகவும் கவனமாக முன்கூட்டியே தெரிந்தெடுக்கப்படுகிறதாகத் தோன்றுகிறது. சில கேள்விகள் அவர்கட்கு எழுதிக் கொடுக்கப் பட்டவையே என்ற எண்ணமும் எழுகிறது.

இது ஒரு புறமிருக்கத், தமிழ்-முஸ்லிம் பகைமையை மேலும் வலுப்படுத்துகிற விதமாக மிகவும் துவேஷமான எண்ணங்களை வெளிப்படுத்தவும் இந்த 'விடியும் வேளை' துஷ்பிரயோகமாகிறது.

இவ்வாறு ஒரு நல்ல நிகழ்ச்சியைச் சீரழிப்பதில் அதிகாரத்தில் உள்ள தமிழரல்லாதவர்களை விட அவர்களது அடிவருடிகளான தமிழர்கள் தமக்குள் யார் சிறந்த அடிவருடி என்ற போட்டியில் மும்முரமாக நிற்பது ஒரு காரணமாக இருக்குமோ என்பது கடந்த கால அனுபவம் எழுப்புகிற ஒரு கேள்வியாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# கிளிநொச்சியில் சந்திப்புகள் நடத்துவதால் லாபம் பெற நிற்பவர்கள் யார்?

இலங்கையின் தலைநகரம் கொழும்பிற்கு அடுத்தாக அரசியல் சந்திப்புகள் நடைபெறும் இரண்டாவது இடமாக கிளிநொச்சி நகரம் மாறியுள்ளது. அங்கு தான் புலிகள் இயக்கத்தின் அரசியல் துறை தலைமைச் செயலகம் இருக்கின்றது. புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரனையும் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனையும் ஏனைய தலைமைப் பொறுப்பாளர்களையும் உள்நாட்டுப் பிரமுகர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் வெளிநாட்டு ராஜதந்திரிகள், தூதுவர்கள் என்போர் சந்தித்து வருகின்றனர்.

பத்தொன்பது வருட யுத்தத்திற்குப் பின் இவ்வாறான சந்திப்பு புலிகள் இயக்கத்துடன் இடம் பெற்று வருவது முக்கியத்துவம் கொண்டதாகும். ஏனெனில் ஒருபுறம் தேசிய இனவிடுதலைப் போராட்டம் மறுபுறம் பேரினவாத ஒடுக்குமுறை யுத்தம். இந்நிலையில் புலிகள் இயக்கத்திடமிருந்து மிக மிக தூரத்தில் அல்லது எதிர் நிலையில் நின்றவர்கள்தான் இப்போது யுத்த நிறுத்த - சமாதான சூழலில் அவர்களது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சென்று சந்திப்புக்கள் நடாத்தி ஊடகங்களுக்குத் தம்மை விளம்பரப்படுத்தியும் கொள்கிறார்கள். இத்தகைய உள்நாட்டு வெளிநாட்டுப் பிரமுகர்களின் நோக்கங்கள் தான் உற்று நோக்கப்பட வேண்டியதாகும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் தமக்கென ஒரு இலட்சியத்தை வரையறை செய்து அதற்கான பாதையில் கடந்த இரண்டு தசாப்தங்களாகப் போராடி வந்துள்ளனர். அவை பற்றிய கணிப்பில் சரி பிழை யதார்த்த சூழலுக்கு பொருத்தம் பொருத்தமின்மை ஏற்க முடியாமை என்ற பல்வேறு நிலைப்பாடுகள் இருந்து வந்துள்ளன. இவை வரலாற்றுப் பட்டறிவால் தீர்மானிக்கப்பட வேண்டியவை. ஆனால் அப்போராட்டத்தினுள் யார் விரும்பினும் விரும்பாது விடினும் ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை அபிலாஷைகள் இருந்து வந்துள்ளமையை மறுப்பது நேர்மையான அரசியலாகாது.

ஆனால் இன்று கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளுடன் சந்திப்புக்கள் நடாத்தும் உள்நாட்டு அரசியல் தலைவர்கள் என்போர் என்ன நோக்கத்துடன் அதனைச் செய்து வருகின்றார்கள் என்பதுதான் கேள்விக்குரியதாகும். அடிப்படையில் தத்தமது பாராளுமன்ற அரசியல் இருப்புக்காகவே என்பது தான் உண்மையானதாகும். வடக்கு கிழக்கின் தமிழ் அரசியல் கட்சிகள் நான்கும், மலையகத்தின் இரண்டு அரசியல் தலைமைகளும், கொழும்பில் ஒரு கட்சியும் புலிகள் இயக்கத்துடனான சந்திப்புக்களை பயன்படுத்துவதில் முன் நிற்கின்றன. எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஏற்கனவே தாங்கள் வைத்திருக்கும் பாராளுமன்ற ஆசனங்களை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் மேலும் சிலவற்றைப் பெற்றுக் கொள்வதற்கேயாகும்.

இவர்கள் ஒவ்வொருவரின் கடந்த காலப் புலிகள் இயக்கம் பற்றிய நிலைப்பாட்டை எடுத்துப் பார்த்தால் எங்கெங்கே எவ்வாறு இருந்து வந்தார்கள் என்பதைப் புரிந்து கொள்ள இயலும். மீண்டும் ஒரு நெருக்கடி சூழல் எதிர்பட்டு இரண்டு பேரினவாதக் கட்சிகளும் யுத்த நிலைக்கு மாற்றமடைந்தால் அல்லது இந்தியத் தலையீடு ஏற்பட்டால் இத்தகையோர் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பது கேள்விக்குரியதாகும். இத்தகையோர் எவ்வாறு புலிகள் இயக்கத்தின் பெயரைத் தத்தமது பாராளுமன்றப் பதவிகளுக்கும் ஏனைய தேவைகள் மற்றும் பண வருவாய்களுக்கும் பயன்படுத்திக்கொண்டார்கள் என்பது இரகசியமல்ல. உதாரணம் வடபுலத்து ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்றப் பிரதிநிதியும் அவரோடு இணைந்த வர்த்தகப் பெரும் புள்ளிகளுமாவர். அதே போன்றே தமிழர் கூட்டமைப்பின் நான்கு கட்சிகளும் அதன் தலைமைகளுமாகும். இவர்களது அடிப்படை நோக்கும் போக்கும் சிறிதளவாவது தமிழர் சமூக அக்கறை சார்ந்ததாகவோ சாதாரண தமிழர் அபிலாஷைகளை உள்ளடக்கியதாகவோ இருப்பதாகக் காணவில்லை. ஆனால் விடுதலைப் போராட்டத்தின் ஒரு கட்டத்தில் பிற்போக்கு சந்திகள் எவ்வாறு அதனைச் சூழ்ந்து தமது நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வார்கள் என்பதற்கு மேற்படி சந்திப்புக்கள் ஒரு உதாரணமாகியுள்ளன. இது இங்குமட்டுமன்றி உலக விடுதலைப் போராட்ட அனுபவங்களில் இருந்தும் காணக்கூடியதாகும்.

அவ்வாறே வெளிநாடுகளின் இராஜதந்திரிகளும் தூதுவர்களும் சந்திப்புக்களை நடாத்தி வருவதன் உட்கிடக்கை இன்றை ஏகாதிபத்திய உலகமயமாதலின் கீழான பல்தேசிய நிறுவனங்களை வடக்கு கிழக்கில் கொண்டு வருவதற்கேயாகும். மேற்குலகயப்பானிய ராஜதந்திரிகளின் சமாதானக் கோரிக்கைக்குப் பின்னால் உள்ள நோக்கம் பொருளாதார அரசியல் ராணுவ ஆதிக்க உள் நோக்கம் கொண்டதாகும்.

இவற்றுக்கு அப்பால் ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்தின் இன வர்க்க சமூக விடுதலை பற்றியோ அவற்றுக்கான கொள்கை வேலைத்திட்டத்துடனோ விடுதலைப் புலிகளை சந்திக்கவில்லை என்பது அடிப்படைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். ஒரு காலத்தில் மிகத் தூர நின்று புலிகள் இயக்கத்தை எதிர்த்தும் நிராகரித்தும் நின்ற அதே சக்திகள்தான் இன்று சந்திப்புக்கள். அறிக்கைகள் என விளம்பரம் செய்கிறார்கள். எல்லாம் தத்தமது நிலைப்பாட்டிற்கு தகுந்தவாறு தான்.

# மூன்று அமைச்சுகளும் ஆளும் வர்க்கத்தலைமைகளும்

அண்மையில் பாராளுமண்றத்தில் வரவு செலவுத்திட்ட விவாதங்களும் வாக்கெடுப்புகளும் இடம் பெற்றன ஜனதிபதியால் ஐ.தே.முன்னணி அரசாங்கத்திடமிருந்து பறிக்கப்பட்ட மூன்று அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதம் இடம் பெற்றது இந்த விவாதத்திலும் வாக்கெடுப் பிலும் பெரும் சர்ச்சை கிளப்பி ரணில் தலைமையிலான அரசாங்கம் எதிர்த்து வாக்களிக்கப் போகிறது என்றே பேசப்பட்டது. ஆனால் அப்படி எதுவும் நடைபெற வில்லை. ஐயாவின் அரசாங்மும் அம்மாவின் எதிர்க் கட்சியும் மனப்பூர்வமாக மூன்று அமைச்சுகளின் விவாதத்தில் ஒத்துழைத்து ஒன்றாகவே வாக்களித்து சர்ச்சை பிரச்சினை கிளப்பாது விடயத்தை சமுகமாக முடித்திருக்கிறார்கள் .

இது எப்படி சாத்தியமாயிற்று? தேசிய இனப்பிரச்சினை விடயத்திலும் தொழிலாளர் பிரச்சினையிலும் வேறு அரசியல் விவகாரங்களிலும் ஒன்று படமுடியாத இரு அதிகாரமையத் தரப்புகளும் ஏன் மூன்று அமைச்சுக்கள் விவகாரத்தில் இணங்கிப் போனர்கள். இங்கே தான் அரசு -அரசாங்கம் - ஆளும் வர்க்கம் என்பனவற்றுக்கிடையிலான உறவு வெளிச்சத்திற்கு வருகிறது. பாதுகாப்பு உள்துறை ஊடகம் ஆகிய மூன்று துறை அமைச்சுகளும அடிப்படையில் அரசுயந்திரத்துடன் சம்மந்தப்பட்டவையாகும். அதாவது அரசு யந்திரத்தின் பிரதான பகுதியான முப்படைகள் பொலீஸ்படை மற்றும் பிரச்சார ஊதுகுழல்கள் போன்றவற்றுடன் சம்மந்தப்பட்ட அமைச்சுகளாகும். எந்தப் பிரிவு ஆளும் வர்க்கத்தின் அரசாங்கத்திற்கும் அவை அவசிய மான அடிப்படைகளாகும். எனவே தான் பேரினவாத பெருமுதலாளித்துவ ஆளும் வர்க்க சக்திகளான இருதரப்பும் ஒன்றாகச் சேர்ந்து பிரச்சினை கிளப்பாது வாக்களித்து தமது உயர் வர்க்க நிலைப்பாட்டைப் பாதுகாத்துக் கொண்டன. இதில் அம்மா ,ஐயா ஆகிய இரண்டு மேட்டுக்குடிப்பரம்பரை குடும்பவழிவந்த ஆட்சித் தலைமைகளும் ஒன்றாக இணைந்த காட்சியை இந்நாட்டு உழைக்கும் மக்களும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களும் வர்க்க ரீதியில் கண்டு கொண்டால் போதுமானதாகும்.




இப்படத்தில் காணப்படும் புனித சிலுவை மருத்துவமனையின் பிரதான வாசல் ராணுவ முட்கம்பி வேலியினால் மறித்து தடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இம் மருத்துவமனை யாழ்ப்பாணம் கொழும்புத்துறை கடற்கரையோரம் அமைந்திருக்கின்றது. இவ்வாறுதான் வடக்கு கிழக்கில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் முக்கிய இடங்கள் ராணுவத்தால் மறிக்கப்பட்டும் தடுக்கப்பட்டும் இருந்து வருவதற்கு ஓர் உதாரணம்.



# பாராளுமன்றப் 'பிரதிநிதிகளின்' செலவு வானைத் தொடுகிறது

இலங்கையின் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| பாராளுமன்ற உறுப்பினர் | 225 | |
| மாகாணசபை உறுப்பினர் | 380 | |
| மாநகரசபை உறுப்பினர் | 291 | |
| நகரசபை உறுப்பினர் | 372 | |
| பிரதேச சபை உறுப்பினர் | 3090 | |
| மொத்தம் | 4358 | பேர் |

| | |
|---|---|
| ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் மாதாந்தப்படி (அலவன்ஸ்) | 22,100 ரூபா |
| எரிபொருள் விருந்துபசார கொடுப்பனவு | 1,000 ரூபா |
| கையடக்க தொலைபேசிகளின் கட்டணம் | 2,000 ரூபா |
| இரண்டு தொலைபேசிகளின் மாதாந்தக் கட்டணம் சுமார் | 50,000 ரூபா |
| தினம் ஒன்றிற்கு கூட்டங்களில் சமூகமாயிருப்பதற்கு 500/- வீதம் பாராளுமன்ற கூட்டம் மாதம் எட்டு நாட்கள், | |
| பத்து உபகுழுக் கூட்டம் மாதத்திற்கு | 6,000 ரூபா |
| மொத்தம் | 81,100 ரூபா |

பாராளுமன்ற உணவகத்தில் உறுப்பினர்கள் அவரது எடுபிடிகள் உட்பட காலை உணவுக்கு ரூபா 6/- மட்டுமே.

## காலை உணவு வகைகள்

இடியப்பம், நூடில்ஸ், பாண், சிவப்பு அரிசி சோறு, மீன், கோழி, பருப்பு, உருளைக்கிழங்கு, தேங்காய்ச் சம்பல், முட்டைப்பொரியல், அவித்த முட்டை, முட்டை அரை அவியல், பண்டி இறைச்சி, சோசேஜ், மூன்று வகையான ஜாம், பட்டர், மார்மயிட், தேனீர், கோப்பி, பால் இவற்றில் எதையும் உண்ணலாம். ஆக ரூபா ஆறு மட்டுமே.

## மதிய உணவு ரூபா 15/- மட்டுமே

## மதிய உணவு வகைகள்

சம்பா, பாசுமதி, சிவப்பு பச்சை, அரிசி, மீன், மாட்டிறைச்சி, கோழி, ஐந்து வித மரக்கறி, மரக்கறி சலாட், பொரித்த மீன், சூப், பாண், பட்டர், காளான், வாழைப்பழம், அன்னாசி, பப்பாசி, புடிங், ஐஸ்கிறீம் அத்துடன் கோப்பி.

பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்களின் அளவும் நிறையும் ஏன் கூடியுள்ளது என்பதன் இரகசியம் இது தான்.

பாராளுமன்ற கூட்டத்தின் போது தினம் ஒன்றிற்கு பாராளுமன்ற சமையல் அறையில் பயன்படுத்தப்படும். உணவுகளுக்கான தொகை :-

அரசி 250 கிலோ, பாசுமதி 20 கிலோ, கட்டாபாறை மீன் 50 கிலோ, பாரை மீன் 200 கிலோ, இறால் 20 கிலோ, கோழி 150 கிலோ, ஆட்டிறைச்சி 50 கிலோ, பாண் 110 இறாத்தல், தவிட்டு பாண் 10 இறாத்தல், மரக்கறி வகை ரூபா13,500 பெறுமதி, பழவகை ரூபா 21,200 பெறுமதி, சோசேஜ் 3 கிலோ, பன்றி இறைச்சி 2 கிலோ, சீலா மீன் 25 கிலோ தினம் ஒன்றிற்கு இறைச்சிக்கும், மீனுக்குமாக சுமார் ஒரு இலட்சம் ரூபா செலவிடப்படுகிறது. பிறந்த தினக் கொண்டாட்டங்கள் வேறு கொண்டாட்டங்களுக்கான செலவையும் பாராளுமன்றமே பொறுப்பேற்கிறது. ஒரு அமைச்சரின் ஊழியர்கள் - ஆறு (6) பேர் பிரத்தியேக செயலாளர். பாராளுமன்றுக்கான செயலாளர் தொடர்புகள் அதிகாரி ஊடாக உதவிச் செயலாளர் ஒரு இலிகிதர் இரு சாரதி இவர்கள் கொடுப்பனவு ரூபா 10,000 க்கு மேல்.

பாராளுமன்றத்திற்கான மாதாந்த மின் கட்டணம் ரூபா 30 இலட்சம் மாதாந்த தொலைபேசிக் கட்டணம் ரூபா 60 இலட்சம் கூட்டத் தொடரின் போது தினம் ஒன்றிற்கான அன்றாடச் செலவு ரூபா 16 இலட்சம்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பெறும் மாதாந்த படியின் அரைவாசியையே மாகாண சபை உறுப்பினர் பெறுகிறார். முதல் அமைச்சர் மந்திரிமார், மாகாண சபை உறுப்பினரின் கொடுப்பனவுகள் சம்பந்தப்பட்ட மாகாண சபை நிதியலிருந்தோ பெறப்படுகிறது.

## பாராளுமன்ற உறுப்பினராகுவதற்கு இருக்க வேண்டிய தகுதிகள்

இன்றைய பாராளுமன்ற அரசியலில் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக வருவதற்கு கீழ்வரும் அம்சங்கள் அடிப்படையானவைகளாகும். இவற்றை வைத்தே சகல பாராளுமன்ற ஆசன ஆதிக்கம் பெற்ற தமிழ் சிங்கள முஸ்லீம் மலையக கட்சிகள் தமது அபேட்சகர்களை நியமித்துக் கொள்ளும்.

- ஒன்றுக்கு மேற்பட்ட வியாபாரம் வர்த்தகம் செய்பவராகவும் பண பலம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். மேலதிகமாக பெயரளவில் ஒரு சட்டத்தரணியாக இருப்பது அல்லது அதற்குச் சமமான பட்டம் உடையவராக இருப்பின் விரும்பத்தக்கது.
- அத்தகைய நபர் கட்டாயமாக நிலவுடமை வழிவந்த உயர் சாதியக் குடும்பங்களில் இருந்து வந்த அல்லது அடுத்த நிலையில் உள்ள உயர் சாதியினராக இருத்தல் அவசியமானதாகும்.
- சந்தர்ப்ப சூழலுக்கு ஏற்ப முன்னுக்குப் பின் மாற்றிப் பேசக் கூடியவராகவும் மக்களை ஏமாற்றக் கூடிய அறிக்கைகள் பேச்சுக்கள் நிகழ்த்தக் கூடியவராகவும் தேவை ஏற்படும் போது அதிரடிக் கருத்துக்கள் கூறக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். அதற்குரிய ஆலோசகர்கள் விற்பனர்களை வைத்து கண்ணும் கருத்துமாகக் கருமமாற்றக் கூடியவராக இருத்தல் அவசியம்.
- தேர்தல்கால வாக்குறுதிகளையும் வாக்களித்த மக்களையும் மறந்து விட்டு தமது உறவினர் சுற்றம் என்போருக்கும் வசதிபடைத்த உயர்வர்க்க உயர் சாதியப் பெருங் குடியினரின் தேவைகள் விருப்பங்களை நிறை வேற்றுவதில் திறமையும் வல்லமையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- அதேவேளை அடுத்த தேர்தலின் போது மக்கள் வாக்களிக்கக் கூடியதான சில ஒட்டுப் பூச்சு வேலைகளை மிக லாவகமாகச் செய்து ஏமாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- இவை அனைத்துடனும் நடந்த தேர்தலுக்கு செலவு செய்த பணத்தை வட்டிகுட்டியுடன் எடுக்கும் வல்லமை பொருந்தியவராக மட்டுமன்றி அடுத்த தேர்தலுக்குரிய செலவுக்குரிய பணம் சேர்த்து இருப்பில் வைத்திருப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

பி:கு: மக்களுக்கு சேவை செய்தல், சமூக அக்கறை செலுத்துதல், சமூக நீதிக்காகப் பாடுபடல், சுயநலமற்ற வாழ்க்கை முறை, போன்ற எவையும் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கான தகுதிக்கு தேவையற்றவைகளாகும். எக்காரணம் கொண்டு அவை கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# சந்திரசேகரன் கனவு காண்கிறார்!

- ம. அழகேசன் -

எதிர்வரும் தேர்தலில் வடக்கு கிழக்கு மலையகம் கொழும்பு தமிழ் கட்சிகள் ஓரணியில் இணைந்து போட்டியிட்டால் 40 பாராளுமன்ற ஆசனங்களை வென்றெடுக்க முடியும். அப்படி 40 ஆசனங்களை தமிழ்க்கட்சிகள் பெறுகின்றபோது அரசாங்கத்தை தமிழ்க்கட்சிகள் பெறுகின்ற போது அரசாங்கத்தை தீர்மானிக்கும் சக்தியாக தமிழ்கட்சிகள் மாறும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் சமூக அபிவிருத்தி அமைச்சருமான பெ. சந்திரசேகரம் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி அ.விநாயக மூர்த்தியின் 70வது பிறந்த தின விழாவில் சிறப்பு சக்தியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி விழாவில் கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனும் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டனர்.

மலையகத் தமிழ் மக்களின் (இலங்கை வாழ் இந்தியாவம்சாவளி மக்களின்) வாக்குரிமையைப் பறித்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் காலஞ்சென்ற ஜீ.ஜீ.பொன்னம்பலம் துணைபோனார் என்பது மீண்டும் மீண்டும் சொல்லித் தெரிய வேண்டிய விடயமல்ல. அவரது மகன் குமார் பொன்னம்பலம் மலையகத்தமிழ் மக்களின் பிரஜா உரிமையைப் பறிப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சிக்கு துணைபோனார் என்பதை தொடர்ந்து மறுத்து வந்தார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரசின் தற்போதைய தலைவர் விநாயக மூர்த்தியும், பிரதித்தலைவர் குமர குருபரனும் ஜீ.ஜீ.பொன்னம்பலம் பிரஜா உரிமை பறிப்பதற்கு துணைபோக வில்லை என்றே தொடர்ந்து கூறிவருகின்றனர்.

ஆனால் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் பேரனான கஜேந்திரகுமார் அவரது பாட்டனார் பிழை விட்டிருப்பார். அதனை மறப்போம் என்று கூறியுள்ளார். சில மாதங்களுக்கு முன்பு பிரஜா உரிமை திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது உரையாற்றிய அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

பிரஜா உரிமை பறிப்பதற்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைமை துணைபோகவில்லை என்று உண்மைக்குப் புறம்பாக இன்றும் அடித்துக் கூறும் விநாயகமூர்த்தியின் 70வது பிறந்த நாள் விழாவில் எவ்வித விமர்சனமும் இன்றி அமைச்சர் சந்திரசேகரனும். மனோ கணேசன் எம்.பியும் கலந்து கொண்டுள்ளனர்.

அகில இலங்கை தமிழ் காங்கிரசின் ஜீ.ஜீ. செய்த தவறுக்கு வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் பொறுப்பல்ல என்றாலும் ஜீ.ஜீயின் அத்தவறுக்கு இன்றும் சப்பைக் கட்டும் தமிழ்த் தலைவர்களை வாழ்த்த வேண்டுமா என்று மலையகத்தமிழ் மக்கள் கேட்காமல் இருக்க மாட்டார்கள்.

கலந்து கொண்டு வாழ்த்தியது தனிப்பட்ட பிரச்சினை என்று கூறி தப்பி விட்டாலும் வடக்கு கிழக்கு மலையக தமிழ் கட்சிகள் அனைத்தும் சேர்ந்து போட்டியிட்டு 40 ஆசனங்களை பெறுவது பற்றி சந்திரசேகசரன் பேசியது தனிப்பட்ட கருத்தாக முடியாது.

சேர்ந்து போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்றத்தில் ஒரு போராட்ட உறுப்பினராக இருக்க சந்திரசேகரன் தயாரா? இனி எந்தவொரு அரசாங்கத்திலும் அவர் அமைச்சராக மாட்டரா?.

அப்படியாயின் வடக்கு கிழக்கு தமிழ் மக்களினதும் மலையகத்தமிழ் மக்களினதும் உரிமைகளை வென்றெடுக்க முன்வைக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் என்ன?

மலையகத்தமிழ் கட்சிகள் ஐக்கிய தேசிய கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் பிடியிலிருந்து விடுபட்டு செயற்படத்தயாரா? பாராளுமன்ற தேர்தல் ரீதியாக அக்கட்சிகளின் தயவின்றி கூடிய ஆசனங்களை தேர்தல் முறையும், தொகுதிமுறையும் இடமளிக்குமா?

வடக்கு கிழக்கு கட்சிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு வடக்கு கிழக்கு தமிழ் தேசிய வாதத்தின் விரிவாகத்திற்கு துணை போவதாகவன்றி சமமான அந்தஸ்துடன் பொதுவேலைத்திட்டத்தின் கீழ் மலையகத் தமிழ் கட்சிகள் இயங்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுமா?

இவ்வாறு பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் வடக்கு கிழக்கு மலையக கட்சிகள் ஓரணியாக இயங்குவது சாத்தியமில்லை என்று தெரிந்து கொண்டும் சேர்ந்து போட்டியிடுவது, 40 ஆசனங்களை பெறுவது, அரசாங்கத்தினை தீர்மானிப்பது என்றெல்லாம் பேசுவது அரசியல் ஸ்டண்ட்டாக வன்றி வேறென்னவாக இருக்க முடியும்.

வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் போராட்டத்தை பற்றி பேசி பேசி பாராளுமன்றத்தில் இருப்பை உறுதி செய்து கொள்வது அரசியலில் யோக்கியமாக இருக்க முடியாது தானே.

பேரினவாதத்திற்கு எதிராக சமாதானத்தினையும், அரசியல் தீர்வையும் வலியுறுத்தி வடக்கு கிழக்கு தமிழ் மக்கள், மலையகத்தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள், சிங்கள மக்கள் என்போரை அணிதிரட்டக் கூடிய வழிமுறைகள் பற்றி யோசிப்பதே பிரயோசமானது. உடனடியாக தேர்தலில் வெற்றி பெறுவதற்கு உதவா விட்டாலும் அதுவே பேரினவாதத்தை தோற்கடிப்பதற்கான அடிப்படையாக அமைய முடியும்.

# பதவிகளுக்காக உளறிவரும் மலையகத் தலைமைகள்

இரண்டு பெரிய கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கம் அமைத்தால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரபாகரனுடன் இணைந்து இன்னொரு அரசாங்கத்தை அமைக்க வேண்டிவரும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் கூறியுள்ளார்.

இப்பேச்சு இரண்டு பெரிய கட்சிகளை எச்சரிக்கும் பேச்சா அல்லது விளையாட்டுத்தனமான பேச்சா?

இப்பேச்சை சிங்களப் பத்திரிகைகள் பேரினவாதத்தை மேலும் தூண்டுவதற்காகப் பயன்படுத்தியுள்ளன. அத்துடன் வடக்கு கிழக்கில் மலையகத் தமிழ் மக்களை குடியேற்றுவதற்கு புலிகள், இயக்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் துணைபுரிவதாகவும் சிங்களப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின.

இலங்கை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கான ஆதரவு வழங்குவதுடன் பேரினவாதத்தை எதிர்ப்பது சமாதான வழிகளில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது என்பவற்றில் மலையகத் தலைவர்கள் இதய சுத்தியுடன் முன்நிற்க வேண்டும்.

இரண்டு பேரினவாத கட்சிகளிடமும் பதவிகளையும், அந்தஸ்துகளையும் பெற்றுக் கொள்வதற்காக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் பற்றி கதைப்பதும் புலிகள் இயக்கத்துடன் இணையப் போவதாகக் கூறுவதும் அப்போராட்டத்தை கொச்சைப் படுத்துவதாகும்.

இரண்டு பேரினவாத கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்தால் அரசாங்கத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போன்ற கட்சிகளின் ஆதரவு தேவைப்படாது. தேவைப்படாவிடின் அரசாங்கம் கட்சியுடன் பேரம் பேசிப் பதவிகளையும், அந்தஸ்துகளையும் பெற்றுக் கொள்ள முடியாது.

இந்தப் பயத்தில் இருந்து கொண்டு பிரபாகரனுடன் இணைந்து இன்னொரு அரசாங்கத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அமைக்க வேண்டிவரும் என்று பிரகடனம் செய்வது எவ்வளவு பொறுப்பற்றதும் முட்டாள்தனமானதுமாகும்.

ஆறுமுகம் தொண்டமானின் அந்தப் பேச்சை தமிழ் 'பத்திரிகைகள் வெளியிட்டு அவரை தமிழர் விடுதலைப் போராட்ட வீரராகக் காட்டுகின்றனர். சிங்களப் பத்திரிகைகள் அவரை தமிழ் இனவாதியாகவும் புலி இனவாதியாகவும் காட்டுகின்றன.

உண்மை என்ன? பாராளுமன்ற பதவிகளிலேயே ஆறுமுகம் தொண்டமானுக்கு அக்கறை என்பது புரியக் கூடியவர்களுக்கு புரியும்.

# ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நியாயம் தேடும் மனோ கணேசன்

50 வருடங்களாக நடைபெற்ற தமிழ் மக்களின் அஹிம்சை போராட்டத்தினால் சாதிக்க முடியாததை, 20 வருட ஆயுதப் போராட்டத்தினால் சாதிக்க முடியாததை ஐக்கிய தேசிய முன்னணியின் கொழும்பு மாவட்ட எம்.பியாக இருந்து கொண்டு வாய்ப்பு கிடைத்தால் அமைச்சராக வந்து சாதிக்கப் போவது போன்று மேல் மாகாண தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக் கொடுக்கப் போவதாக மனோகணேசன் கருத்துக்களை வெளிப்படுத்தி வருகிறார். இவர் இவ்வாறு கூறுவது ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தின் கீழ் உரிமைகளை பெறமுடியும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி பேரினவாத கட்சி அல்ல என்றும் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கை ஊட்டுவதாகவே அமைகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி, பொது ஜன ஐக்கிய முன்னணி போன்றவை இந்த நாட்டில் கட்டியமைத்திருக்கின்ற முறைமையில் அடக்கப்பட்ட தேசிய இனங்கள் விமோசனம் பெறமுடியாது என்ற உண்மைக்கு மாறாகத் தனிமனிதன் சுறுசுறுப்பாகவும் திறமையாகவும் இருந்தால் இந்த முறைமையின் கீழும் உரிமைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்பதையே மனோகணேசன் போன்றவர்கள் நிரூபிக்க முயற்சிக்கின்றனர்.

தமிழ் மக்கள் மத்தியில் ஜீ.ஜீ. பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.பி.செல்வநாயகமும், அ.அமிர்தலிங்கம் போன்ற படித்தவர்கள் பாராளுமன்றத்தில் இருந்தனர். ஜீ.ஜீ. பொன்னம்பலம், குமார சூரியர், திருச்செல்வம், தேவநாயகம், இராஜதுரை, தொண்டமான் போன்றோர் அமைச்சர்களாக இருந்தனர். இன்று மகேஸ்வரன், ஆறுமுகம் தொண்டமான், பெ.சந்திரசேகரம் போன்றோர் அமைச்சர்களாக இருக்கின்றனர்.

அடக்கப்படும் தேசிய இனம் என்ற வகையில் தமிழ் மக்களுக்கு கிடைப்பதென்ன? அடக்கப்படும் தேசிய இனங்களின் அக்கறையை கணக்கெடுக்காத அபிவிருத்தி திட்டங்கள் நடவடிக்கைகளால் தமிழ் மக்களுக்கு விமோசனம், கிடைக்காது அவ்வாறான சூழ்நிலையில் மனோ கணேசன் போன்ற தனிமனிதர்கள் எப்படி விமோசனத்தை பெற்றுக் கொடுக்க முடியும். அதாவது ஐக்கிய தேசிய முன்னணி என்ற முதலாளித்துவ பேரினவாத கட்டமைப்பிற்குள் மக்களின் உரிமைகள் உறுதி செய்யப்பட முடியுமா? ஐக்கிய தேசிய முன்னணியின் வியூகத்தை ஏற்றுக் கொள்ளும் அதே வேளை தமிழ் உணர்வு தமிழ்மக்களின் உரிமைகள், ஈழத்தமிழர் போராட்டம் பற்றியெல்லாம் மகேஸ்வரனும் பேசுகிறார். மனோகணேசனும் பேசுகிறார். தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கம் பற்றி சிலாகித்தும் பேசுகிறார்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ம.ம.மு. மேல்மாகாண மக்கள் முன்னணி என்பன பாராளுமன்றத்திற்குள் பேரினவாதத்திற்கு எதிராக ஒருமைப்பாட்டுடன் செயற்படலாம் என்றும் மனோ கணேசன் கூறுகிறார். தமிழ் தேசிய கூட்டமைப்பு கட்சிகளினதும் விடுதலை புலிகள் இயக்கத்தின் ஆசிர்வாதத்துடன் கொழும்பில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வது தான் அவரின் பிரயத்தனமாகும்.

அதற்கு குமரகுருபரன் நன்றாக உதவி செய்கிறார். கொழும்பில் மனோ கணேசனுடன் இணைந்து வேலை செய்வதற்கு குமரகுருபரனுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அங்கீகாரத்தையும் அனுமதியையும் கொடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார். அகில இலங்கை தமிழ் காங்கிரசின் வர்க்க நிலைப்பாடு பழமைவாத அடிப்படை என்பர். ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து அரசியல் நடத்துவதற்கு பெரிதும் இடமளிக்கும். அதனால் அதன் பிரதித்தலைவராக இருக்கும். குமரகுருபரனுக்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அரசியல் வேலைகளை முன்னெடுக்கும் மனோ கணேசனுடன் இணைந்து செயற்படுவதற்கு எவ்வித தடையும் இருக்க முடியாது.

ஆனால் அதற்கு புலிகள் இயக்கம் அனுமதியையும், அங்கீகாரத்தையும் வழங்கியிருப்பதாக கூறுவது எப்படி பொருந்தும் என்பது தான் விளங்காமல் இருக்கிறது. பேரினவாத ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து தமிழர்கள் அரசியல் நடத்துவதை சுயநிர்ணய உரிமைக்காக போராடும் தமிழ் மக்கள் அங்கீகரிக்கும் நிலையில் இருக்க மாட்டார்கள்.

இருந்தும் பேரினவாதிகளுடன் செய்ய வேண்டிய கொடுக்கல் வாங்கல்கள் எல்லாவற்றையும் செய்து கொண்டு அவற்றை தமிழ் மக்களின் போராட்டத்தின் பெயரால் நியாயப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப் படுவதை சாதாரண தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார். மனோ கணேசன் குமரகுருபரன் ஆகிய இருவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்து இருவரும் பாராளுமன்ற உறுப்பினர்களாகிக் கொள்வதே இலக்காகும். எதன் பெயரால் என்றால் தமிழர் ஒற்றுமையின் பெயரால் தமிழர் போராட்டத்தின் பெயரால் காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும் அல்லவா?

# மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்

கடந்த டிசம்பர் மாதம் 10ம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்திலும் கூட்டத்திலும் புதிய ஜனநாயக கட்சியின் மலையகப் பிரதேச செயலாளர் தோழர் எஸ்.பன்னீர்ச் செல்வத்துடன் கட்சியின் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தலவாக்கொல்லையில் பெரும் நிலப் பகுதி தண்ணீரில் மூழ்கடிக்கப் போகும் மேல் கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தை முற்றாக கைவிடும்படி தோழர் பன்னீர்ச்செல்வம் வலியுறுத்திப் பேசினர். அங்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அவர் மேலும் தெரிவித்தாவது ஓய்வு பெற்ற தொழிலாளர்களையும் அவர்களின் குடும்பத்தினரையும் தோட்டங்களில் தொழில் செய்யாதவர்களையும் தோட்டங்களில் இருந்து வெளியேற்றும் முயற்சிகளை அரசாங்கம் கைவிட வேண்டும்.

தோட்டத்தொழிலாளர்களுக்கு எவ்வித வசதியுமில்லாத மாடி வீட்டுத்திட்டங்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏற்படுத்திக் கொடுக்காமல், ஆகக்குறைந்தது 20 பேர்ச் நிலத்துடன் வீடுகளை கட்டிக் கொடுக்க வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு முறையான சம்பள உயர்வை உறுதி செய்யும் திட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மலையக சமூக அமைப்புகளின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த மேற்படி மனித உரிமைகள் தின நிகழ்வில் பல நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

பிரதான தொழிற் சங்கங்கள் மௌனமாக இருந்தாலும் மக்கள் தங்களது உரிமைகளை வென்றெடுக்க போராட்டங்களில் கலந்து கொள்வதற்கு பின் நிற்க மாட்டார்கள் என்பது இந்நிகழ்வின் மூலம் மேலும் வலியுறுத்தப் பட்டுள்ளது.

# பிரசாவுரிமை விண்ணப்பத்தில் இழுத்தடிப்பு

2003ம் ஆண்டு நவம்பர் 11ம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் இந்திய கடவுச்சீட்டுப் பெற்றவர்களுக்கு இலங்கைப் பிரசாவுரிமை வழங்குவது உறுதி செய்யப்பட்டது. ஆனால் அதனை நடைமுறைப் படுத்துவதில் இழுத்தடிப்புகள் தாமதங்கள் செய்யப்பட்டு வருகின்றன. உயரதிகாரிகள் முதல் கீழ் நிலை ஊழியர்கள் வரை ஏனோதானோ என்ற நிலையில் மலையக மக்கள் தானே என்ற கண்ணோட்டத்திலுமே கருமங் கள் ஆமை வேகத்தில் செய்யப்படு கின்றது. இது பற்றிக் கேட்டால் ஊழியர் பற்றாக்குறை என்று கூறப்படுகின்றது. அதே வேளை பிரசாவுரிமை விண்ணப்பங்களை விநியோகிப்பதில் தொழிற்சங்க அரசியல் போட்டிகளும் செல்வாக்குகளும் இருந்து வருகின்றன. இவ்வளவு காலத்திற்குப் பின் மலையகத் தொழிலாளர்களின் பிரசாவுரிமைப் பிரச்சினைக்கு தீர்வு எனச் சட்டம் வந்த போதிலும் நடைமுறையில் அது எட்டப்பட முடியாத தடைகள் தாமதங்களாகவே இருந்து வருகின்றன. இவற்றுக்கு உரிய உடனடி மாற்று நடவடிக்கை அவசியமானதாகும்.

மலையகத் தொழிலாளர்கள் நாடற்றவர்கள் என்ற நீண்டகால அடையாளத்துடனேயே வாழ்ந்து வந்தனர். அவர்களை அந்நிலைக்கு உள்ளாக்கிய ஐக்கிய தேசியக் கட்சிதான் 55வருடங்களுக்குப் பின் பிரசாவுரிமையை வழங்கும் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்து தனது பழைய பழியைத் துடைத்துக் கொண்டது. அதற்கு சகல கட்சிகளும் ஆதரவு தெரிவித்துக் கொண்டன. அங்கேயும் தேர்தல் உள்நோக்கம் இருப்பினும் பிரசாவுரிமை கிடைத்தது. அத்தகைய உரிமையை அம்மக்களுக்கு உரியவாறு சென்றடைய ஏற்ற வழிவகைகள் செய்யப்படுவது அவசியம்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

පුදීය පූමි **புதிய பூமி** Puthiya Poomi

சுற்று 11 ஜனவரி 2004 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 65

எஸ்.47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11. இலங்கை. தொ.பே.:2435117, 2335844 பாக்ஸ்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

# அரசியல் சர்ச்சைகளுக்கு பொதுத்தேர்தல் தீர்வாகுமா?

1978 ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசு யாப்பின்படி ஜனாதிபதி ஒருவரின் ஆட்சிக்காலம் ஆறு ஆண்டுகளாகும். ஜனாதிபதியாக தேர்தல் மூலம் தெரிவு செய்யபட்டவரின் பதவிக்காலம் ஜனாதிபதி யாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட நாளிலிருந்தே தொடங்கும். அதன்படி தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்காவின் ஆட்சிக் காலம் 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துடன் முடிவடைகிறது.

அரசியல் யாப்பின்படி ஒருவர் இரண்டு தடவைகள் மட்டுமே ஜனாதிபதி யாக பதவி வகிக்க முடியும்.

ஜனாதிபதி யாக தெரிவு செய்யப்பட்ட ஒருவர் அவர் தெரிவு செய்யப்பட்ட தாகப் பிரகடனப்படுத்தி ஒரு மாத காலத்திற்குள் ஜனாதிபதியாக சத்தியப்பிரமானம் செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு ஒரு மாதகாலத்திற்குள் பதவிப் பிரமானம் செய்து கொள்ளாவிடின் அவர் பதவி இழந்துவிடுவார்.

சந்திரிகா 1994ஆம் ஆண்டு முதன்முறையாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். அவரது முதல் பதவிக்காலம் 2000ஆம் ஆண்டே முடிவடைய இருந்த போது 1999 ஆம் ஆண்டு அவர் ஜனாதிபதி தேர்தலை நடத்தி வெற்றிபெற்றார். அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு மாதகாலத்திற்குள் ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்தும் கொண்டார். அதன்படி அவரின் பதவிக்காலம் 2005 நவம்பர் மாதத்துடன் முடிவடைகிறது. அதற்குப் பிறகு அவர் பதவியில் இருக்க முடியாது. அவரின் பதவிக்காலம் முடிவடைதற்கு குறைந்தது ஒரு மாதகாலத்திற்கு முன்பு. கூடியது இரண்டு மாதகாலத்திற்கு முன்பு ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இது இவ்வாறிருக்கும் போது அவரின் பதவிக்காலம் 2006 நவம்பர் மாதத்திலே முடிவடைவதாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளதன் நோக்கம் என்ன? அதனைப் பற்றி ஜனாதிபதி செயலகம் எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை. பிரதமரும் அது பற்றி அவரது அதிருப்தியை தெரிவிக்கவில்லை. உடனடியாக பாரளுமன்றப் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டு ஐ.தே.கட்சி பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றாலும் (மூன்றில் இரண்டு பலம் பெறமுடியாது) தற்போதைய ஜனாதிபதியே தொடர்ந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருப்பார் என்பதால் ஐ.தே.கட்சியின் ஆட்சி தொடர்ந்து சர்ச்சைக்குள்ளானதாகவே இருக்கும். இதனால் பாராளுமன்ற தேர்தல் தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சிக்காலம் 2005 நவம்பர் மாதத்திலன்றி 2006 நவம்பர் மாதமே முடிவடைவதாக பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவின் மாமனாருக்கு சொந்தமான வாராந்த ஆங்கிலப் பத்திரிகை செய்தி வெளியிட்டு இருந்தது. தற்போதைய ஜனாதிபதி அவரது முதலாவது பதவிக்காலம் முடிவடைவதற்குள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வென்றவராவார். அவரது முதலாவது பதவிக்காலம் முடிவடைந்த பிறகு அவர் சத்தியப்பிரமானம் செய்திருக்க வேண்டும். அதன்படி அவர் இரண்டாவது பதவிக்காலத்திற்கான சத்தியப்பிரமாணத்தை சரியான முறையில் இரண்டாவது தடவை செய்து கொண்டுள்ளார். அதனால் அவரது பதவிக்காலம் 2006 நவம்பரிலேயே முடிவடைகிறது என்று அச்செய்தி தெரிவிக்கிறது.

பொதுவாக அவரின் பதவிக்காலம் 2005 நவம்பரில் முடிவடைவதாக கூறப்பட்டாலும் சட்டப்படி அவர் 2006 நவம்பர் வரை பதவி வகிக்க முடியும். அதுபற்றி சட்டநிபுணர்கள் ஆராய்கின்றனர் என்றும் அச்செய்தி கூறுகிறது.

ஐ.தே.மு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை பெற்றதால் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்ஹ பிரதமரானார் அவரின் ஐ.தே.மு உறுப்பினர்கள் அமைச்சரானார்கள். ஜனாதிபதி. ஐ.தே.மு உறுப்பினர்களிடமிருந்த பாதுகாப்பு உள்துறை ஊடகம் ஆகிய அமைச்சுகளை மீளப்பெற்றுக் கொண்டதை அடுத்து ஐ.தே.மு ஆட்சி பலவீனமாக்கப்பட்டுள்ளது. அரசியல் பரப்பிப் ஸ்திரமற்ற நிலை ஏற்பட்டு பல சர்ச்சைகள் தோன்றியுள்ளன.

இதனால் ஐ.தே.மு மீண்டும் மக்கள் ஆணையை பெறுவதற்காக பொதுத் தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்று ஐ.தே.கட்சியின் சில தலைவர்கள் அபிப்பிராயம் தெரிவித்து வருகின்றனர். பிரதமரோ வேறு முக்கிய அமைச்சர்களோ பொதுத் தேர்தலை சந்திக்க தயார் என்று கூறினாலும் பொதுத் தேர்தலை நடத்தும்படி வற்புறுத்துவதாக இல்லை. ஐ.தே.மு அரசாங்கத்திடமிருந்து அமைச்சரவை அதிகாரங்களை மீளப்பெற்றுக்கொள்ள ஜனாதிபதியின் நடவடிக்கைகளை வெறும் வார்த்தைகளால் கண்டிப்பதுடன் ஐ.தே.க தலைமை அதன் எதிர்ப்பை வரையறுத்துக் கொள்கிறது. மக்களை அணிதிரட்டி அதன் எதிர்ப்பை காட்டுவதாக இல்லை.

மாறாக ஜனாதிபதியுடன் எப்படி அரசியல் சக வாழ்வு நடத்தலாம் என்பதிலேயே பிரதமர் கவனஞ் செலுத்தி வருவதை அவதானிக்க முடிகிறது. அதற்காக பிரதமரும் ஜனாதிபதியும் சேர்ந்து அமைத்த மனோ- மலிக் குழுவினரின் சிபாரிசுகளை எதிர்பார்த்து கொண்டிருக்கிறார்.

பொதுத் தேர்தல் நடத்தப்படுவதால் தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு ஏற்படப்போவதில்லை. இதனை மக்களுக்கு அறிவிக்கும் இன்னொரு நடவடிக்கையாகவே ஜனாதிபதியின் பதவிக்காலம் 2006 நவம்பரிலேயே முடிவடைவதாக வெளிவந்த செய்தியாக இருக்கலாம்.

இதிலேதான் இரண்டு கட்சிகளாக பிரிந்திருந்தபோதும் பெரு முதலாளித்துவ, ஏகாதிபத்திய சார்பு பேரினவாத அடிப்படையைக் கொண்ட ஆளும் வர்க்கம் ஆட்சி செய்வதில் ஒருமித்த போக்குடன் செயற்படுவதை அவதானிக்கமுடிகிறது அவை ஒருமைப்பாட்டுடன் செயற்பட்டால் தான் அவற்றின் ஆளும் வர்க்க நலனை பாதுகாக்க முடியும்.

1978 ஆம் ஆண்டு யாப்பின் படி ஜனாதிபதி ஒரு கட்சியைச் சார்ந்தவராகவும் பாராளுமன்ற பெரும்பான்மை இன்னெரு கட்சியிடமும் இருக்கும்போது அதிகாரப் போட்டிகளுக்கும் சர்ச்சைகளுக்குப் குறைவிருக்காது.

தேர்தல்களை நடத்தி அவற்றுக்கு தீர்வு காணமுடியாது. மாறாக 1978 அரசியலமைப்பையே மாற்ற வேண்டும் அதனை மாற்றியமைக்க இரண்டு ஆளும் வர்க்க கட்சிகளும் தயாரில்லை என்பதையே நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன..

- ஆசிரியர் குழு -

# பாராளுமன்றத் தமிழ்க் கட்சிகள் ஒரே குரலில் பேசுவது சாத்தியமா?

நாட்டின் அரசியலமைப்பு நெருக்கடி காரணமாக இரண்டு ஆளும் வர்க்க தரப்பினரிடையே அதிகாரப் போட்டியும் பலப் பரீட்சையும் இடம் பெற்று வருகின்றது. இதன் காரணமாக விரைவில் மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் நடைபெறக் கூடிய சாத்தியங்கள் வலுவடைந்து வருகின்றன. முதலாளித்துவப் பாராளுமன்றத்திற்கான இப்பொதுத் தேர்தல் நடைபெறுவதால் தேசிய இனப்பிரச்சினை உட்பட நாடு எதிர்நோக்கி நிற்கும் எந்தவொரு பிரச்சினையும் தீர்க்கப்படப் போவதில்லை என்பது அடிப்படை உண்மையாகும். ஆனால் பாராளுமன்றக் கட்சிகள் யாவும் வரிந்து கட்டிக் கொண்டு தேர்தலுக்குத் தயாராகி வருகின்றன.

அந்த வகையில் தமிழ்க் கட்சிகள் என்ற பட்டை நாமத்துடன் தமிழ் மக்கள் மத்தியில் வாக்கு வேட்டை நடாத்தி வந்த கட்சிகளும் வழமைபோன்று எதிர்வரும் தேர்தலை நோக்கி தமது செயற்பாட்டைத் தொடங்கியுள்ளன. தத்தமது பாராளுமன்றப் பதவிகளைத் தக்கவைத்துக் கொள்வதைக் குறிக்கோளாகக் கொண்டே தேர்தல் தயாரிப்பு எதிர் கொள்ளப்படுகின்றது. எனவே ஒவ்வோரு பொதுத் தேர்தல் வரும் வேளைகளில் தமிழ்க் கட்சிகள் ஏதாவது ஒரு புதிய முழக்கத்தை முன்வைத்து தமிழ் மக்களை இன மொழி பிரதேச உணர்ச்சிகளுக்கு உள்ளாக்கி வாக்குகளைக் குவித்துக் கொள்வது வரலாற்று வழமையாகும். 1947ல் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தமிழர் பழமைவாத மேட்டுக்குடிகளின் பிரதிநிதியாகத் தேர்தலில் நின்று தமிழ் உணர்ச்சியை பொங்கச் செய்த போது பெரும் பான்மையான உழைக்கும் தமிழ் மக்கள் அதற்கு எடுபட்டதுடன் தமது வர்க்க நிலை மறந்து அப்புக்காத்துப் பிரக்கிராசி அரசியல் தான் தமக்கு மீட்சி தரும் என நம்பி நின்றனர். தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா. என்ற ஆதிக்கப் பதம் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தால் எடுத்துரைக்கப்பட்ட போது தமிழர்களின் பலம் பொன்னம்பலம் என்றே அப்பாவித்தனமாகத் தமிழ் மக்கள் நம்பினர். அந்த நம்பிக்கை இடைக் காலத்தில் தளர்ந்த போதிலும் கடந்த தேர்தலில் அது புதுப்பிக்கப்பட்டமை தமிழர் அரசியலின் தொடர்ச்சி எத்தகையது என்பதை எடுத்துக் காட்டியது. தாத்தாவின் ஆண்டபம்பரைக்கட்சி பேரன் காலத்தில் புதுப் பொலிவு பெற்று தமிழருக்கு மீட்சிதரும் கட்சியாகியது தற் செயலானது அல்ல. நிற்க.

அதன் பின் தமிழரசுக் கட்சி சமஷ்டியை முன்வைப்பதாகக் கூறி வடக்கு கிழக்கின் ஆகக் கூடுதலான பாராளுமன்ற ஆசனங்களைக் கோரிய போது தமிழரெல்லாம் 'தந்தை செல்வாவின்' தலைமையில் அணிதிரள வேண்டும் என்ற வேண்டு கோளையே விடுத்தது. அங்கும் ஆங்கிலத்தில் தொழில் புரிந்த சட்டவாதிகள் தான் ஆதிக்கம் பெற்றிருந்தனர். அவர்கள் தமிழ் மேட்டுக்குடியினரின் பெரும் பகுதியினரையும் மத்தியதரவர்க்கத்தினரையும் தமிழின் பெயரால் பிரதிநிதித்துவம் செய்தனரே தவிர சாதாரண தமிழ் மக்களை அல்ல. ஆனால் எல்லாத் தமிழரும் தமக்குக் கீழ் மூவர்ணக் கொடியினதும் வீட்டுச் சின்னத்துடனும் ஐக்கியப்பட்டு ஒரே அணியில் திரளுமாறே வேண்டப் பட்டனர். தமிழ்மக்களும் தமிழர் தன்மானத்தின் பேரால் உணர்ச்சி பூர்வமாக வாக்களிப்பதில் அதிக ஒற்றுமையைக் காட்டினர். அதனைச சிங்களப் பேரினவாதத்திற்கு எதிரான செயல் எனவும் நம்பித் திருப்திகண்டனர்.

இவர்களது பாராளுமன்ற ஏமாற்றுக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாத சூழலிலேயே 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தனித்தமிழ் ஈழம் பெறுவதற்கான ஆணையைத் தருமாறு தமிழர் கூட்டணி வேண்டி நின்றது. தமிழர்கள் ஒரே குரலில் பேசி ஒரே அணியில் உள்ளனர் என்ற நிலையை சிங்கள ஆட்சியாளர்களுக்கும் சர்வதேசத்திற்கும் எடுத்தக் காட்ட தமிழர்கள் எல்லோரும் உதய சூரியனுக்கு வாக்களிக்குமாறு வேண்டப்பட்டனர். தமிழர்களில் ஐம்பத்திரண்டு வீத வாக்குகள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு கிடைத்ததுடன் பதினெட்டுப் பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்று வரலாற்றில் முதலும் இறுதியுமாக எதிர்க்கட்சித் தலைமைப் பதவியையும் கூட்டணி பெற்றுக் கொண்டது. ஒரே குரலில் பேசித்தமக்கு வாக்களிக்குமாறு வாக்குகளை பெற்றுக் கொண்ட தமிழர் கூட்டணி ஜே.ஆரின் அதட்டல் அடாவடித்தனத்திற்கு முன்னால் நின்று பிடிக்க முடியாது இந்தியக் குரலுக்கு அடிபணிந்து போயினர். அதன் பின் தமிழர் கூட்டணி சோகமான அரசியல் சூழலுக்குள் தள்ளப்பட்டது. நிற்க. இத்தகைய தமிழர் கூட்டணியும் தமிழ்க் காங்கிரசும் மட்டுமன்றி இரத்தக் கறைபடிந்த ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகிய நான்கு தமிழ்க்கட்சிகள் தமிழ் மேட்டுக்குடியினர் பெரும் வியாபார

**வெகுஜனன்**

வர்த்தகப் புள்ளிகள் அந்நிய நாட்டுத் தூதரகங்கள் என்பன வற்றின் முயற்சியால் ஒன்றிணைக்கப்பட்டே 2001ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழர் தேசியக் கூட்டமைப்பாகினர். வசதியும் வாய்ப்பும் சொத்துச் சுகமும் பெற்ற தமிழர்கள் சிலரது எண்ணங்களும் விருப்பங்களும் தான் தமிழர்கள் அனைவரினதும் விருப்பமாகக் காட்டப்பட்டது. உணர்ச்சி மிகு சொற்களால் புனையப்பட்ட பிராசாரங்களால் வாக்குப் பெறும் வழிவகைகள் தேடப்பட்டன. பழைய ஆட்களுக்குப் பதிலாகப் புதிய ஆட்கள் பாராளுமன்ற அரங்கிற்கு வந்து கொண்டார்களே தவிர பழமை வாதத் தமிழர் சிந்தனையும் பாராளுமன்ற ஏமாற்று நடைமுறைகளும் மாறவே இல்லை. வர்க்க நிலைப்பாடும் சாதியக் கண்ணோட்டமும் நவீன வழிகளில் முன்சென்றது. இதே தமிழர் கூட்டமைப்புக்கு எதிர்வரும் தேர்தலில் அதே இடங்களும் ஆசனங்களும் மட்டுமன்றி எஞ்சி நிற்கும் நான்கு ஆசனங்களும் தமக்கு தமிழர் ஒற்றுமையின் பெயரால் வந்த சேர வேண்டும் எனக் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

இதற்காக நான்கு கட்சிகளும் நான்கு புறத்தாலும் முயற்சி செய்கின்றன. இடைக்கிடை தமக்கிடையில் நாய்ச் சண்டையும் செய்கின்றன. தமிழ்க் காங்கிரஸ் தாமே விடுதலைப் புலிகளின் அதி உயர் நம்பிக்கையைப் பெற்ற பாராளுமன்றத் தமிழ்க் கட்சி என்பதைக் காட்டும் பேச்சுக்களை நிகழ்த்தி வருகின்றது. அதன் மூலம் இருக்கும் பிரதிநிதிகளைவிட மேலும் இரண்டு மூன்று ஆசனங்களைக் கைப்பற்றிக் கொள்ளலாம் எனநம்பிக்கொண்டு வடக்கு கிழக்கில் தமது நடவடிக்கைகளை விஸ்தரித்து வருகின்றது. அதேவேளை தமிழர் கூட்டணி முழுமையாகக் கக்கவும் முடியாது விழுங்கவும் முடியாது திண்டாடுகின்றது போதாக்குறைக்கு கூட்டணித் தலைமைப் பதவியில் வீ.ஆனந்தசங்கரியின் பிரச்சினை யால் அல்லோலகல்லோலப்படுகின்றது. இந்தியாவை எதிர்க்க முடியாமலும் விடுதலைப் புலிகளை நிராகரிக்க இயலாமலும் கூட்டணி அவஸ்தைப்படுவதை அவதானிக்க முடிகிறது. என்றாலும் தேர்தல் வரும் இவ்வேளையில் புலிகள் இயக்கத்துடன் இணங்கிப் போனால் தான் பட்டியலில் இடம் பெறமுடியும, ஆசனங்கள் பெறலாம் என்பதால் கிளிநொச்சிக்கு அழைக்கப்படும் போது எல்லாம் தவறாது கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சென்று வருகிறார்கள். அவ்வாறே இந்திய நலன்களுக்காக உழைத்து தமிழ் இளைஞர்களைப் பலிக்கடாவாக்கி இன்று பாராளுமன்றப் பதவிகள் பெற்ற ஜனநாயகப் புனிதர்களாகி விட்ட ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கங்களும் புலிகளை விட்டால் உள்ளதும் கெட்டுவிடும் என்ற நிலையில் கிளிநொச்சி சென்று வந்து அதற்கு இசைவானபேச்சுகள் நிகழ்த்தியும் வருகின்றனர்.

இந்நிலையிலேயே வடக்குகிழக்கு மட்டுமன்றி மலையகம், மேல் மாகாணம் ஆகியவற்றின் அனைத்துத் தமிழர் சார்பாகவும் ஒரே குரலில் ஒரே அணியில் நின்று எதிர்வரும் பொதுத் தேர்தலைச் சந்திக்க வேண்டும் என்ற குரல் தற்போது ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது. இது வழமை போன்று தேர்தல் காலக் குரல் மட்டுமேயாகும். தமிழர்கள் எல்லோரும் வர்க்க, சாதிய அடிப்படையில் மட்டுமன்றி பிரதேச ரீதியாகவும் மதரீதியிலும் வேறுபட்டவர்களாகவுமே இருந்து வருகிறார்கள். வர்க்க ரீதியில் தமிழர்கள் மத்தியில் ஒரு சிலர் உச்ச நிலைச் சொத்து சுகம் கண்டவர்களாகவும் அவற்றை அனுபவிப்பவர்களாகவும் இருக்கின்றனர். அதே வேளை ஏகப்பொரும் பான்மையான உழைக்கும் தமிழ்ச் சாதாரண மக்கள் பல்வேறு கஷ்டங்களையும் சுமைகளையும் சுமந்து நிற்பவர்களாகவே இருந்து வருகின்றனர். அவ்வாறே தமிழர் சமூகத்தில் சாதியத்தால் புறக்கணிக்கப் பட்டு அடி நிலை வாழ்வுக்குள் அமுங்கி வாழும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமூக நீதி கிடைக்காத நிலை தொடர்கின்றது.

இவ்வாறே மலையகத்தமிழர்கள் மத்தியில் வர்க்க, சாதிய வேறுபாடுகள் அன்றாடவாழ்வில் துலக்கமாக இருந்து வருகின்றது. வடக்கு, கிழக்கு; மலையகம் என்ற பிரதேச வேறுபாடுகளும் உள்ளார்ந்து உறுதியுடையனவாகக் காணப்படுகின்றன. அதே போன்று பேரினவாதக் கட்சிகளை ஆதரிப்பதில் அவர்களது தயவில் பாராளுமன்ற ஆசனங்களைப் பெறுவதும் பின் அமைச்சர்கள் ஆவதும் பிரதான நடைமுறையாக இருந்து வருகின்றது. மலையகத்தின் ஆறுமுகம் தொண்டமானும் , பெ.சந்திரசேகரனும் இரண்டு பேரினவாத ஆளும் வர்க்க கட்சி அரசாங்கங்களில் அமைச்சர்களாக இருப்பதை இலட்சியமாகக் கொண்டவர்கள். அண்மையில் கூட மேல் மாகாண ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினரான மனோ கணேசன் பிரதமரிடம் தனக்கொரு அமைச்சர் பதவிக்கு விண்ணப்பித்து புறக்கதவு வழியாகப் பல முயற்சிகள் செய்தவர் என்றும் பேசிக் கொள்ளப்படுகிறது.

இந்நிலையில் இத்தகைய தமிழர் பாராளுமன்றக் கட்சிகள் எவ்வாறு ஒரே குரலில் பேச முடியும்.. எவ்வாறு ஒரே அணியில் நிற்கமுடியும். இது சாத்தியமா? தமிழ் மக்கள் அனைவரையும் உண்மையாகவும் நேர்மையாகவும் ஒன்றிணைக்கக் கூடிய பொது வேலைத் திட்டம் ஒன்று உண்டா? அல்லது உருவாக்கப்படுமா? அத்தகைய பொது வேலைத் திட்டத்தில் சாதாரண உழைக்கும் தமிழ் மக்களது பிரச்சினைகள் உள்ளடக்கப்படுமா? அவ்வாறு இல்லாத சூழலில் ஒரே குரலில் பேசுவது ஒரே அணியில் நிற்பது என்பதன் அர்த்தம் தான் என்ன? பழைய பாராளுமன்ற ஆண்டபரம்பரை ஆதிக்கத் தலைமைகளின் வழியில் ஆசனங்களைக் கைப் பற்றுவதற்கான ஒரு வழி முறையாகவே ஒரே குரல்! ஒரே அணி ! என்று பேசப்படுவதாகவே எடுத்துக் கொள்ளல் வேண்டும். அப்படியாயின் அது உழைக்கும் சாதாரணத் தமிழ் மக்களுக்கு என்றும் சாதகமாகவோ அன்றி பயன் தருவதாகவோ இருக்கமாட்டாது என்பதே உண்மையாகும்.

> **தமிழர் மத்தியில்**
> **நிலம் உள்ளவனும்**
> **நிலம் அற்றவனும்**
> **சுரண்டும் முதலாளியும்**
> **சுரண்டப்படும் தொழிலாளியும்**
> **உயர்சாதிக் கனவான்களும்**
> **தாழ்ந்த சாதி மக்களும்**
> **பெண்களை அடக்குவோரும்**
> **பெண் விடுதலை**
> **வேண்டுவோரும்**
> **ஒரேகுரலில்**
> **பேசமுடியுமா?**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தேசிய இனப் பிரச்சினையும் மாக்சிச லெனினிச நிலைப்பாடும்

உலக அளவில் நோக்கும் போது மூன்றாம் உலகநாடுகள் பலவற்றிலே தேசிய இனப்பிரச்சினை என்பது கடுமையான இன மோதல்களாகவும் உள் நாட்டு யுத்தங்களாகவும் நீடித்து வருவதைக் காண முடிகின்றது. இந்நாடுகள் கடந்த அரை நூற்றாண்டு காலத்திற்கு முன் பின்னாக கொலனித்துவ ஏகாதிபத்தியப் பிடிகளில் இருந்து சுதந்திரம் பெற்றதாகக் கூறிக் கொண்ட அரைக் கொலனியல் அரை நிலவுடமை அமைப்பு முறை கொண்டவைகளேயாகும். இந்நாடுகளில் தேசிய பொருளாதாரம் உள்ளிட்ட தேசிய அபிலாஷைகள் ஒரு புறத்தில் முன்னெடுக்கப்பட்ட அதேவேளை இன முரண்பாட்டை மோதல்களாக்கும் தேசிய இனப்பிரச்சினை உள் நாட்டு ஆளும் வர்க்க அதிகார சக்திகளால் வளர்க்கப்பட்டும் வந்துள்ளன. இத்தகைய சூழலில் ஏகாதிபத்திய சக்திகள் இதே தேசிய இனப் பிரச்சினையைப் பயன்படுத்தி நாட்டை நவகொலனியமாக்கும் திட்டங்களைப் புகுத்தியும் கொண்டன. அவை இன்றைய ஏகாதிபத்திய உலகமயமாதலுடன் இணைக்கப்பட்ட தொன்றாக இருந்து வருவதையும் காணமுடிகின்றது.

எனவே தேசிய இனப் பிரச்சினை என்று கூறும் போது அதனை வெறும் மேலோட்டமான நிலை நின்றோ அன்றி புறநிலை யதார்த்தத்தைநிரகரித்து விட்டு வெறும் அரசியல் இருப்புக்கான அகநிலை விருப்பு வெறுப்புடனோ அணுக முடியாது. சுதந்திரம் என்று கூறுப்படுகின்ற காலத்திற்கு முன்பே தேசிய இனப் பிரச்சினைக்கான வித்துக்கள் விதைக்கப்பட்டு வளர்க்கப்பட்ட வரலாற்று சூழலின் ஊடாகவே நாம் தேசிய இனப் பிரச்சினையின் ஆழ அகலத்தைக் கண்டு கொள்ளல் வேண்டும். இங்கே தான் மாக்சிச லெனினிச வாதிகளின் வர்க்கப் போராட்டத்தின் ஊடே வரலாற்று வளர்ச்சியைக் காணும் அணுகு முறை கையாளப்பட வேண்டியதாகின்றது. ஏனெனில் அதன் மூலமே பிரச்சினையின் உண்மையான சாராம்சத்தைக் கண்டு கொள்ள முடியும். அதன் மூலம் தேசிய இனப் பிரச்சினையில் உள்ளடங்கி நிற்கும் இனங்கள் வர்க்கங்கள் அவற்றுக்கிடையிலான உறவுகள் முரண்பாடுகள் வரலாற்றில் வகித்து வந்த பாத்திரங்கள் என்பன வற்றைப் புரிந்து கொள்ள இயலும். உள் நாட்டு ஆளும் அதிகார வர்க்கங்களும் அவற்றோடு இணைந்து தத்தமது நலன்களைக் காத்துக் கொண்ட ஏகாதிபத்திய முதலாளித்துவ சக்த்திகளும் எவ்வாறு தேசிய இனப் பிரச்சினையை அந்தந்த நாடுகளிலே பகை நிலைக்கு வளர்த்து இன்றைய யுத்த சூழல் வரை கொண்டு வந்துள்ளவற்றின் வர்க்க அடிப்படையைக் காண்பது மாக்சிச லெனினிச நிலைப்பாட்டின் நோக்காகும்.

மேற் கூறிய வற்றின் ஊடே இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையின் சாராம்சத்தையும் அதன் இன்றைய யுத்தநிலையையும் கண்டு கொள்வது அவசியமாகின்றது. இங்கு தேசிய இனப் பிரச்சினை என்பது வெறுமனே இனங்களுக்கிடையிலான முரண்பாடும் மோதலும் என்ற நிலைக்கு அப்பால் இலங்கை என்ற சிறிய நாட்டின் எதிர்காலத்தையே நிர்ணயிக்கும் ஒரு பிரச்சினையாகவும் வளர்ந்து நிற்கின்றது. அதன் காரணமாகவே மாக்சிச லெனினிச வாதிகள் பகை நிலையின் உச்சத்தை அடைந்து கொடிய உள்நாட்டு யுத்தமாகி நிற்கும் தேசிய இனப் பிரச்சினையை நாட்டின் இன்றைய பிரதான முரண்பாடும் அது தீர்க்கப்பட வேண்டிய தன்
அவசியத்தையும் வற்புறுத்தி நிற்கின்றனர்.
நாட்டின் அடிப்படை

> **தேசிய இனப்பிரச்சினைக்கான வித்துக்கள் விதைக்கப்பட்டு வளர்க்கப்பட்டவற்றை வரலாற்று வழியாகவும் வர்க்கப்போராட்டத்தின் ஊடாகவும் கண்டுகொள்ள வேண்டும்.**

முரண்பாடு வர்க்க
முரண்பாடு என்பதில் மாக்சிச லெனினிச
வாதிகளுக்கு இரண்டு கருத்திற்கு இடமிருக்கமுடியாது. ஆனால் அந்த அடிப்படை முரண்பாட்டையும் முந்திமேவிக் கொண்டு இன முரண்பாடு முன்னுக்கு வந்து நிற்பதையும் அதற்குள்ளும் வர்க்க சக்திகள் உள்ளடங்கி நிற்பதையும் காண்பதே மாக்சிச லெனினிசப் பார்வையாகும்.

இலங்கை தேசிய இனப் பிரச்சினையின் வரலாற்று வளர்ச்சியை நோக்கு வோமாயின் சில பாராளுமன்ற அரசியலாளர்கள் கூறுவது போன்று கடந்த அரை நுற்றாண்டில் அரசியல் அதிகாரப் போட்டிக்காக வளர்க்கப்பட்ட தொன்று என்ற கூற்று மேலோட்டமானதும் பலவீனமான தொன்றுமாகும். பாராளுமன்ற வெற்றிக்கும் அதிகார நிலைப்பிற்கும் அது ஒரு கருவியாக்கப்பட்டமை உண்மையாகினும் அதற்கும் அப்பால் வர்க்க சக்திகள் தத்தமது வர்க்க வளர்ச்சி இருப்பு எதிர்காலம் என்பன வற்றுக்காக தேசிய இனப் பிரச்சினையை வளர்த்து வந்திருக்கின்றமையே அடிப்படையானது.

அவ்வாறு நோக்கும் போது கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே இனக்குரோத நிலையும் அதனை வர்க்க நலன் பேணுவதற்கான ஒன்றாகவும் நிலை நிறுத்தும் கைங்கரியங்கள் மேற் கொள்ளப்பட்டன. எண்ணிக்கையில் நான்கின் மூன்று பகுதியினர் எனக் கொள்ளப்படும் சிங்கள மக்கள் மத்தியில் இன அடிப்படையில் இனவாத நச்சு விதைகள் ஊன்றப்படும் நிகழ்வுகள் ஆங்காங்கே இடம் பெற்றன. அவை வெளித் தோற்றத்தில் தென்பட வில்லை 'நாம் எண்ணிக்கையில் கூடியவர்கள்' 'இந் நாடு எமக்குரியது' 'எமது பௌத்த மதம் மேன்மையானது' 'அதனைப்பாதுகாக்கும் புனிதப் பொறுப்பு எம் முடையது' 'எமது பௌத்த கலாச்சாரம் பேணப்படல் வேண்டும்' போன்ற கருத்துக்கள் தெற்கில் இருந்து ஒலிக்கத் தொடங்கின. இவை கொலனித்துவத்திற்கு எதிரான கருத்துக்களாக இனம்காட்டிய அதேவேளை அவற்றின் ஊடே பெரும் தேசிய இன அகங்காரத்தின் பிற்கால வளர்ச்சிக்குரிய அடிப்படைக் கூறுகள் அடங்கியிருந்தமையை அடையாளம் காணுதல் வேண்டும்.

இவற்றை முன்வைத்தவர்கள் அன்றைய சிங்கள மக்கள் மத்தியில் வர்க்க ரீதியில் மேல் எழுந்து வந்த வர்த்தக வியாபார சிறு தோட்டச் சொந்தக்கார வர்க்கப் பிரிவினர். இவர்கள் சிங்கள நிலவுடமை மேட்டுக்குடிகளில் இருந்து வந்தவர்கள். கொலனித்துவத்தை எதிர்ப்பதற்குப் பதில் அவர்களுடன் இணங்கிச் சென்று தத்தமது நலன் காத்து நின்ற வளரும் முதலாளித்துவ சக்திகளாகவே காணப்பட்டனர்.

இத்தகையவர்களின் வர்த்தக வியாபாரப் போட்டியினது வர்க்க இயல்பு காரணமாகவே 1915ல் முஸ்லீம்களுக்கு எதிரான வன்முறை என்பது பகிரங்கமாகவே ஏவிவிடப்பட்டது. இவ் முஸ்லீம் விரோத வன்முறை இலங்கையின் முதலாவது இன மோதலை அடையாளப்படுத்தியது. இனவாதத்தின் வெளிப்பாடாக அமைந்த அந்த வன்முறைச் சூழலை அன்றைய கொலனித்துவ ஆட்சியாளர்கள் தமக்குரியதாகப் பயன்படுத்திக்கொண்டனர். பிரித்தாளும் சூழ்ச்சிக்கு ஒருபரீட்சார்த்த மாகவும் அதனைக் கையாண்டனர். இச் சந்தர்ப்பத்தில் இலங்கைத் தமிழர்களின் மேட்டுக்குடித் தலைவர்கள் சிங்கள மேட்டுக்குடியின ருடன் கைகோர்த்து நின்று தமது
மேண்மையை விளங்கச்

> **சிங்களப் பேரினவாத சக்திகள் தமது வர்க்க வளர்ச்சிக்கு தேசிய இனப்பிரச்சினையை இன்றைய கொடிய யுத்தம் வரை முன்னெடுத்து வந்துள்ளனர்.**

செய்தனரே தவிர கொலனித்துவ ஏகாதிபத்திய எதிர்ப்பையோ அல்லது இனவாதத்தின் எதிர்கால வளர்ச்சி ஏனைய இனமொழி மத மக்களை எவ்வாறு கையாளப் போகின்றது என்பதைப் பற்றியோ தூரநோக்கில் கண்டு கொள்ளவில்லை. அவ்வாறு பார்ப்பதற்கு அவர்களது உயர்வர்க்க நிலைப்பாடு இடமளிக்கவில்லை. ஆனால் அதே சிங்கள நிலவுடமை வழிவந்த மேட்டுக்குடி வர்க்க சக்திகளால் தமிழர்கள் சார்பாக இருபதுகளின் ஆரம்பத்தில் மேற்கு மாகாணத்திற்கான அரசியல் பிரதிநிதித்துவம் முன்வைக்கப்பட்ட போது முற்றிலும் இனவாத

சி. கா. செந்திவேல்
பொதுச் செயலாளர்
புதிய - ஜனநாயக கட்சி

அடிப்படையிலேயே மறுக்கப்பட்டது. இவ்வாறு கொலனித்துவ ஆட்சியினரை பகைத்துக் கொள்ளாது அவர்களுக்கு முற்றிலும் அடிபணிந்த நிலையிலேயே இலங்கையின் சிங்கள-தமிழ் -முஸ்லீம் மேட்டுக்குடி ஆளும் வர்க்கத்தினர் தமது அதிகாரத்திற்கான விண்ணப்பங்களையும் மன்றாட்டங்களையும் செய்து வந்தனர். இலங்கையின் முப்பதுகளின் ஆரப்பத்தில் இடதுசாரி இயக்கத்தின் தோற்றத்துடனேயே இலங்கைக்கு முழுமையன சுதந்திரக் கோரிக்கையை முன்வைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு வெகுஜன இயக்கங்களையும் போராட்டங்களையும் இடதுசாரிகள் முன்னெடுத்து வந்தமை குறிப்பிடத் தக்கதாகும். இத்தகைய போக்கின் வளர்ச்சி இந்திய சுதந்திரப் போராட்டம் போன்று வளர்ந்து முன்செல்லவிடாது தடுப்பதற்கு கொலனி ஆட்சியாளர்களுக்கு சிங்கள தமிழ் முஸ்லீம் மேட்டுக்குடி வந்த உயர்வர்க்க சக்திகள் துணை புரிந்து வந்தன என்பதும் அதன் காரணமாகப் பிரித்தானிய ஆட்சியாளர்கள் நம்பிக்கையோடு ஆட்சி அதிகாரத்தைக் அவர்களின் கைகளுக்கு மாற்றிக் கொடுக்க முன்வந்தார்கள்.

இவ்வாறு கொலனித்துவத்தின் கீழ் இடம் பெற்ற அரசியல் சீர்திருத்தங்களின் போதும் பொருளாதார அபிவிருத்தி பற்றிய எல்லைக்குட்பட்ட செயற்பாடுகளின் போதும் இனவாதம் உள்ளாந்த அம்சமாக இருந்து வந்துள்ளன. அவற்றில் இனத்துவ நிலைப்பாடு என்பது தூரநோக்கில் வர்க்கரீதியில் ஒன்றுபடவேண்டிய சிங்கள தமிழ் மக்களுக்கிடையிலான தீராப்பகை நிலைத்து நீடிக்கத் தக்கவாறே தகவமைக் கப்பட்டன. குறிப்பாக திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் வடக்கு கிழக்கில் ஏற்படுத்தப்பட்டன. நில நீர் உபயோகம் பயன்பாடு என்பன வற்றில் இனவாத நடைமுறைகளே பின்பற்றிப்பட்டன. இங்கே மாக்சிச லெனினிச வாதிகள் காண்பது இனவாதத்தின் மறைவில் வர்க்கத் தேவைகள் நீண்டகால நோக்கில் உறுதிப்படுத்தப் பட்டவற்றையேயாகும். 1935ம் ஆண்டில் காணி ஆணைக் குழுவின் சிபார்சுகளும் அதன் நடைமுறைகளும் ஆழ்ந்த இன வர்க்க அடிப்படையில் தூரநோக்குடன் முன்னெடுக்கப்பட்டவைகளாகும். இவற்றின் பாரதூரமான இன மோதல்களையும் அவற்றின் விளைவாக வர்க்க சக்திகள் ஐக்கியப்பட முடியாத அளவுக்கு சிங்கள தமிழ் முஸ்லீம் மக்கள் பிளவுண்டு ஒருவரை ஒருவர் வன்ம விரோதிகளாகக் கொண்டு வாழ்ந்து வருவதையும் காணத்தவறக் கூடாது.

இவ்வாறு1948ம் ஆண்டின் இந்திய வம்சாவழி மலையகத் தமிழ்த் தொழிலாளி வர்கக்கத்தின் பிராசாவுரிமை வாக்குரிமை பறிக்கப் பட்டமையின் அடிப்படைகள் வர்க்கக் கண்ணோட்ட நிலையிலேயே நோக்கப்படவேண்டும். அதனைத் தொடர்ந்து 1956ம் ஆண்டின் தனிச் சிங்கள மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டமை ஒரு இனவாத நோக்கைக் கொண்டிருந்த போது அதன் அடிப்படை வர்க்க ரீதியில் சிங்கள மக்களைத் திசைதிருப்புவதாகவே அமைந்து கொண்டது. இன்றுவரை அதனைவைத்தே தமிழர் மேட்டுக்குடித் தலைமைகள் பாராளுமன்ற அரசியல் நடாத்தி வந்ததுடன் சிங்கள சாதாரணவர்க்க சக்திகளுடன் தமிழ் மக்களை ஐக்கியப்பட விடாத தொடர் பிரசாரத்தையும் நடாத்தி வருகின்ற போக்கையும் அவதானிக்க முடிகின்றது.

அவ்வாறே 1972ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட அரசியல் சாசனமும் அதன் பின்னான 1978ம் ஆண்டின் அரசியல் சாசனமும் இந்நாட்டின் தமிழ்த் தேசிய இனத்தையும் ஏனைய தேசிய இனங்களையும் இனத்துவ அடிப்படையில் புறந்தள்ளிக் கொண்டன. ஆனால் மேற்படி அரசியல் சாசனங்கள் அடிப்படையில் அனைத்து இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்கள் அனைவரையும் வர்க்க ரீதியில் அடக்கி ஒடுக்கும் அரசியல் சாசனங்கள் என்பது தான் இங்கே இனத்துவ நோக்கிற்கு அப்பால் வர்க்க ரீதியில் நோக்கப்பட வேண்டியதாகும்.

கடந்த நூற்றாண்டில் இலங்கையில் தேசிய இனப்பிரச்சனை என்பது ஒவ்வொரு காலகட்டத்திலும் இனத்துவ அடிப்படையில் பெரும்பான்மை சிறுபான்மை என்ற கண்ணோட்டத்துடன் வளர்க்கப்பட்டது. அந்த வளர்ச்சியின் சாராம்சமாக இருந்து வந்த பிரதான அம்சம் வர்க்க நிலைப்பாடு என்பது பலர் கவனிக்கத் தவறும் விடயமாகும். பௌத்த சிங்களப் பேரிணவாதத்தை முன்னெடுத்த ஆளும் வர்க்க சக்திகள் யாவும் சிங்கள நிலவுடமை முதலாளித்துவ வழிவந்த மேட்டுக்குடி சுரண்டும் வர்க்கப் பிரதிநிதிகள் என்ற மையத்தைக் காணத்தவறும் எவராலும் தேசிய இனப்பிரச்சனையில் உள்ளடங்கி இருக்கும் வர்க்க உறவுகள் பற்றிப் புரிந்து கொள்ள இயலாது.

தேசிய இனப்பிரச்சனையின் சாராம்சமாகத் திகழ்ந்து வரும் வர்க்கசக்தி களை இலங்கையின் சமூகக்கட்டமைப்பின் யாதார்த்தநிலைமைகளின் ஊடாகப் பிரித்துப் பார்த்துக் கொள்வதன் மூலமே விளங்கிக் கொள்ள இயலும். இன்றைய அரசியல் அமைப்பு அதன் கீழான பாராளுமன்றம், நிறைவேற்று அதிகாரம், சட்டங்கள், நிர்வாக முறைமைகள் என்ற வரையறைகளுக்குள் நின்று மட்டும் தேசிய இனப்பிரச்சனையின் இனத்துவ வர்க்க அம்சங்களை புரிந்து கொள்ள முடியாது. அல்லது பாராளுமன்ற அதிகாரத்திற்கான ஆசனங்களும் அவற்றின் ஊடான ஆளும் வர்க்க நலன்கள் போன்றவற்றை தத்தமது அரசியல் இருப்புக்கான அடிப்படையில் வைத்தும் தேசிய இனப்பிரச்சனையின் முழுமையைப் பார்த்து விடமுடியாது. ஆதலால் இலங்கையின் பேரினவாத ஒடுக்கு முறை எவ்வாறு நாட்டின் வர்க்க சக்திகளின் வளர்ச்சியோடும் ஆளும் அதிகார நிலைப்போடும் பின்னிப் பிணைந்து வந்துள்ளது என்பதை ஆழ்ந்து நோக்குதல் வேண்டும்.

இவ்வாறு நோக்கும் போது தரகு முதலாளித்துவ ஐக்கிய தேசிய கட்சியும் தேசிய முதலாளித்துவ சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் இலங்கையில் தேசிய இனப்பிரச்சனையை பகை முரண்பாடாக்கி வளர்த்து வந்ததில் வகித்த வர்க்கப் பாத்திரத்தை ஆழ்ந்து நோக்குவது தேவையாகின்றது. இந்தஇரண்டு கட்சிகளும் இனவாதத்தை பேரினவாத ராணுவ ஒடுக்கு முறை என்ற நிலைக்கு முன்னெடுத்துச் சென்றதன் விளைவானதே இரண்டு தசாப்தகால யுத்தமாகும். அதேவேளை இந்நாட்டில் பேரினவாதம் என்பது பௌத்த சிங்களம் பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற அடிப்படைவாத சிந்தனை செயல்களுடன் நிறுவன மயப்படுத்தப்பட்டும் வந்துள்ளமையைக் காணுதல் வேண்டும். "இது எங்கள் நாடு எமக்கு வேறு நாடு கிடையாது பௌத்த மதம் பாதுகாக்கப்படவேண்டும்" என்பன போன்ற இன மத அடிப்படைவாதக் கோரிக்கைகள் இரண்டு பெரும் கட்சிகளாலும் பௌத்த சிங்கள நிறுவனங்களாலும் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. இவ்விரண்டு கட்சிகளுக்கும் அப்பால் இன்று சிஹலஉறுமய, ஜே.வி.பி போன்ற தீவிர தேசிய வாதத்தை முன்வைத்து இந்திய இந்துத்துவா அடிப்படைவாதத்துடன் இணைந்து செயல்பட்டு வரும் போக்கினை அண்மைய காலங்களில் அவதானிக்க முடிகின்றது. எனவே பௌத்த சிங்கள பேரினவாதக் கருத்தியல் இன்று சகல மட்டங்களிலும் வெளிக்கிளம்பி நிற்கும் போக்கினை அடையாளம் காணமுடிகின்றது. அது மட்டுமன்றி இத்தகைய பேரினவாத ஒடுக்குமுறையையும் அதன் விளைவுகளையும் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளும் அயல் மேலாதிக்க வாதிகளும் இது வரை எவ்வாறு பயன்படுத்தி வந்தார்கள் என்பதும் இனியும் எத்தகைய வழிகளில் பயன்படுத்துவதற்கு வியூகங்கள் வகுத்து நிற்கின்றார்கள் என்பதும் ஆழ்ந்த கவனத்திற்குரியனவாகும்.

இவ்விடத்திலே சிங்கள மக்கள் மத்தியில் வளர்க்கப்பட்ட பேரினவாதக் கருத்தியல்களையும் அதனுள் அடங்கியிருந்த வர்க்க சக்திகளின் உண்மையான ஆளும் அதிகாரவர்க்க அம்சங்களையும் மக்களுக்கு அம்பலமாக்குவதில் பாரம்பரிய இடதுசாரிகள் என்போர் அறுபதுகளில் இருந்து கீழிறங்கி இறுதியில் சீரழிந்தவர்களாகிக் கொண்டார்கள். அவர்கள் தமது பாராளுமன்ற ஆசன இருப்புக்காகவும் பதவிபெற்றுச் சுகம் அனுபவிப்பதிலும் அக்கறை காட்டியதால் பேரினவாதத்திற்கு முன்னால் மௌனம் சாதித்து உள்ளுர சமரசமாகி இணங்கிப் போகினார்கள். பாராளுமன்ற ஆசனங்களுக்காக ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்த்த வேளைகளில் இந்த இடதுசாரிகள் இனவாதத்தை அவ்வப்போது கருவியாகப் பயன்படுத்தவும் தவறவில்லை. ஆயினும் கடைக்கோடிபேரினவாத நிலைக்கு ஜே.வி.பி சென்ற அளவுக்கு இவர்கள் செல்லவில்லை என்பதையும் கவனத்தில் கொண்டேயாக வேண்டும். ஆனால் இவர்கள் தேசிய இனப்பிரச்சினையில் இன்றுவரை பின்பற்றி வரும் நிலைப்பாடு மாக்சிச லெனினிச நிலைப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பாராளுமன்ற இடதுசாரி சந்தர்ப்பவாத நிலைப்பாடாகும். இது சமூக ஜனநாயக நிலைக்கும் கீழே சீரழிந்து சென்றுள்ள ஒன்றாகும். இத்தகையவர்கள் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தீவிரமடைந்ததன் தோற்றுவாயை பேரினவாத ராணுவ ஒடுக்கு முறை ஆரம்பித்த இடத்திலிருந்து காண்பதற்குப் பதிலாக புலிகள் இயக்கம் 1983ம் ஆண்டு யூலை 23ம் திகதி
திருநெல்வேலியில் நடாத்திய கண்ணி
வெடித்

> **பேரினவாத பெருமுதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளே தமிழ்த் தேசிய இனத்தினதும் மற்றும் தேசிய இனங்களினதும் பொது எதிரிகளாவர்.**

தாக்குதல்
சம்பவத்திலிருந்தே காணுகின்ற
அவலத்தையே மீண்டும் மீண்டும் கூறுகின்றார்கள். எனவே தமிழர்களில் ஒரு பகுதியினர் பிரிவினை கேட்டு ஆயுதம் ஏந்தியதாலேயே தேசிய இனப்பிரச்சினை யுத்தமாகியதென்று வாதிடுபவர்கள் இன்றும் தம்மை இடதுசாரிகள் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் தமிழ் மக்கள் வடக்கு கிழக்கில் தமது சொந்தப் பாரம்பரிய பூமியில் பேரினவாத ஒடுக்கு முறையால் ஒடுக்கப்பட்டு வந்த வரலாற்று நிகள்வுகளை புறந்தள்ளிவிட்டு ஒரு மாக்சிச லெனினிச வாதியால் வரட்டுத்தனமான வர்க்கநிலைபட்ட விளக்கங்ககளை முன்வைக்க முடியாது. அதேவேளை தமிழர் மத்தியில் வழிவழியாக ஆதிக்கம் பெற்றுவந்த தமிழர் தலைமைகள் தேசிய இனப்பிரச்சனையில் வகித்து வந்த பிற்போக்கான நிலைப்பாட்டின் வர்க்க அம்சத்தை எவ்வகையிலும் குறைத்து மதிப்பிட்டுவிடவும் முடியாது. இத்தகைய தலைமைகள் தமிழர் உரிமைகளை வற்புத்துவதில் தமது உயர் வர்க்க மேட்டுக்குடி நிலைப்பாட்டிற்கு அளவானதாகவே கொண்டுருந்தனர். தமிழ்த் தொழிலாளர் விவசாயிகள் தாழ்த்தப்பட்ட மக்கள் பெண்கள் உள்ளிட்ட உழைக்கும் வர்க்க சக்திகளின் நலன்களை அவர்கள் என்றும் முன் நிறுத்தியது கிடையாது. பல சந்தர்ப்பங்களின் பேரினவாதத்தை கடைப்பிடித்த ஐக்கிய தேசியக் கட்சியுடன் உள்ளார்ந்த வர்க்க ஐக்கியத்தையும் அவை கொண்டிருந்தன. அவ்வாறே ஏகாதிபத்தியத் தை அரவணைத்து அயல் பிராந்திய

தொடர்ச்சி 10ம் பக்கம்..

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# கல்வியும் சமூகமும்

## ஒரு வரலாற்றுப்புல நோக்கு

நிலவுடமைச் சமூகங்களில் இருந்த சமூகப் பிரிவுகளில் ஒவ்வொரு சமூகப்பிரிவிற்குள்ளும் அதன் வாழ்க்கை நிலையையும் வாழ்க்கை முறைமையையும் ஒட்டிய அடிப்படைக் கல்வி இளம் பருவத்தில் வழங்கப்பட்டே வந்துள்ளது. எனினும் இது எல்லாருக்கும் பொதுவான பாடசாலைகள் மூலம் வழங்கப்பட்டதில்லை. அன்று பரவலாக இருந்த குரு - சீடர் என்ற முறையும் பின்னைக்காலப் பாடசாலைகளின் ஆசிரியர் - மாணாக்கர் முறையும் மிகவும் வேறுபட்டவை. எனினும் இன்னுங் கூடச் சில துறைகளில், குறிப்பாகக் கலை சார்ந்த துறைகளில், குரு - சிஷ்யர் என்ற முறையில் கல்வி பற்றிப் பேசப்படுகிறது.

கல்வி என்பது பெருமளவுக்கும் முன்னோர் வழங்கிய அறிவைப் புதிய தலைமுறைக்கு வழங்குவதாகவே இருந்து வந்தது. இதனாற் புதிய அறிவு பெறப்படவில்லை என்று கூற முடியாது. சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சியும் சமூக உறவில் ஏற்பட்டு வந்த மாற்றங்களும் அவற்றை யொட்டிய புதிய சிந்தனைகளையும் அறிவையும் ஆக்கங்களையும் உருவாக்கியே வந்தன. எனினும் மரபின் பிடிப்பு மிகவும் வலியதாகவே இருந்து வந்தது. அது கல்வியின் உள்ளடக்கத்திலும் கல்வி முறையிலும் வேகமான மாற்றங்கள் ஏற்படத் தடையாகவே இருந்தது. அயல் உறவுகளும் அந்நியர் மூலம் உள்வாங்கப்பட்ட பண்டங்களும் சிந்தனைகளும் நிலவுடமைச் சமூகத்தில் கல்வி உட்பட்ட பல்வேறு துறைகளில் மாற்றங்கட்கும் வளர்ச்சிக்கும் உதவின என்பதையும் நாம் மறக்கலாகாது.

நிலவுடமைச் சமூக அமைப்பு அறிவு வளர்ச்சியையோ அதன் பயனை புதிய பண்டங்களதும் சிந்தனைகளதும் வரவையோ மறுத்தது என்பது சரியல்ல. எந்தளவு தூரத்துக்கு எந்தப் புதிய அறிவும் ஆளும் அதிகார வர்க்கங்களது நலன்கட்கு உதவுகின்றனவோ அந்தளவுக்கு அவை வரவேற்கப்பட்டன. எந்தளவுக்கு அவை அன்றைய சமுதாயக் கட்டமைப்பையும் ஏற்றத்தாழ்வான உறவையும் மிரட்டக் கூடியனவாக இருந்தனவோ அந்தளவுக்கு அவை மறிக்கப்பட்டன. யாருக்கு எந்த விதமான கல்வி தேவை என்பதைத் தீர்மானிப்பதன் மூலம் சமுதாய ஏற்றத்தாழ்வுகளை அடிப்படையில் அப்படியே பேணுவதற்கு இயலுமாய் இருந்தது. சாதியமைப்பின் கீழ் வருணாச்சிரமம், குலதருமம் என்ற பேர்களில் இவை மேலும் இறுக்கமாகப் பேணப்பட்டன. பிற நிலமானிய முறைகளின் கீழ்க் கல்வி வசதிகள் சொத்துடைய வர்க்கங்கட்கே எட்டக் கூடியனவாக இருந்தன. ஆசான் - சீடர்கள் என்ற இறுக்கமான உறவு நிலவுடமைச் சமுதாயத்தின் பண்புக்கு இசைவான ஒன்றாகவே இருந்தது. இதன் மூலம் பால் அடிப்படையிலும் கல்வியிற் பாகுபாடு தொடர்ந்தது.

தமது வர்க்க அடிப்படையிலான தளைகளை மீறிப் புலமை பெற்றவர்கள் பலர் இருந்துள்ளனர். எனினும் சனத்தொகை விகிதாசார அடிப்படையில் நோக்கினால் அவர்களின் எண்ணிக்கை அற்பமானதே. தொழில் சார்ந்த கல்வி என நோக்கும் போது ஒவ்வொரு துறையிலும் தொழிற் கல்வி குடும்ப அல்லது குல அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்டு இருந்து வந்ததைக் காணலாம். அதே வேளை, பரவலான அளவிற் கல்வி புகட்டுவதற்கான நிறுவனங்கள் காலத்துக்குக் காலந் தோன்றி மறைந்துள்ளன. இன்றைய பிஹார் மாநிலத்தில் அன்றிருந்த நாலந்த 'பல்கலைக்கழகம்' போன்ற கல்விக் கூடங்கள் பௌத்தத்தின் பரவலுடன் தொடர்புடையவை. கல்வியறிவின் பரம்பலைப் பார்ப்பனியச் சார்பற்ற பௌத்தமும் சமணமும் ஊக்குவித்தது தற்செயலானதல்ல.

எவ்வாறாயினும், விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் நிலவுடைமைச் சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளதும் உற்பத்தி உறவுகளாலும் மட்டுப் படுத்தப்பட்டிருந்த நிலைமைகளில் அறிவு என்பது அற நூல்கள், சமயச் சார்பான இலக்கியங்கள், தர்க்கம், மொழிப்புலமை, மெய்யியல் போன்ற துறைகளை மிகவும் வற்புறுத்தியது. வானியல், மருத்துவம், கட்டிடக்கலை போன்ற துறைகளும் தொழில் நுட்பமும் விஞ்ஞான வளர்ச்சிக்கான அடிப்படையாக இருந்தன. எனினும் நவீன விஞ்ஞானத்தினதும் தொழில் நுட்பத்தினதும் துரிதமான வளர்ச்சி முதலாளியத்தின் தோற்றத்தையொட்டியும் அதனாற் கட்டவிழ்த்து

**கொலனிய நாட்டிலும் கொலனித்துவ வாதிகள் ஆட்சி செய்த நாடுகளிலும் கல்வியை தத்தமது தேவைக்கு அளவானதொன்றாகவே வழங்கினர்.**

**பேராசிரியர் சி. சிவசேகரம் (5)**

விடப்பட்ட உற்பத்திச் சக்திகளது தேவையை யொட்டியுமே ஏற்பட்டது.

ஐரோப்பிய நாடுகளை விட ஒவ்வொரு அறிவுத் துறையிலும் முன்னால் நின்ற ஆசியச் சமுதாயங்களை ஐரோப்பிய நாடுகள் தமக்குக் கீழ்ப்படுத்தவும் அவற்றை முந்திச் செல்லவும் இயலுமாக்கியவை முதலாளியமும் அதற்குத் துணையாக வளர்ந்த விஞ்ஞானமும் தொழில் நுட்பமுமே எனினும், முதலாளியம் எடுத்த எடுப்பிலேயே கல்வியின் பரவலாக்கத்தைத் தனது நடைமுறையில் ஒரு பகுதியாக்கிக் கொள்ளவில்லை. முதலாளியத்தின் தோற்றத்துக்கு முன்னரே மத நிறுவனங்களினதும் நிலவுடமை அரசினதும் தேவையையொட்டி உருவான கல்வி நிறுவனங்கள் அதிகார வர்க்கத்தையும் அதை அண்டி நின்றவர்களையுமே ஏற்றன. கல்வியின் பரவலாக்கல் முதலாளிய உற்பத்தியின் தேவைகளையொட்டியே நிகழ்ந்தது.

தொழிலாளர்கட்கு எழுத்தறிவும், கருவிகளையும் இயந்திரங்களையும் இயக்கும் ஆற்றலும் கல்வி விரிவு படுத்தப்பட்டது. நாம் இந்த நாட்டில் இன்றும் அறியக் கூடிய இலவசக்கல்வி, கட்டாயக் கல்வி என்பன அதற்குப் பின்னர் உருவானவையே.

நிலவுடமைச் சமூகத்திற் கல்வித் துறையில் ஆதிக்கஞ் செலுத்திய சிந்தனைப் போக்கு முதலாளியச் சமூகத்திலும் சில காலத்துக்கேனுந் தொடர்ந்தது குறிப்பாக, இங்கிலாந்தில் நிலவுடமைச் சிந்தனையின் மிச்ச சொச்சங்கள் தேய்ந்தழிய நீண்ட காலம் எடுத்தது. அதைவிடவும், முதலாளியம் ஏகாதிபத்தியமாக மாறிய நிலையில் கொலனி ஆட்சி முறை மூலம் முதலாளியம் தனது சுரண்டலைத தனது தேசிய எல்லைகட்கு அப்பாற் கொண்டு சென்ற சூழ்நிலையிற் கல்வியின் நோக்கமும் கல்வி பற்றிய பார்வையும் கொலனிய ஆட்சியாளர்களது தேவையைக் கருத்திற் கொண்டே அமைந்தன.

யாருக்கு எந்த வகையான கல்வி தேவை என்பது பற்றிய திட்டவட்டமான ஒரு பார்வையின் அடிப்படையிலேயே கொலனிய அதிகார நாட்டிலும் ஆட்சிக்குட்பட்ட நாட்டிலும் கல்விமுறை அமைந்தது. அதைவிடவும் கொலனிய ஆட்சிக்குட்பட்ட நாட்டில் கொலனியத்துக்கு முன்பிருந்த சமுதாய அமைப்பின் தன்மையும் அதன் உயர் வர்க்கத்திற்கும் கொலனிய எசமானர்கட்குமிடையிலான உறவும் கொலனிய ஆட்சியின் கீழான கல்விமுறையின் விருத்தியைத் தீர்மானித்தன.

கொல்னிய ஆட்சியாளர்கள் ஒவ்வொருவரும் தமது கொலனிகளில் ஒரே விதமாக நடந்து கொள்ளவில்லை என்பது மட்டுமில்லாமல் ஒரே கொலனி ஆட்சி கூட ஒப்பிடத்தக்க சமுதாய அமைப்புக்களைக் கொண்ட கொலனிகளில் ஒரே விதமாக நடந்து கொண்டதாகவுங் கூற முடியாது. கொலனி ஆட்சி ஏற்பட்ட காலம், அக்காலத்திற் கொலனிய அதிகார நாட்டின் சமூக அமைப்பும் ஆதிக்கஞ் செலுத்திய சிந்தனை, கொலனித்துவத்தின் பொருளாதார, அரசியல் நோக்கங்கள் என்பன யாவுமே கொலனிய எசமானர்களது நடத்தையைத் தீர்மானித்தன. அதே வேளை, கொலனிய ஆதிக்கங்கள் அனைத்துக்குமுரிய பொதுவான பண்புகளும் இருந்தன. வெவ்வேறு கொலனிய ஆட்சிகளின் கீழ்ப்பட்ட கொலனிகளின் கல்வி முறை இரண்டு முக்கிய நோக்கங்களை கொண்டிருந்தது. ஒன்று கொலனிய நாட்டின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் தம்முடையதினினும் கீழானதாக அடையாளப்படுத்தித் தமது பண்பாட்டையும் நாகரிகத்தையும் மேலானதாக நிலை நிறுத்துவது. மற்றது தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தி நடைமுறைப்படுத்த உகந்த ஒரு சமூகப்பிரிவை உருவாக்குவது. முன்னைய நோக்கம் சிந்தனைத் தளத்தில் மிகவும் முக்கியமானது. மற்றது நேரடியான அதிகாரப் பிரயோகம் தொடர்பானது.

இந்தப் பின்னணியிலே. இலங்கையில் கொலனிய ஆட்சியாளர்களது வருகையின் பின்பு நமது நாட்டின் கல்வி முறையில் ஏற்பட்ட மாற்றங்களையும் அவற்றின் தொடர்ச்சியாக இன்றைய கல்வி முறைமையும் அதன் நெருக்கடிகளையும் நோக்குவோம்.

எவ்வாறாயினும் நாம் சில விடயங்கள் பற்றிய தெளிவுடன் இருக்க வேண்டும். நமது முன்னோர் மிகவும் பின்தங்கிய ஒரு சிந்தனை மரபுக்குரியவர்கள் என்ற கருத்து எவ்வளவு ஏற்கத் தகாததோ, அவ்வாறே அவர்கள் மிக முன்னேறிய விஞ்ஞான அடிப்படையிலான சிந்தனையாளர்கள் என்ற விதமான அகச்சார்பான வாதங்களும் ஏற்கத்தகாதனவே.

கொலனிய ஆட்சி முறையின் மூலம் நம்மை வந்தடைந்த தவறான, சமூகக்கேடான விடயங்ளை நீக்குவது என்பது பழமைக்கு மீளுவதாகாது என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும். நமது இன்றைய இருப்பிலிருந்து எதை நோக்கி நகர்வதற்கு முயலுகிறோம் என்ற அடிப்படையிலேயே நமது நாட்டின் கல்விமுறை பற்றிய நமது மதிப்பீடும் அதன் மாற்றத்துக்கான பங்களிப்பும் அமைய முடியும்.

- வளரும்....

# ஏகாதிபத்தியமும் பெண்களும்

## "ஒழுங்குமுறை சாராத" துறை

மூன்றாமுலக நாடுகள் பலவற்றில் பிரம்மாண்டமான பெருநகரங்களைக் காணுகிறோம். அவை கட்டுப்பாடோ திட்டமோ இல்லாமல் விரிவடைந்து கொண்டு போகின்றன. இவற்றுள் மிகவும் நன்கறியப்பட்டது மெக்ஸிகோ மாநகரம். இத்தகைய நகரங்கள் பெரிதாக இருப்பதற்கு அவற்றின் பொருளாதார முக்கியத்துவங் காரணமல்ல என்ற வகையில் அவை செயற்கையாக வீக்கமடைந்துள்ளன எனலாம். கிராமங்களில் மிகவும் வறுமைப்பாடேவர்கள் தமது தாயகங்களில் தமது வாழ்க்கைப் போராட்டத்தைக் கைவிட்டு இடையறாது வந்து கொண்டிருப்பதாலேயே இம்மாநகரங்கள் வீக்கமடைகின்றன. அவர்கள் மாநகரங்களில் "தமது நல்வாய்ப்பு" கிடைக்குமென எதிர்பாக்கிறார்கள். ஆனால் "நல்வாய்ப்பு" என்பது பெரும்பாலும் தகரக்கூரையுடைய ஒரு குடிசையாகவே அமைகிறது. பொருளியல் நோக்கில் இந்த ராட்சத மாநகரங்களை ஏறத்தாழப் புற்றுநோய்க் கழலைகளைப் போலவே நோக்க வேண்டும்.

அப்படியானால், வறியவர்கள் மாநகரங்கட்கு வந்து மகிழ்ச்சிக்குப் பதிலாக வேலையின்மையை எதிர்நோக்குவது ஏன்? அவர்களிற் பலர் "ஒழுங்குமுறை சாராத பொருளாதாரத் துறை" மூலமே தங்களை ஆதரித்துக் கொள்ள முயல்கிறார்கள். ஒழுங்குமுறை சாராத துறையிற் பணியாற்றுகிறவர்கள் சில விதங்களிற் "தமக்காகவே தொழில்செய்யும் வணிகர்கள்" எனலாம். அதே வேளை, அவர்கள் உழைப்பும் பொருளாதாரமும் தொடர்பான எந்தவிதமான ஒழுங்குமுறைகட்கும் உட்படாதவர்கள். அவர்கள் தாமே உற்பத்தி செய்த பொருட்களைத் தெருக்களில் விற்கிறார்கள் அல்லது பலவகையான சேவைகளை வழங்குகிறார்கள். 1986ம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் நிக்கராஹுவாவின் தலைநகரான மனாஹுவாவில் காரில் பயணஞ் செய்தபோது நான் இதற்கான பல உதாரணங்களைக் கண்டேன். சந்தை ஒன்றுக்குப் போவதற்காக வண்டியை நிறுத்திச் சென்றபோது பணம் தந்தால் அதைப் பார்த்துக் கொள்வதற்கு ஒரு சிறுவன் முன்வந்தான். வண்டி சிவப்பு விளக்கிற்குப் பின் நின்றபோது, அந்தத் தருணத்தைப் பாவித்து வண்டியின் யன்னலூடாகக் கடலை விற்க ஒரு பெண் முயன்றார்.

"ஒழுங்குமுறைசாராத" இவ்வாறான பொருளாதாரச் உலகில் நாம் வாழும் பகுதிகளிலும் காண இயலும். மூன்றாமுலக நாடுகளின் பெருநகரங்கள் விடயத்திற் சிறப்பான அம்சம் ஏதெனின் ஒழுங்குமுறை சாராத துறை எவ்வளவே பெரியது என்பதாகும். நைரோபியில் 1985ல் நடந்த ஐ.நா.சபையின் மாதர் மாநாட்டில் பெண்களும் வணிகமும் பற்றிய ஒரு அறிக்கையில், மூன்றாமுலகின் மாநகரங்களில் 20 முதல் 80 சதவீதம் வரையிலான உழைப்பாளர்கள் ஒழுங்குமுறை சாராத துறை மூலம் பிழைப்பை நடத்துகிறார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையும் பிற ஆய்வுகளும், ஒழுங்குமுறை சாராத துறை எவ்வளவே பெரியது என்பதாகும். நைரோபியில் 1985ல் நடந்த ஐ.நா. சபையின் மாதர் மாநாட்டில் பெண்களும் வணிகமும் பற்றிய ஒரு அறிக்கையில், மூன்றாமுலகின் மாநகரங்களில் 20முதல் 80 சதவீதம் வரையிலான உழைப்பாளர்கள் ஒழுங்குமுறை சாராத துறை மூலம் பிழைப்பை நடத்துகிறார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையும் பிற ஆய்வுகளும், ஒழுங்குமுறை சாராத துறையிற் பெண்கள் பெரும் பகுதியினராவர் எனக் கூறுகின்றன. இதற்குக் காரணங்கள் பல. கல்வியறிவு போதாமை அல்லது இல்லாமை போன்ற காரணங்களால், "ஒழுங்குமுறை சார்ந்த துறைகளில் வேலை செய்யும் வாய்ப்பு ஆண்களைவிடப் பெண்களுக்குக் குறைவாகவே உள்ளது. பெண்களுக்கு அவர்கள் கவனிக்க வேண்டிய குழந்தைகள் உள்ளர். அவர்கள் வேலை நேரத்திற் குழந்தைகளை என்ன செய்வது "ஒழுங்குமுறை சாராத துறையில்" அவர்களாற் குழந்தைகளைத் தம்முடன் கூட்டிச் செல்ல முடியும். தாம் வேலை செய்யும் நேரத்தை அவர்களே "தெரிவு செய்ய" இயலும். உலகில் நாம் வாழும் பகுதியிலுள்ள பெண்களைக் குறைந்த ஊதியம் பெறும் பகுதி நேர ஊழியர்களாக மாற்றுகிற நிலைமைகளிற் சில, மூன்றாமுலகின் பெண்களை ஒழுங்குமுறை சாராத துறையில் தமக்காகத் தொழில் செய்யும் வணிகர்களாக" மாற்றுகின்றன.



இப்பெண்கள் என்ன செய்கிறார்கள் ஹில்டா ஸ்கொட் 1984ல் வெளியான தனது நூலில், இந்தியாவின் அஹ்மதாபாத் நகரில் "தமக்காகத் தொழில் செய்யும் உழைக்கும் பெண்கள் சங்கம்" என்ற அமைப்பை நிறுவிய எலாபாட் என்பவர் சொன்னதை மேற்கோளாகக் கூறியுள்ளார். அதன்படி, நகரின் உழைப்பாளர்களில் 45 சதவீதமானோரைக் கொண்ட ஒழுங்குமுறை சாராத துறையிற் பெரும்பான்மையானோர் பெண்கள். சங்கத்தின் உறுப்பினர்களில் 97 சதவீதமானோர் சேரிவாசிகள், 93 சதவீதமானோர் எழுத்தறிவற்றோர், 91 சதவீதமானோர் மணமானவர்கள், 70 சதவீதமானோர் குழந்தைகளைத் தங்களுடன் வேலைக்குக் கொண்டு செல்கின்றனர். சிலர், இடையிடையே, உடல் உழைப்பாளிகளாக வேலை பெறுகின்றனர். அவர்கள், தமது தலைகளில் பொருட்களைச் சுமக்கின்றனர் அல்லது வண்டிகளை இழுக்கின்றனர். மற்றோர் தமது வீட்டில் வேலை செய்கின்றனர். அவர்கள் ஊதுவத்திகளையோ சிகரெற்றுக்களையோ உற்பத்தி செய்கின்றனர். அல்லது வாடகைக்குப் பெற்ற தையல் இயந்திரங்களில் கழிவுத் துணி கொண்டு மலிவான உடைகளையோ கம்பளிப் போர்வைகளையோ தயாரிக்கின்றனர். மூன்றாவது பிரிவினர் பழவகை, காய்கறி, முட்டை விற்பனை செய்கின்றனர். இப்பெண்களைப் பாதுகாக்கத் தொழிற்சட்டங்கள் இல்லை. அவர்கள் தமது "வியாபாரத்தைத்" தொடர்வதற்குக் கடும் வட்டிக்கடன்காரரின் நல்லெண்ணத்தை நம்பியிருக்க வேண்டியுள்ளது.

இப்பெண்கள் மூன்றாமுலகின் பெருநகரங்களின் மிகவும் வறுமைப்பட்ட பிரிவினர் என்பதைச் சொல்ல அவசியமில்லை.நைரோபி மாதர் மாநாட்டிற் சமர்ப்பிக்கப்பட்ட இன்னொரு அறிக்கையின்படி, "ஒழுங்குமுறைசார்ந்த" துறைகளிற் மிகக்குறைந்த ஊதியம் பெறும் ஊழியர்கள் பெறும் ஊதியத்திற் கிட்டத்தட்ட அரைவாசியையே ஒழுங்குமுறைசாராத துறையிற் பணி செய்வோர் பெறுகின்றனர் என ஜகார்த்தாவிலும் லேகொஸ்ஸிலும் பொலிவியாவினதும் பெருவினதும் அதிவுறுமைப்பட்ட நகரங்களிலும் நடத்தப்பட்ட ஆய்வுகள் காட்டுகின்றன.

இது எல்லையற்ற ஆழமுடைய துன்பக் கடல். ஆனாலும் இதிலும் மூலதனத்துக்கு இதில் ஒளிமயமான ஒரு மக்கமும் இருக்க முடியுமோ? முதலாவதாகப் பெருமளவிலான வேலையின்மை "ஒழுங்குமுறை சார்ந்த" துறையில் ஊதியங்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது. இரண்டாவதாக, நாம் "வழமையான" சந்தையிற் பெறுவதைவிடக் குறைவான விலையிற் பண்டங்களையும் சேவை களையும் ஒழுங்குமுறைசாராத துறை வழங்குகிறது. வீட்டு உற்பத்திகளான சிகரெற்றுக்கள், உடைகள், உணவு வகைகள் போன்றவற்றை மலிவாகத் தெருவழியே வாங்கக்கூடிய தொழிலாளியால், அவற்றைக் கடைகளில் வாங்குவதற்குத் தேவையானதிலுங் குறைவான சம்பளத்துடன் சமாளிக்க முடியும். "ஒழுங்குமுறை சாராத துறை" என்பது சீவனோபாயத் துறையின் நவீன வடிவம் என ஸ்றக்கியும் ஃபேயும் கூறியுள்ளதை ஹில்டா ஸ்கொட் தனது நூலின் 71ம் பக்கத்திற் தந்துள்ளார்:

கடந்த காலத்தில், குடும்ப உறுப்பினர்களது உழைப்பின் உதவியில்லாமல் குறைந்த ஊதியத்துக்கு உழைக்கும் தொழிலாளியாற் பிழைத்திருக்க இயலாத நிலையில், மூன்றாமுலகின் கூலி உழைப்பாளர்கள் மரபுசார்ந்த கிராமத்தின் சீவனோயபாயத் துறையின் மீது தங்கியிருக்க வேண்டியிருந்த கட்டாயம், நகரங்களுள் மீள நிறுவப்படுகிறது. ஒழுங்குமுறை சாராத துறையின் வளர்ச்சி, உண்மையில், கிராமத்தின் சீவனோபாயத்துறை நகரங்கட்குப் பெயர்வது அல்லது நகரங்களில் மீள நிறுவப்படுவதாகும்"

கிராமங்களின் சீவனோபாயத் துறையில் பெண்ணின் உழைப்பு ஏகாதிபத்தியத்தாற் பெரிதுஞ் சுரண்டப்படுகிறது. எனவே அவர் நகரத்துக்கு இடம் பெயருகிறார். சுரண்டல் அவருடன் சேர்ந்து இடம்பெயருகிறது.


வளரும்......

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்




# சதாம் பிடிபட்டாலும் ஈராக்கிய மக்களின் போராட்டம் ஓயாது!



கடந்த ஏழு மாதங்களாக அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் ஈராக்கில் எதிர் நோக்குகிற கடுமையான எதிர்ப்பையும் உயிரிழப்புக்களையும் அமெரிக்க மக்களுக்கு விளக்குவதற்குத் திணறி வந்தார்கள். இத்தனை எதிர்ப்பும் சதாம் ஹுஸேனும் அவரது கையாட்களும் ஏற்பாடு செய்ததுதான் என்றும் சதாமைப் பிடித்துவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும் என்றும் சொல்லி வந்தார்கள். இதனாலேயே, சதாமின் மகன்மார் இருவரும் அமெரிக்க அதிரடிப்படைகளாற் கொல்லப்பட்டபோது அமெரிக்க ஊடக நிறுவனங்கள் ஆனந்தத்தில் மூழ்கின. ஆனால் அந்த வெற்றிக்களிப்பு மூலம் அமெரிக்க அதிகாரம் எவ்வளவு அநாகரிகமானது என்று உலக மக்கள் அறிந்ததைவிட எதுவுமே மாறவில்லை. நாளுக்கு நாள், அமெரிக்காவுக்கு எதிராக ஈராக்கிய மக்களின் சினம் கூடி வருகிறதே ஒழியக் குறைகிறதாக இல்லை.

இந்த சூழ்நிலையிலேயே அமெரிக்காவின் கொத்தடிமை நிறுவனமாக ஐ.நா. அமைப்பின் செயலாளர் நாயகங்கூடப் பொறுமை இழந்து அமெரிக்கா விரைவில் ஈராக்கியர்களிடம் அதிகாரத்தை ஒப்படைப்பது நல்லது என அறிவித்தார். அவர் விரைவில் ஓய்வு பெற இருப்பதால் கொஞ்சம் தைரியமாகப் பேசினாரோ தெரியாது. எனினும் அமெரிக்கா தன் இழப்புக்களைக் குறைப்பதனால் விரைவில் தனது நேரடியான நிர்வாகத்தைக் கையளிப்பது அவசியம் என்பது அமெரிக்க அதிகார நிறுவனத்துக்கும் விளங்கிற்று. இதன் காரணமாகவே அவசர அவசரமாகப் புதிய ஈராக்கிய நிருவாகத்தை நிறுவும் பணிகள் நடைபெறுகின்றன. எனினும் அமெரிக்காவின் பிரச்சினை ஏதென்றால், தனக்கு விசுவாசமான ஆட்களிடம் ஆட்சிப்பொறுப்பைக் கையளிப்பதும் அவர்களை எவ்வாறு வலுப்படுத்தி ஈராக்கை அவர்கள் மூலம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்பதுதான்.

அதிகாரம் கைமாறுவதற்கு முன் நாட்டின் பாதுகாப்பு நிலவரம் மேலும் மோசமாகுமானால் அது அமெரிக்காவுக்கு அவமானமிக்க பெருந் தோல்வியாகவே கருதப்படும் என்பதும் அவர்கள் அறிந்த விடயமே. இந்தச் சூழ்நிலையில் சதாம் ஹுஸேன் அவர்களிடம் சிக்கி



யது தற்காலிகமான ஒரு ஆறுதலாக இருந்தது. அதன் விளைவாக அமெரிக்கச் சனாதிபதிக்கும் பிரித்தானிய பிரதமருக்கும் தத்தமது நாடுகளில் சரிந்து கொண்டு போன ஆதரவைச் சிறிது நிலைநிறுத்தி உயர்த்த முடிந்தது. ஆயினும் ஈராக்கில் அமெரிக்க விரோத வன்செயல்கள் இந்தச் சில வாரங்களில் மேலும் உக்கிரமாகியுள்ளன. இப்போக்குத் தொடருமேயானால், சதாமைப் பிடித்ததன் மூலம் பெற்றதைவிட மேலும் அதிகமானதை இரண்டு தலைவர்களும் இழப்பார்கள் என்பது உறுதி.

ஈராக்கின் அரசியற் சமன்பாட்டில் அமெரிக்காவுக்கு நம்பகமானவர்களின் வர்க்க அடிப்படையும் சமூகப் பின்னணியும் சதாம் ஹுஸேனினதை விட அதிகம் வேறுபட்டதல்ல. அவர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்குத் தம்மை அடிமைப்படுத்திக் கொண்டதால், அவர்களை ஈராக்கின் தேசிய முதலாளியத்துக்குள் வைத்துக் கருத இயலாது போகின்றதுடன் அவர்கள் தரகு முதலாளிகளாக மட்டுமே அமைய முடியும். இதன் மறுபக்கம் ஏதென்றால், அமெரிக்காவினால் நிலைநிறுத்தப்படும் இந்த அதிகார வர்க்கம் நாட்டின் தேசிய இன முரண்பாடுகளுக்கு நியாயமான முறையில் முகங் கொடுக்க மாட்டாது என்பது தான்.

ஈராக்கின் பெரும்பான்மைச் சமூகமான ஷியா முஸ்லிம்கள், சதாம் தலைமையிலான சுன்னி முஸ்லிம்களின் ஆதிக்கத்தின் கீழ் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழுமாறு ஒடுக்கப்பட்டார்கள். அமெரிக்காவாலும் அதன் பொம்மை அதிகாரத்தாலும் இந்த மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்ய இயலவில்லை. அது மட்டுமில்லாமல் இம் மக்கள் மத ஒற்றுமை காரணமாக ஈரானிய ஆட்சியார்களுடனும் குறிப்பாக, ஈரானிய மதவாதிகளுடனும் நெருக்கமாவார்கள் என்ற பயமும் அமெரிக்க அதிகாரத்துக்கு உண்டு.

முழுமையான சுயாட்சி ஒன்றை அமெரிக்கா பெற்றுத்தரும் என்ற எதிர்பார்ப்பில் நாட்டின் வடக்கில் அமெரிக்காவுக்கு ஆதரவாக நின்ற குர்திய தேசியவாதிகளும் விரைவில் ஏமாற்றத்தையே சந்திப்பார்கள். ஏனெனில் ஈராக்கில் குர்திய சுயாட்சி உருவாவது ஈராக்கை விடக் கூடுதலாகப் பாதிக்கப்போவது அமெரிக்காவின் மிக நெருங்கிய கூட்டாளியான துருக்கியையே. குர்திய மக்களை ஒரு தேசிய இனமாகவோ குர்திய மொழியைத் துருக்கியிற் பேசப்படும் மொழியாகவோ ஏற்க மறுக்கும் துருக்கிய அடக்குமுறை ஆட்சி அதற்குத் தடையாகவே நிற்கும்.

எனவே அமெரிக்கா ஈராக்கில் எதிர்நோக்கும் சிக்கலில் சதாம் ஹுஸேன் ஆதரவாளர்கள் தொடர்பானது மிக அற்பமான பகுதியே. சதாம் ஒரு எதிர்ப்பு இயக்கத்தைத் தொடர்ந்தும் வழிநடத்த இயலுமாக இருந்திருந்தாலுங்கூட, அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகள் விரட்டியடிக்கப்பட்ட பின் அவரால் அதிகாரத்துக்கு மீளும் வாய்ப்பு என்றுமே இருந்ததில்லை, இருந்திருக்கவும் இயலாது.

மறுபுறம், அமெரிக்க அதிகார நிறுவனத்தின் திமிர்த்தனமான போக்கு இஸ்லாமிய, அராபிய விரோத எண்ணங்களையே வெளிப்படுத்துவ தாக முஸ்லிம்களும் அராபியர்களும் பரவலாகவே உணர்கின்றனர். இதன் விளைவாக, இது வரையும் மதச் சார்பற்றதாக இருந்து வந்த ஈராக்கிய மக்களின் எதிர்ப்பியக்கத்திற்குள் மதவாதச் சக்திகள் ஊடுருவ வழி ஏற்பட்டுள்ளது. இது குறுகிய காலத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரானதாக இருந்தாலும், நீண்ட காலத்தில் ஈராக்கின் அரசியல், சமுதாய, பொருளாதாரச் சீரழிவுக்கே வழி கோலும். எனவே தான், ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான மக்கள் இயக்கத்தின தலைமை முற்போக்கான சக்திகள் வசம் இருப்பது முக்கியமாகிறது.

இவை ஒருபுறமிருக்க, தமது தமிழ் நாளேடுகள் சில சதாம் பிடிபட்டதை யிட்டு மகிழ்ச்சியுடன் இருப்பதாகத் தெரிகிறது. அவை சதாமின் கொடுங்கோலாட்சி பற்றிய கட்டுரைகளையும் அவரை அமெரிக்கா விழுத்தியது பற்றியும் பல கட்டுரைகளை வெளியிடுகின்றன. ஆனால் அமெரிக்க, பிரித்தானிய நடத்தை பற்றி அதிகம் விமர்சிப்பதாகத் தெரியவில்லை. இது ஏன்? தமது குறுகிய தமிழ்த் தேசியவாதத்தின் இஸ்லாமிய விரோதப் பரிமாணமாக இவர்கள் இதை வெளிப்படுத்துகிறார்களா?

தமிழ்த் தேசிய இன விடுதலை இயக்கத் தலைமைகளின் சாபக்கேடே சர்வதேச மட்டத்தில் தமது எதிரிகளைச் சரிவர அடையாளங் காணத் தவறியதுதான். வலியவர்களாகத் தெரிகிறவர்களை எதிர்க்கத் தயங்குகிற எவரும் விடுதலைக்கோ விமோசனத்துக்கோ தகுதியற்றோரே.

அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்ப்பதும் ஈராக்கிய மக்களது விடுதலை எழுச்சியை ஆதரிப்பதும் மட்டுமல்லாமல் அந்தப் போராட்டத்தின் நியாயங்களைத் தமிழ் மக்களுக்கு விளக்குவதும் நமது பொறுப்பாக வேண்டும். அதன் மூலம் ஏகாதிபத்திய எதிர்ப்பில் தடுமாறுகிறவர்களது சுயரூபங்கள் மேலும் தெளிவாக மக்களுக்கு விளங்கும்.

---


# இந்துத்துவ ஃபாசிசத்துக்கு உதவியவர்கள் இன்று விலகிக் கொண்டது ஏன்?

இந்தியாவின் மத்திய அரசாங்கம் பாரதிய ஜனதாக் கட்சியின் தலைமையிலானது. இந்துத்துவ பாசிசத்தை நடைமுறைப்படுத்துவதில் அக்கட்சி முன்னிற்கிறது. அயோத்தியில் பாபர் மசூதி இடிப்பு முதல் குஜராத்தில் முஸ்லீம் படுகொலைகள் வரை இந்துத்துவ பயங்கரவாதத்திற்கு பாரதிய ஜனதாக் கட்சி வழிகாட்டி உற்சாகமளித்து வந்த கட்சியாகும். சிவசேனா, விஷ்வ ஹிந்து பரிசத் போன்ற இந்துத்துவ அடிப்படைவாதிகளால் ஜனநாயகப் போர்வையில் வழிநடாத்தப்படுவதுதான் பாரதிய ஜனதாக் கட்சி.

இத்தகைய கட்சியின் தலைமையிலான இருபதுக்கு மேற்பட்ட கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்துதான் மத்தியில் அரசாங்கம் நடைபெற்று வருகிறது. இந்தக் கூட்டணி அரசாங்கத்தில் தமிழகத்திலிருந்து தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய மூன்று கட்சிகள் பங்கேற்று அமைச்சர் பதவிகளும் பெற்றிருந்தன. இவர்கள் திராவிட இயக்கப் பாரம்பரியம் பற்றி இப்போதும் பேசுவதில் வல்லவர்கள். ஆனால் இத்தகையோர் அன்றைய திராவிட இயக்க வளர்ச்சியால் வந்த அற்ப சொற்ப நன்மைகளையும் சாதகமான அம்சங்களையும் பணத்திற்காக பதவிகளுக்காக அதிகார ஆசைக்காக விற்றுப் பிழைப்பு நடாத்திக் கொண்டார்கள்.


திராவிடத் தேசியம், தமிழ்த் தேசியம் பேசிய இத்திராவிட வழிவந்த இயக்கங்கள் தமிழ்நாட்டு ஆட்சி அதிகாரத்தை நன்கு சுவைத்து அனுபவித்து கொழுகொழு எனக் கொழுத்துக் கொண்டார்கள். இவர்களுக்கு தமிழும் தமிழர்களும் தமிழ்நாடும் இரண்டாம் மூன்றாம் தரத்திற்குரியதாகும். எங்கு பதவி அதன் வழி எங்கு பணம் மிதக்குமோ அங்கே சென்று குந்திக் கொள்வதிலேதான் கண்ணும் கருத்தாகினர். இதில் கருணாநிதி, ஜெயலலிதா, வை.கோ., இராமதாஸ் இவர்களில் யாரும் யாருக்கும் சளைத்தவர் அல்லர். இவர்கள் எல்லோரும் பாரதிய ஜனதாக் கட்சியுடன் இணைந்து மத்திய ஆட்சியில் சொத்து சுகம் தேடிக் கொண்டவர்கள் தான்.

திராவிட இயக்க கொள்கைகள் நடைமுறைகள் யாவற்றையும் என்றோ கை கழுவி விட்டு வெறும் பெயர்ப் பலகையில் மட்டும் அதனை இருத்திக் கொண்டு பெரு முதலாளிகள், பெரு நிலப்பிரபுக்களுடன் கைகோர்த்துக்




கொண்டவர்கள். அதனால் மாநில ஆட்சியில் மட்டும் திருப்தி காணாது மத்திய ஆட்சியிலும் பங்கேற்றவர்கள்.

தமிழர்களுக்கு எனத் தனியான மானம் ரோசம் உண்டு என அடுக்கு மொழியில் பேசுவதில் வல்லமை கொண்ட அதே திராவிட இயக்கத் தலைமைகள் தான் பாரதிய ஜனதாக் கட்சித் தலைமையிலான இந்துத்துவ பாசிச ஆட்சிக்கு தம்மை விலை பேசி விற்றுக் கொண்டவர்கள். தனி மனிதனுக்கு இருக்கும் ரோசம் மானம் சுய கௌரவம் கூட இக்கட்சிகளுக்கு கிடையாது. அப்படி இருந்திருந்தால் கறுப்புச் சால்வையைக் கடைசிவரை தோளில் சுமந்து கொண்டு திராவிட இயக்கத்தின் உண்மையான வாரிசு தானே எனப் பேசிவந்த வை.கோ.வை பொடாச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்த அன்றே மத்திய அரசில் இருந்து ம.தி.மு.க. வெளியேறி இருந்திருக்க வேண்டும். ஆனால் இரண்டு அமைச்சர்களான கண்ணப்பன் செஞ்சி இராமச்சந்திரன்



ஆகியோரை அண்மைவரை அதே ஆட்சியில் ஒட்டி வைத்திருந்த பதவி மனப்பாங்கு இருக்கிறதே அதுதான் இன்றைய திராவிட இயக்க மனப்பாங்காகும்.

இன்று கருணாநிதிக்கு எங்கிருந்தோ ரோச நரம்பு வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. அண்மையில் மத்திய அரசில் இருந்து தி.மு.க. விலகிக் கொள்ளும் தீர்மானத்தை எடுத்து விலகியது. அதுவரைக்கும் மானம் சுய கௌரவம் இழந்து இன்றும் பொடாச் சட்ட மூலம் சிறையில் இருந்து வரும் வை.கோ. தலைமையிலான ம.தி.மு.க.வும் மத்திய அரசில் இருந்து விலகியுள்ளது. அதுவும் தி.மு.க. விலகியிராதுவிட்டால் ம.தி.மு.க. இறுதிவரை அடித்தாலும் உதைத்தாலும் சிறையில் தள்ளினாலும் நாம் உங்கள் அடிமை என்றே இருந்திருப்பார்கள். இன்று விலகியுள்ள தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் பாரதிய ஜனதா ஆட்சி கொண்டு வந்த பாசிசச் சட்டமான பொடாவிற்கு வாக்களித்து சட்டமாக்கியவர்கள் என்பதை எல்லோரும்



அறிவார்கள்.

கருணாநிதியின் கடைசிக் கால ஆசை தி.மு.க.வை எப்படியும் தமிழகத்து ஆட்சிச் சிம்மாசனத்திற்கு கொண்டு வந்து சேர்த்து விடவேண்டும். அதனைத் தனது வாரிசான மு.க. ஸ்ராலினின் கைகளில் ஒப்படைத்து தமிழகத்தின் வாரிசு முதல்வராகக் காண வேண்டும் என்பதாகும். அதற்குரிய கூட்டல், கழித்தல், பிரித்தல் கணக்குப் போட்டே கருணாநிதி மத்திய அரசில் இருந்து விலகியுள்ளார். அடுத்த கூட்டு யாருடன் எந்தெந்த பதவிகள் மத்தியில் கேட்பது எல்லாம் கருணாநிதியின் "சாணக்கிய அரசியலில்" ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டே இருக்கும். அவ்வாறே மாநில சட்டசபையில் ஒரு ஆசனம் கூட இல்லாத ம.தி.மு.க., வை.கோ.வின் சிறையிருப்புடன் கணிசமான ஆசனங்களைப் பெறலாம் எனக் கணக்கிட்டு நிற்கிறது. அதனால் தான் தி.மு.க. மத்திய ஆட்சியிலிருந்து விலகியபின் தான் இருப்பதால் நஷ்டம் ஏற்படலாம் என எண்ணியதில் வியப்பிருக்க முடியாது.

இவர்கள் இருக்குமட்டும் இருந்து இந்துத்துவ பாசிச ஆட்சியின் சகல பிற்போக்கு நடவடிக்கைகளுக்கும் ஆதரவு கொடுத்து ஒத்துழைப்புச் செய்து விட்டு இப்போது புனிதர்களாக மாறி வெளியேறி நிற்பது வேடிக்கை தரும் நிகழ்வாகும். ஆனால் இவர்கள் தமிழக மக்களுக்கு செய்த துரோகத்தையும் பாவத்தையும் காவிரி ஆற்றில் தண்ணீர் வந்து நிரம்பும்போது கழுவினாலும் போக மாட்டாது. தமிழகத்து பெரு முதலாளிகள், நிலவுடமையாளர்கள், பல்தேசிய நிறுவனங்கள், மத நிறுவனங்கள் என்பனவற்றின் அசல் பிரதிநிதிகளாகவே திராவிட இயக்க வாரிசுகள் எனப்பட்ட சகலரும் திகழ்கிறார்கள் என்பதே உண்மையாகும். தமது பதவி, பணம், சொத்து, சுகம் என்பனவற்றுக்காக உயர் வர்க்கங்களுடனும் அவர்களது அரசியல் கட்சிகளுடனும் எங்கேயும் எப்போதும் இணைந்து நிற்பதே கருணாநிதி, ஜெயலலிதா, வை.கோ., வகையறாக்களின் கேடு கெட்ட அரசியல் நிலையாகும். தமிழகத்தில் திராவிடத் தேசியம், தமிழ்த் தேசியம் பேசியோரின் இறுதி நிலை இவ்வாறுதான் உள்ளது என்ற உண்மைகளைத்தான் இன்று காண முடிகின்றது. இவற்றுக்கும் அப்பால் தமிழக மக்கள் அரசியல் உண்மைகளையும் ஏமாற்றுக்களையும் கண்டு கொள்ளும் காலம் விரைவாக வளர்ந்தே வருகிறது என்பதை இத்தகைய ஆளும் வர்க்க அரசியல் நடிகர்களால் அதிக காலம் ஏமாற்ற முடியாது.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் [21]

## ஆளுக்குப் பத்துப்பேர் ஊருக்கு நூறுபேர்!

இரு வேறு உலகங்கள் இரு வேறு மனிதர்கள் என்பது உலகத்தியற்கை யாகும். வள்ளுவரின் குறள் மொழியில் கூறுவதானால்,

'இருவே றுலகத் தியற்கை திருவேறு தெள்ளிய ராதலும் வேறு.' என்பதாகும். பணப்பித்திலுழலும் உளச் சிக்கலுடைய தனியுடைமைக் கொள்கையுடையோர் எக்காலத்திலும் தெள்ளிய அறிவுடை யோராதல் சாத்தியமல்ல. ஆதலால் 'இழப்பதற்கு எதுவுமற்றவர்கள் உழைப்பாளர். ஆனால் வெல்வதற்கு உலகை உடையவர் ஆவார். அத்தகைய உழைப்பவர் அதிகாரம் உலகில் நிறுவப்படுவதன் மூலம் மட்டுமே தனியுடைமைப் பித்து தகர்க்கப்படும். தனியுடைமைத் தகர்ப்பின் மீது பொது வுடைமைக்கான அத்திவாரம் கட்டி யெழுப்பப்படும். உலகமும் இயற்கையும் உயர்வர்க்க மானுடப் பிசாசுகளிட மிருந்து மீட்கப்பட்டு உழைப்பாளி மக்களுடைய பொதுமைக்காகச் சமர்ப் பணம் செய்யப்படும். இத்தகு வரலாற்றுப் பொருள் முதல்வாத இயங்கியல் விதியினின்று விலகி பிரபஞ்ச வெளியி லிருந்து இப் பூமிப்பந்தை எவராலும் உருட்டிச் சென்றுவிட உலகத்தியற்கை விஞ்ஞானமும் சமூக அரசியல் விஞ்ஞா னமும் அனுமதிக்காது என்பதை உழைக்கும் மக்களின் மாக்ஸீயம் எமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

கடந்த தசாப்த காலத்துக்கு முதல்வரை தமிழ் மக்கள் மத்தியில் வாழ்ந்து எம்மை நெறிப்படுத்தி வழிகாட்டிய தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் சுட்டிய அரசியல் மார்க்கமே இலங்கைத் தமிழ் மக்கள் கண்டு கொள்ள வேண்டிய அரசியல் பாடமாகும். தமிழ் தேசியத்தின் தலைமையை தரகு முதலாளிகளிடமோ, பெரு முதலாளிகளிடமோ, சிறு முதலாளிகளிடமோ, பல்தேசியக் கொம்பனிகளின் உள்ளூர் பண முதலைகளிடமோ இன்னும் விட்டுவிட்டு அரசியலில் பேசா மடந்தையராக உழைப்பாளி மக்கள் ஒரு போதும் ஒதுங்கியிருந்துவிட முடியாது. எனவே தான் தமிழ்த் தேசியத்தின் வரலாறு, நடந்து வந்த பாதையில் மூன்று கட்டத் தலைமைகளைச் சந்தித்து வந்துள்ளது. இவற்றினூடாக மக்கள் அனுபவித்த துன்பங்களும் கொடுமைகளும் சவால் கொண்ட போராட்ட சுவாலைகளும் அதிகம். ஆனால் அவற்றின் விளைபயன்கள் பணப் பித்துடைய தமிழ்த் தேசியவாதிகளின் அரண்மனை களையே அலங்கரித்தன. ஆனால் உழைக்கும் வர்க்கத் தலைமை உதாசீனம் செய்யப்பட்டது. இந்த நாட்டுத் தமிழ் தேசியம் உழைப்பாளரின் கைகளுக்கு மாற்றப்பட வேண்டும். நாலாம் கட்டத் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப் பட வேண்டும். இன்னும் நெருப்பாற்றை நீந்திச் செல்ல இந்நாட்டு மக்கள் நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர். இதனையே அண்மைக்கால சர்வதேச உறவுகளும் நெருக்கடிகளும் சர்வதேச சதிவலை களும் எமக்குப் பாடம் போதித்துள்ளன.

இச்சர்வதேசச் சதிவலையை தமிழ் மக்கள் மட்டுமன்றி இலங்கையில் வாழும் பல்லினத் தேசிய சக்திகளும் மக்களும் எதிர் கொள்கின்றனர். முதலாவதாக எமக்கு முன் நிறுத்தப்பட் டுள்ள வினாக்குறி இச்சதிவலையில் சிக்கி நாம் சீரழியப் போகிறோமோ? பழைய வரலாற்று மத இனவெறி அடிப்படைவாதச் சேற்றுக்குள் மூழ்கப் போகிறோமா? அல்லது இரண்டாவ தாக, மக்கள் அனைவரும் உழைக்கும் மக்கள் என்ற ஓருலக சிந்தனையில் உலகமயச் சதிவலையைச் சவாலாக ஏற்று - பல்லினப் பண்பாடுடைய - சர்வதேசியச் சிந்தனையின் அடித்தளத்தில் ஒன்றுபட்டுச் சமாதானப் புறாக்களாக மாறி உலகமய வேடர் விரித்த வலையைத் தூக்கியபடி உயரப் பறந்து தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் சரியான அரசியல் மார்க்கத்தின் திசைவழியைத் தீர்மானிக்கப் போகிறோமா?

இவ்விரு கேள்விகளில் இந்த நாட்டின் மண்ணின் உப்பில் விளைந்த உதிரத்தை யுடைய உழைப்பாளர் தேர்ந்து கொள்ளும் திசைமார்க்கம் என்பது எமது அனுபவ பாடத்தினூடாக இரண்டாவது கேள்விக்கான பதிலே யாகும் எனத் தீர்மானிப்பதைத் தவிர வேறு எவ்வழியினையும் இனியும் சகித்துக் கொள்ள முடியாது.

எமது நாட்டில் வறுமைக் கோட்டின்கீழ் கிராமங்களில் - குச்சுக் குடிசைக்குள் கொலுவிருக்கும் கோபத்தை மெச்சும் உழைப்பாளர் உலகம் ஓரணி திரள வேண்டும். தமிழ்த் தேசியத்தின் குறுநிலப்பித்தைக் கேள்விக்குட்படுத்த வேண்டும்.

'நாட்டை யெல்லாந் தொலைத்தாய்
- அண்ணே நாங்கள் பொறுத்
திருந்தோம்.
மீட்டும் எமை யடிமை செய்தாய்,
மேலும் பொறுத்திருந்தோம்.................
இரு பகடை யென்றாய், - ஐயோ!
இவர்க் கடிமை யென்றாய்!
'இது பொறுப்பதில்லை, - தம்பி!

### செண்பகன்

எரிதழல் கொண்டு வா,
கதிரை வைத்திழந்தான் - அண்ணன்
கையை எரித்திடுவோம்.'

என்ற பாரதியின் பாஞ்சாலிசபத வீமன் பாத்திரங்களாக உழைப்பாளர் உலகை ஆளும் தகுதி பெற்றுச் சபதம் செய்ய மக்கள் அனைவரும் தயாராவோம்.

'தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்' எனுமியற்கை
மர்மத்தை நம்மாலே உலகங் கற்கும்
வழிதேடி ....... கருமத்தை
மேன்மேலுங் காண்போம்'.

ஆயின் நமது கருமங்கள் எவையென நாம் திட்டவட்டமாக தீர்மானித்துச் செயற்படல் வேண்டும்.

ர்ந்த அனுபவ பாடமாகும். சுற்றிச் சுற்றி ஏறினால் மட்டுமே மலைமீது உயரச் செல்ல முடியும். குறுக்கு வழிகள் சாண் ஏற முழஞ்சறுக்குவதாகவே முடியும். சறுக்கு மரச் சங்கதியாகவே மாறும். எனவே பல்லினத் தேசியங்களிடை யேயும் பகைமுரண் தவிர்த்து சிநேக உறவு பூணுவதும் புரிந்து கொள்வதும் பல்லினப் பண்பாட்டுப் பூங்காவில் உலாத்த எமது உள்ளத்தையும் உடலையும் அனுமதிப்பதன் மூலமே சமூக மாற்றத்தை சாதிப்பது சாத்திய மாகும். அதன் மூலமே மேல்நிலை எய்தும் வெற்றியை தரிசிக்க முடியும்.

அடுத்த பத்தாண்டுகள் என்பது இன்றைய சந்ததியினராக வாழும் எமது தோள்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன. சமூகந்தானாய் மாறும் என்று மக்கள் தாமுண்டு, தம் அலுவலுண்டு என்று அரசியலிருந்து ஒதுங்கி விலகித்தூர ஓடமுடியாது, உழைப்பாளர் ஓட ஓட, மேட்டுக் குடியினர் இலேசாகத் துரத்தியதே வரலாறாகி விட்டது. எதிர்காலம் உழைப்பாளிக்குரியது. எனவே நிகழ்காலம் வெகுசனங்களின் கருமங்களை வேண்டி நிற்கின்றது.

வெகுசனங்கள் வேற்றாரின் வரவை எதிர்பார்த்து, கரங்களை உயர்த்தி நீட்டி வரவேற்று 'ஐயா, அம்மா வாருங்கோ' என்று இரந்துண்டு வாழ்ந்த கதை இறந்த கால வரலாறாகட்டும். மக்களின் வறுமையைத் துடைக்க மக்களே ஒன்றுபடுவோம். எமது பின்தங்கிய கிராமங்களைச் சுற்றிப்படர்வோம். சுயசார்பும் தன்னிறைவும் காண அவ்வப் பிரதேசங்களின் அக நிலைமைகளைப் பரிசீலிப்போம். எமது மண்வளத்தையும் தண்ணீர் வளத்தையும் பாதுகாப்போம். மண்ணையும் நீரையும் மற்றவன் கபளீகரம் செய்ய அனுமதியோம். எமது காற்றைச் சுத்தப்படுத்துவோம். அசுத்தப்படுத்தும் அடாவடித்தனங்களை அப்புறப்படுத்துவோம்.

**தமிழ்த் தேசியத்தின் தலைமையை தரகு முதலாளிகளிடமோ, பெருமுதலாளிகளிடமோ, சிறு முதலாளிகளிடமோ பல்தேசியக் கம்பனிகளிடமோ அதன் உள்ளூர் பண முதலைகளிடமோ அன்றி இவர்களுக்குப் பணிபுரிய நிற்கும் மேட்டுக் குடிகளிடமோ விட்டுவிட்டு உழைப்பாளர்கள் பேசாமடந்தைகளாக இருக்க முடியாது.**

'முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுவுடமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகிற்கிது வோர் புதுமை' என்ற

பாரதி கண்ட கனவை வசப்படுத்தி நிசப்படுத்தும் நிதர்சனத்தின் புத்திரர்களாக உழைப்பாளர் அனைவரும் ஒன்று படவேண்டும்.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தாற் பிறகெது வேண்டும்'

பாரதியின் இந்த மந்திர வாசகம் மக்களின் புரட்சிகர விஞ்ஞானமாக எமது உழைப்பாளரின் உலகச் சுலோகமாக எங்கும் ஒலிக்கிறது.

'உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்! ஒடுக்கப்பட்ட தேசங்களே ஒன்றுபடுங்கள்' இலங்கையில் உள்ள ஒடுக்கப்பட்ட தேசங்களாக விளங்கும் தமிழர், முஸ்லீம், மலையகத்தவர் தத்தமது தேசிய இனங்களை அடையாளப்படுத்தும் அதேவேளையில் உலகத் தொழிலாளர் ஒற்றுமை பேணுவோராக - சிங்கள உழைக்கும் மக்களின் அணியையும் அரவணைக்கும் விரிந்த மனப்பக்குவம் கொண்டோராக உருப்பெறுவதன் மூலம் மட்டுமே அவரவர் குறுந்தேசியக் கோளாறு களைக் களைய முடியும் என்பதுடன் வெற்றியை நோக்கிச் சகல தேசியங்களும் பயணிக்க முடியும்.

'சுற்றி ஏறிடினும் பாதை ஆகினும்
தூக்கி நம்மை உயர்த்திடுமே அது
வெற்றி என்பது மேல் நிலை எய்துதல்
விரிந்த விண்ணிடை மேல் உலாவுதல்'

என்ற முருகையனின் இன்ப இலக்குக் கான வெற்றியை சாதித்து மேல் நிலை எய்தலாம். சுருக்க வழிமுறைகளும் குறுக்கு வழி காட்டல்களும் இதுவரை மக்கள் ஏற்கனவே சகித்த இன்பங் களையும் சிதைக்கவே செய்துள்ளன என்பது உழைப்பாளர்களின் உள்ளா

கிராமங்களிலும் நகரங்களிலும் கருமங் கள் அனைத்திலும் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக இணைவோம். திட்டமிடுவோம். நடைமுறைப் படுத்துவோம். நடைமுறைச் செயற்பாடு மட்டுமே மாற்றத்தை விளைக்கும். எனவே மீண்டும் மீண்டும் ஒன்றுபடு வோம். தமிழர் பண்பாட்டுப் புரட்சியைத் தமிழர் தாயகத்தில் சாத்தியமாக்கு வோம். அனைவரும் மாக்ஸிய சத்தியத்தின் நேர்கோட்டில் உண்மையை கண்டுகொள்வோம்.

எமது சமூக வாழ்வே எமக்கு ஆதாரமாகும். உற்பத்தியைப் பெருக்கும் உழைப்பாளிகளே எமது தலைவர் களாவர். எமது கிராமங்களில் தனிமனித அந்தஸ்தில் டொக்டர், இன்ஜினியர், எக்கவுண்டன், படைஅதிகாரி, வர்த்தகர் என்பவர்களுக்கு கொடுக்கும் அந்தஸ்த் தை மீள் பரிசீலனை செய்வோம். தொழிலாளி, விவசாயி, ஆசிரியர், எழுத்தாளர் உள்ளிட்ட உழைப்போர் என்போரை தமிழர் சமூக அந்தஸ்த்தில் உயர வைப்போம். அவர்களின் தலைமையை சிரமேற்கொண்டு பணிசெய்ய அனைவரும் தயாராவோம்.

அகத் திருமணச் சாதிச் சம்பிரதாயங் களுக்கும் அப்பால் சகலரும் சம்பந்தி களாவோம். புத்தகங்கள் வாசிப்போம். அறிவைப் பெருக்குவோம். விவாதிப் போம். உடன்படுவோம், முரண்படுவோம் ஆனால் ஒன்றுபடுவோம். செயற்படு வோம்.

நாம் ஒவ்வொருவரும் பத்துப் பத்துப் பேராக அணிதிரள்வோம். ஒவ்வொரு ஊரிலும் நூறு பேராக ஒன்றுபடுவோம். அடுத்த தசாப்தம் உழைப்பாளரின் ஒற்றுமைக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கிறது. 'இயற்கை மருமத்தை நம்மாலே உலகங்கற்கும் கருமத்தை மேன்மேலும் காண்போம், நாம் தயார. நீங்கள் தயாரா? நேரில் சந்திப்போம். ●




## நவீன கலை இலக்கியக்கியப் போக்குகளும் மாக்ஸியமும்

மாக்ஸியமும் கலை இலக்கியக்கியங்களும் பற்றிய விவாதங்களுக்கு நீண்ட வரலாறுண்டு. எனினும் மாக்ஸியம் கலை இலக்கியக்கியங்களைச் சமுதாய அடிப்படையிலேயே நோக்குகிறது என்பதிற் கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை. வர்க்க சமூகத்தில் வாழும் மனிதர் ஒவ்வொருவரது செயல்களும் சிந்தனைகளும் அவர்களது வர்க்கச் சார்பின் முத்திரை பதித்தே இருக்கும் என்பதிலும் மாக்ஸியவாதிகள் முரண்பட முடியாது. ஆயினும் வர்க்கச் சார்பு மட்டுமே ஒருவரது சிந்தனையினதும் செயலினதும் அடையாளமல்ல. மனித சமூகத்தில் தனது சமகால இருப்புக்கும் மேலாக வரலாற்று வழி அனுபவத்தின் திரட்சியையும் தனது அடையாளமாகக் கொண்டுள்ளது. சமூக வர்க்கங்களும் வெவ்வேறு சமூகங்களும் ஒன்றின் மேல் ஒன்று பாதிப்பைச் செலுத்திய வாறுள்ளன. எனவே தான் யாந்திரிகமான முறையில் எதையும் அடையாளப் படுத்துவது இயலாததும் தவறானதுமாகும்.

*மறுபுறம் இத்தகைய வர்க்க சமூகப்பார்வை சார்ந்த அடையாளத்தை அறிவதில் உள்ள சிக்கல்களையும் முடிவுகளை வந்தடைவதில் அகச்சார்பான சிந்தனைகளின் பாதிப்புகளையுங் கருத்திற் கொண்டு இவ்வாறான அடையாளப் படுத்தலைத் தேவையற்றது என்று நாம் ஒதுக்கிவிட முடியாது.

*எந்த ஒரு கலை இலக்கியத்திலும் அதன் உருவமும் உள்ளடக்கமும் முக்கியமானவை. ஒன்றைப் புறக்கணித்து மற்றதை மட்டுமே ஒரு மாக்ஸியவாதி வலியுறுத்த முடியாது. மாக்ஸிய, மெய்யியல் உலகை விளக்குவதை விட உலகை மாற்றுவதே முக்கியமானது என்று கூறுகிறது. எனவே மனிதச் சிந்தனையின் ஒரு வெளிப்பாடான கலை இலக்கியங்களிலும் அந்த நோக்கத்துக்கு முக்கியத்துவம் உள்ளது. இதன் மூலம் உள்ளடக்கம் அடிப்படையானதாகிறது. உள்ளடக்கம் மட்டுமே ஒரு படைப்பைக் கலை இலக்கிமாக்காது. கலை இலக்கியங்கள் மக்களைச் சென்றடைய முடியாது என்றால் அவற்றின் உள்ளடக்கம் எவ்வளவு சரியானதாக இருந்தாலும் அது பயனற்றுப்போகிறது.

*மாக்ஸியம் அழகியலை அவசியமான ஒன்றாக ஏற்கிறது. ஆனால் அது அழகியலை சமூக இருப்பு, வர்க்கச் சார்பு, உலகநோக்கு என்பனவற்றுக்கு அப்பாற்பட்டுக், காலஇடச் சூழல் வேறுபாடற்று நிலையாக நிரந்தரமான ஒன்றாகக் கொள்ளவில்லை அழகியல் அகச்சார்பான பண்புகளை உள்ளடக்கியது என்பதை ஏற்கிறது அது மட்டுமன்றி ஒரு சமூகத்தில் ஆதிக்கஞ் செலுத்துகிற சிந்தனை சமூகத்தின் அறவிழுமியங்கள் போன்று அழகியல் விழுமியங்களையும் தீர்மானிக்கிறது என்பதையும் மாக்ஸியம் ஏற்கிறது.

* ஒரு மாக்ஸியவாதி ஒரு படைப்பை மதிப்பிடும் போது அதன் சமூகப் பார்வையும் பயன்பாடு சார்ந்துதன் மதிப்பீடுக்ளை முன்வைப்பது இயல்பானதும் தேவையானதும் ஆகும். இவ்வாறே கலை இலக்கிய வடிவங்கள் பற்றியும் ஒரு மாக்ஸியவாதி சில நிலைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டி வருகிறது.

பல கலை இலக்கிய வடிவங்களின் தோற்றமும் வளர்ச்சியும் சமூகத்தில் ஒரு வர்க்கத்தின் எழுச்சியுடன் தொடர்புடையதாக இருக்கக் கண்டிருக்கிறோம். அவ்வாறான கலை வடிவங்கள் உருவாகும் போது குறிப்பிட்ட தொரு வர்க்கப் பார்வையையும் அவ்வர்க்க நலன்களையும் கொண்ட படைப்புக்களால் அடையாளப்படுத்தப்படுவதை நாம் காணலாம். இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம் என்றாலும் குறிப்பிட்ட ஒரு கலை வடிவம் குறிப்பிட்டதொரு வகையான கருத்துக்களையும் சிந்தனைப்போக்கையும் முன்னெடுப்பதற்கு ஏதுவானதாக இருப்பதாலேயே அது நாடப்படுகிறது என்பது முக்கியமானது.

இவ்வாறான சூழ்நிலைகளின் புதிய கலை இலக்கிய வடிவங்களில் வரும் ஆக்கங்கள் பிற்போக்கானதும் பாட்டாளிவர்க்க விரோதமானதுமான சிந்தனைகள் சார்ந்து படைக்கப்படும் போது அப் படைப்புக்காளை மட்டுமில்லாமல் அவற்றின் வடிவத்தையும் சேர்த்தே விமர்சிக்கிற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. இது சகல வர்க்கங்களது நிலைப்பாடுகட் கீழும் நிகழ்க் கூடிய ஒன்றே. மேலை முதலாளிய வர்க்கங்கள் ஒடுக்கப்பட்ட மக்களது கலை இலக்கியம் பண்பாட்டுக் கூறுகளை இழிவானவை யாகக் கருதி நிராகரித்தவற்றைப் பின்னர் தமதாக்கிக் கொண்டதற்கு உதாரணங் கள் பல உள்ளன. அவ்வாறே ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் பாட்டாளி வர்க்க நோக்கில் உடன்பாடற்றதான ஒரு கலை இலக்கிய வடிவம் காலப் போக்கில் மாற்றங்களுடன் பாட்டாளிவர்க்க நோக்கிற்கமையப் பயன்பட இயலும். இதற்குப் புதுக் கவிதை ஒரு நல்ல உதாரணம்.

* சிறு முதலாளிய தனிநபர்வாதச் சிந்தனையையும் சமூகப்பாங்கான உலக நோக்கின் மறுப்பையும் அடையாளப்படுத்தி மேற்கிலிருந்து யாந்திரிகமான முறையில் உள்வாங்கப்பட்ட புதுக்கவிதை முதலில் மாக்ஸியர்களது எதிர்பைச் சந்தித்ததில் வியப்பில்லை எனினும் அவ் வடிவத்தைப் பேக்கிமொழியின் சந்தத்தின் அடிப்படையில் சமூகச் சார்பான சிந்தனைகளை முன்னெடுக்குங் கருவியாகப் பயன்படுத்தலாம் என்பது நடைமுறை மூலம் புலனானது இவ்வாறே நவீன ஓவியம் பற்றிய பார்வையும் காலத்துடன் மாறியுள்ளது.

எந்த ஒரு பிரச்சினையிலும் மாக்ஸிய நிலைப்பாடுடென்பது சமகால நடைமுறைமீதும் தேவைகள்மீதும் அழுத்தம் வைக்கிறது எனவே நிலவரங்களின் மாற்றமும் புதிய சூழ்நிலைகளும் மாக்ஸியவாதிகளின் கலை இலக்கிய நடைமுறையிலும் பாதிப்பை ஏற்படுத்தாமல் விட முடியாது. அதே வேளை புதியது என்பதற்காகவோ வித்தியாசமானது என்பதற்காகவோ இன்னொரு சூழலிற் செல்வாக்கானது என்பதற்காகவோ எதையும் குருட்டுத்தனமாகப் பின் பற்றுகிற தேவை ஒரு மாக்ஸியவாதிக்கு இருக்க நியாயமில்லை.

* மாக்ஸியக் கலை இலக்கிய நோக்கிற் புதிய கலை இலக்கிய வடிவங்கள் புதிய திறனாய்வு முறைகள் என்பன திறந்த மனதுடனேயே நோக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட கலை இலக்கிய வடிவங்களும் திறனாய்வு முறைகளும் எந்தச் சமூகப்பார்வையையும் வர்க்க நிலைப்பாட்டையும் ஆதாரமாகக் கொண்டவை என்பது முக்கியமான ஒரு கணிப்பாகும். ஒரு குறிப்பிட்ட வடிவமோ அணுகுமுறையோ பிற்போக்கான சிந்தனையாளர்களையே அதிகமாகச் கவருகிறது என்றால் அதற்கான காரணங்களை முதலில் ஆராய்வதும் குறைபாடான பண்புகளைக் களைவதன் மூலம் அவற்றை வலுப்படுத்திச் செழுமைப்படுத்திச் சமூக மேம்பாட்டுக்கான திசையிற் செலுத்த முடியும் என்பதை ஆராயத் தேவை உண்டு. இது மரபு சார்ந்த கலை இலக்கிய விடையங்களிலும் மாக்ஸியவாதிகள் பயன்படுத்துகிற ஒரு அணுகுமுறையாகும்.

அதே வேளை வெளிவெளியாகவே சமூகச் சீரழிவுக்கும் மக்களைப் போதைக்குட்படுத்திப் பணம்திரட்டும் நோக்கிலும் படைக்கப்படுகிறவற்றைப் பற்றிய பார்வை தயவு தாட்சணியமற்ற கண்டனமாகவும் எதிர்ப்பாகவுமே அமைய இயலும்.

* இந்த அடிப்படையிலேயே நவீன கலை இலக்கிய போக்குக்களை ஒரு மாக்ஸியவாதி எதிர்கொள்ள நேருகின்றது அயலிலிருந்தும் நமது சமூகத்தின் வெவ்வேறு அரசியல் சமூக நிலைப்பாடுகள் சார்ந்தும் நம்மை வந்தடைகின்ற விடயங்களை புதுமை ,பிரபல்யம் தனித்துவம் என்ற நோக்கங்களைத் தவிர்த்து எவ்வாறு மக்களுடைய நலன் சார்ந்தும் அவர்களை எளிதாகச் சென்றடையக்கூடிய முறையிலும் புதிய கலை இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தவும் விருத்திசெய்யவும் இயலுமா என்பதே தெரிவின் முக்கியமான அடிப்படையாகிறது.

ஒரு மாக்ஸியவாதி நவீனத்துவம் என்பதற்குத் அதனளவிலேயே முக்கியத்துவம் வழங்குவதற்கில்லை .அதை ஐயத்துடன் புறக்கணிப்பதற்கும் இல்லை. அந்த மயக்கத்துக்கு அப்பால் நின்று அதைச் சமூக நோக்கிலும் பயன்பாடு கருதியும் பலவேறு கோணங்களிலும் மதிப்பிடுவது மாக்ஸியப் படைப்பாளிகட்கும் திறனாய்வாளர்கட்கும் மிக அவசியமானது.

- இமயவரம்பன் -

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# சிறையுண்ட உண்மைகளின் பவனி!

## வடபுலத்து பொதுவுடமை இயக்கமும் தோழர் காத்திகேசனும் நூல் பற்றிய கண்ணோட்டம்

மா.பாலசிங்கம்

ஈழத்து அரசியல், கலை, இலக்கியச், சூழலில் தற்பொழுது இருப்பெடுப்புகள் (stock taking) நடந்து கொண்டிருப்பதைக் காண முடிகிறது. நூல் வெளியீட்டுக் கலாசாரம் இதை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதையும் நோக்கர்களால் அவதானிக்க முடிகின்றது. இது இங்கு மட்டு மன்றித் தமிழகத்திலும் மிகச் செழிப்பான முறையில் நடத்தப்படுகிறது. முன்னோடி இலக்கியவாதிகள், அரசியல் வாதிகள் ஆகியோரது மக்கள் சார்ந்த பணிகள் ஒன்றிணைக்கப்பட்டு நூல்களாக ஆவணப்படுத்தப்படுகின்றன. இப்பெறுமதியான முயற்சி எமது இளைய தலைமுறையை கருத்திற் கொண்டே செய்யப்படுகின்றது என்பது ஓர் இனிய செய்தியாகும்.

எனவே சென்றவைகளைக் கணக்கெடுக்காமல் இருப்பவைகளை எதிர்காலத் தலைமுறைக்கு நிரந்தரப்படுத்தும் கருதுகோளோடு ஆரம்பிக்கப்பட்டதே இந்த இருப்பெடுப்பு! மூத்தோர்கள் பலரிடம் அரிய மனப்பதிவுகள் உண்டு. அவர்களை இழந்து விட்டால் இத்தகவல்களும் கிடைக்காமல் போகலாம் என்ற மனப் பிராந்திபும் இதற்கு அருட்டுணர்வாகச் செயல்பட்டுள்ளது.

இத்தகைய உயரிய உன்னத சிந்தனை மலர்வின் அலுவடைதான் 'வடபுலத்து பொதுவுடமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும்' என்ற நூலாகும். பல தேடல்கள், ஆய்வுகள் என்பனவற்றை மேற்கொண்டு இந்தநூலை வெளிக் கொணர்ந்தவர் புதிய ஜனநாயகக் கட்சியின் பொது செயலாளரும் பத்திரிகையாளருமான தோழர் சி.கா.செந்திவேல்.

தோழர் சி.கா.செந்திவேலின் சோசலிசப் பரப்பு மிகவும் விசாலமானது. சிறந்த பத்திரிகையாளர், மேடைப் பேச்சாளர், ஒடுக்கப்பட்ட பாட்டாளிவர்க்கத்தின் வெறும் பார்வையாளராக இருக்காது அவர்களது அவலங்களிலிருந்து அவர்களை மீட்டெடுக்க நடாத்தப்பட்ட சகல போராட்டங்களிலும் தானும் பங்காளியாகித் தனது முழு வாழ்வையும் பொதுவுடமை இயக்கத்திற்கு அர்ப்பணித்தவர். இதனால் அரச படைகளின்வன்முறைக்கு இலக்காகி அடி, உதைகளைப் பெற்றவர். எனவே யாழ்ப்பாண பஸ் நிலையத்தை மடிப்புக் குலையாத உடைகளோடு அப்பொழுது சுற்றிவலம் வந்த சிலர் தற்பொழுது தம்மை அசல் பொதுவுடமைவாதிகள் பஞ்சமர் போராளிகள் எனத் தமது ஊதுகுழல்கள் மூலம் பம்மாத்துச் செய்து கொண்டிருக்கையில் தோழர் சி.கா.செந்திவேல் தானே உண்மையான பஞ்சப்பட்ட மக்களுக்காகவும், தொழிலாளர் வர்க்கத்திற்காகவும் மார்ச்ஸிய சித்தாந்தத்திற்காகவும் சலியாது உழைக்கும் போராளியென நிறுவக் கூடிய ஏராளமான சான்றுகள் அவர்களிடமுண்டு. இதை மக்களும் ஏற்றுக் கொள்ளலாம். உண்மையும் அதுதான்.

இந்நூலைப் படித்த பின்னர் இலங்கை இடதுசாரி இயக்கத்தின் வரலாறு இந்த இயக்கம் ஏற்படுத்திய தாக்கம் என்பன மனதிற் குவிகின்றன. லங்கா சமசமாஜக்கட்சி தான் இலங்கையில் 1935.12.18 ஆம் திகதி தோற்றம் பெற்ற இலங்கையின் முதலாவது இடது சாரி இயக்கமாகியதை இந்நூலில் எதுவித காழ்ப்புணர்ச்சியுமின்றி மிக நேர்மையோடு சொல்லப்பட்டுள்ளது. 1945 இல் மனிதப் புனிதன் தோழர் மு.கார்த்திகேசனின் யாழ்ப்பாண வருகையே வடபுலத்தில் பொதுவுடமைக் கட்சிக்கான வித்தை ஊன்றியதாம்! ஏலவே வடபுலத்தில் இயக்கம் கொண்டிருந்த முற்போக்குச் சிந்தனையுடைய வாலிபர் காங்கிரஸின் ஆர்வலர்களை தோழர் மு.கா தன்னோடு இணைத்துப் பொதுவுடமைக் கட்சியை வளப்படுத்தினார். அவருக்கு உதவியாக அப்போதைய கல்விமான்களும் சோஷலிச சித்தாந்தங்களில் ஈடுபாடு கொண்டிருந்தவர்களுமான தோழர்கள் பொன் கந்தையா, அ.வைத்திலிங்கம், எம்.சி.சுப்பிரமணியம் ஆகியோர் தோழர் மு.கா.வுக்கு உதவுகரமாகினர். சீடர்களாக சு.வே.சீனிவாசகம், ஆர்.ஆர்.பூபால சிங்கம் எம்.ஏ.காதர், ஆகியோர் இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் வடபுலத்து கொடிக்காலாகினர்.

இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் முதன்மைத் தமிழ்த் தோழர்களில் ஒருவரான தோழர் மு.கார்த்திகேசன் கொழும்பு பல்கலைக்கழகப் பட்டதாரியாக இருந்தும், அறுபது ரூபா சம்பளத்தோடு கொட்டா ரோட்டிலுள்ள கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பணிமனையில் பணிபுரிய ஆரம்பித்தவர். பின்னர் கட்சி இவரது பாரிய அர்ப்பணிப்புகளை உள்வாங்கி இவரது குடும்பத்தின் நலனைக் கருதி ஆசிரியர் பணிக்கு விடுப்புச் செய்தது. இருந்தும் தனது தொழிலோடு கட்சிப் பணியையும் மிகத் திருப்தியோடு செய்து மக்கள் நெஞ்சங்களில் 'கொம்யூனிஸ்ட கார்த்திகேசன்' என உறைந்து சகல தோழர்களுக்கும் தோழர் மு.கா எடுத்துச் காட்டாகப் பரிணமித்தார்.

தொழிலாளர்கள், ஒடுக்கப்பட்ட ஏழைகள் தமது அடிப்படைப் பிரச்சினைகளை உணர்வுபூர்வமாக உள்வாங்கிச் சிந்தித்து அதற்கான நேரடிப் போராட்டங்களில் ஈடுபட்டு பழைமைவாதச் சீரழிவுகளையும், தமிழ் முதலாளிகளின் அடாவடித்தனங்களையும் மோதி மிதிப்பதற்கான ஆயத்தங்களை தோழர் மு.கா. இலங்கை பொதுவுடமைக் கட்சியின் முத்திரையில் அமைத்துக் கொண்ட தொழிற் சங்கங்கள், சமூக அமைப்புகள் என்பவை மூலமாகச் சாத்தியப் படுத்தினார். அத்தோடு கந்தபுராணக் கலாசாரம் ஆறுமுகநாவலரின் சிந்தாந்த வழிநடத்தல், சைவவேளாளர் மரபு என்பனவற்றின் கட்டுமானமாக இனங்காட்டிய வடபுலத்து மேட்டுக்குடி மக்களது கட்டுப்பெட்டித் தனமான போக்குகளில் அதிர்வை ஏற்படுத்தி முற்போக்கு வழியில் மாற்றி அமைக்க கார்த்திகேசன் தனது ஊழியத்தை அர்ப்பணித்தார்.

1964, 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் இலங்கையிலும் கட்சிக்குள் உடைவுகள் ஏற்பட்டன. இந்த உடைவுகளின் பிரதிபலிப்புத்தான் மார்ச்சிச, லெனினிச பொதுவுடமை கட்சி, புதிய ஜனநாயகச் கட்சி என்பவற்றின் தோற்றத்திற்கு காரணமாகியது. மாக்ச்சிச, லெனினிச பொதுவுடமைக் கட்சியைப் புதிய ஜனநாயகச் கட்சி எனவும் விழிக்கின்றனர். பொதுவுடமை இயக்கத்தின் இன்றைய நிலை இதுதானென ஆசிரியர் இந்நூலில் உண்மை வழிநின்று விபரித்திருக்கிறார்.

மக்கள் அடைப்படை உரிமைகளுக்கான போராட்டவடிவங்களை வட புலத்து மக்களுக்கு முதலில் இனங்காட்டியவர்கள் பொதுவுடமை சித்தாந்தவாதிகளே என்பதை இந்நூலில் தரப்பட்டுள்ள பல்வேறுபட்ட தகவல்களின் மூலமாக அறியமுடிகிறது.

தேநீர்கடைப்பிரவேசம் ஆலயப் பிரவேசம் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு பொன்னாலை குடிநீர்பிரச்சனைப் போராட்டம் என்பன போன்ற தாழ்த்தப்பட்ட அடி மட்ட மக்களது பிரச்சினைகளில் பொதுவுடமை வாதிகள் கடுமையான ஊக்கம் காட்டி இருக்கின்றனர். தமிழர் நலன்காக்கும் கட்சிகளெனத்தம்மை விளம்பரப்படுதிய கட்சிகள் மேல்தட்டு வர்க்கத்தின் நலன்களைக் காப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். ஊர்வலங்கள், கூட்டங்கள் வேலைநிறுத்தமென்பன சமூகவிரோதச் செயல்களென மக்களை நம்பவைக்க இக் கட்சிகள் முனைந்தன. இதனால் பொதுவுடமைக் கட்சிக்கு அன்று தாழ்த்தப்பட்டோரது கட்சியெனவும் பச்சை குத்தப்பட்டது. ,

ஆற்றல் மிக்க கரங்களில் ஆயுதங்கள் ஏந்துவது தான் மாற்றத்திற்கான வழி என்ற புரட்சிக் கருத்தை அன்றே பொதுவுடமை வாதிகள் வடபுலத்தில் விதைத்தனர். இந்த எடுகோளை உள்வாங்கியவையாக சாதிய தீண்டாமை எதிர்ப்புப் போராட்டங்கள் முகிழ்த்தன. இத்தகைய போராட்டங்களில் தமது பெறுமதிமிக்க உயிர்களைத் துறந்த தியாகிகளின் பெயர்களை பட்டியலிட்டிருப்பது மற்றுமொரு புதிய தகவலாக சமூக எழுச்சியை ஆராதிக்கும் முற்போக்குச் சிந்தனையாளருக்குக் கிடைத்துள்ளது. சின்னர் கார்த்திகேசு,இரத்தினம்,வைத்தி, வன்னியன்குமரேசு, கி.வேலும்மயிலும், மா.சீவரெட்ணம், க.செல்வராசா, மு.கந்தவனம், ச.அரியரத்தினம், க.நல்லப்பு, வெ.அண்ணாசாமி, த.இராசசேகரம் ஆகியோர் சாதியத்தை நேருக்கு நேர் நின்று எதிர்த்து மரணித்த போராளிகளாகக் காட்டப்பட்டுள்ளனர். இதுவரை முதலி சின்னத்தம்பி தான் சாதியத்திற்குப் பலிக்காடாவான தாழ்த்தப்பட்டவன் என எண்ணியிருந்த சாதிய எதிர்ப்புப் பஞ்சமனொருவனுக்குப் இப்பட்டியல் புதியதே! சமூகத்திற்காக தியாகிகளானவர்களை இனங்கண்டு அஞ்சலி செலுத்துவதற்கான வாய்ப்பு இப்பட்டியல் மூலம் அளித்திருக்கின்றது. சாதி எதிர்ப்பு சம்பந்தமாக ஏற்பாடு செய்யப்பட்ட மகாநாடு அரங் கொன்றுக்கு சின்னர் கார்த்திகேசு அரங்கெனப் பெயர் சூட்டப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இத்தகைய முறையில் பஞ்சமர் பிரச்சினையை அனுகிய பொதுவுடமை கட்சி தீண்டாமைக்கான எதிர்ப்பை காட்டிநின்றது. எனவேதான் இக்கட்சி பாராளுமன்றம், உள்ளூராட்சி மன்றங்கள் எனபனவற்றில் தனது உறுப்பினர்களைப் பெற முடிந்திருக்கின்றது. வடபுலத்து பஞ்சம மக்களது வாக்கு வங்கி இக்கட்சிக்கே பெரும்பாலும் ஆதரவு காட்டியதென்பதை மேட்டுக் குடிகள் ஒப்புக் கொள்கின்றன!

வடபுலத்தில் பரவலாக அன்று பேசப்பட்ட தீண்டமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தோடு தொடர்புடைய மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் பிரவேசப் போராட்டத்தில் அதிமுக்கிய பங்கெடுத்த தோழர் எஸ்.ரி .என்.நாகரட்னத்தின் தீண்டாமை எதிர்ப்புப் பணிகள் குறித்து இந்நூலில் பேசப்பட்டளவிற்கு வேறெங்கும் எழுத்து பதிவுகள் இல்லை எனலாம்! பத்திரிகைகள் கூட இத் தோழரின் தன்னல மற்ற

தொடர்ச்சி 11ம் பக்கம்..

---

### தேசிய இனப்...

6ம் பக்க தொடர்ச்சி.....

மேலாதிக்கத்தை தமக்கு ஆதரவான சக்தி என்ற நம்பிக்கையையும் கொண்டிருந்தனர்.

தமிழ்த் தேசியவாத நிலைப்பாடு ஆயுதப்போராட்ட வடிவம் பெற்ற பின்பும் கூட பேரினவாத ஒடுக்கு முறையின் வர்க்க இயல்பு பற்றியும் ஏகாதிபத்தியத்துடன் அது கொண்டிருக்கும் உறவு நிலை பற்றியும் தமிழ் இளைஞர் இயக்கங்களால் கண்டு கொள்ள இயலவில்லை. இன்றுவரை அந்த நிலை தொடரவே செய்கிறது. சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை ஏகாதிபத்தியமோ அன்றி பிராந்திய மேலாதிக்க சக்திகளோ எதுவரை அனுமதிக்கும் என்பது பற்றிய தெளிவும் தூரநோக்கும் புலிகள் இயக்கத்திடம் எந்தளவுக்கு இருக்கின்றது என்பது பற்றி இன்னும் தெளிவாகப் புலப்படாத ஒன்றாகவே இருந்து வருகின்றது. இவ்விடயத்திலே தான் நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்ற கேள்வி எழும்புகிறது.

இத்தகைய நிலைக்கு அடிப்படைக் காரணம் வர்க்கங்களுக்கு அப்பால் தேசியவாதத்தை ஒரு கோட்பாடாகக் கொண்டமையேயாகும். தேசியவாதம் என்பது பேரினவாத ஒடுக்கு முறையை குறிப்பிட்டளவு தூரத்திற்கு எதிர்க்கும் நிலைப்பாட்டுடன் மட்டுப்படுத்தப் படுகின்றது. குறிப்பிட்ட எல்லைக் கப்பால் வர்க்கம் கடந்த தேசியவாதம் என்பது இருக்க முடியாது. அது ஒன்றில் தொழிலாளர்கள் விவசாயிகள் தாழ்த்தப் பட்ட மக்கள் பெண்கள் என்ற வர்க்கப் பிரிவுகளுடன் ஐக்கியப்பட்டு சிங்கள மக்களை நேச சக்தியாகக் கொண்டு முன் செல்ல வேண்டும். அல்லது தமிழர் மத்தியிலான உயர்வர்க்க மேட்டுக்குடி வர்க்க சக்திகளுடன் கைகோர்த்து ஏகாதிபத்திய அரவணைப்புடன் சிங்கள பெருமுதலளித்துவ சக்திகளுடன் சமரசம் காணுதல் வேண்டும். எனவே தமிழ்த் தேசியம் தனது போராட்டப் பயணத்தில் இப்போது ஒரு முச்சந்தியை வந்தடைந்து நிற்கிறது. அது எடுக்கப் போகும் பாதை எது என்பதை தீர்மானிக்க வேண்டிய தருணம் வந் துள்ளது. இதற்குரிய மூலோபாயம் இன்றி வெறும் தந்திரோபாயங்களால் மட்டும் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னேடுத்துச் செல்ல முடியாது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையில் மாக்சிச லெனினிச வாதிகளாகிய நாம் ஒரு தெளிவான நிலைப்பாட்டை வகித்து வந்திருக்கின்றோம். வரலாற்று ரீதியாக பேரினவாதத்தின் வளர்ச்சியும் அதன் ராணுவ ஒடுக்கு முறையின் கொடூரத்தையும் அடையாளம் காண்பதிலும் இலங்கையின் இன்றைய பிரதான முரண்பாடு இன முரண்பாடு என்பதையும் தெளிவாக்கியுள்ளோம். அதேவேளை அடிப்படையான வர்க்க முரண்பாடாக இருந்துவரும் நிலவுடமை முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளுக்கும் மக்களுக்குமிடையிலான முரண்பாட்டையும் தெளிவுபடுத்திக் கொண்டோம். இவ்விரு பிரதான–அடிப் படை முரண்பாடுகளுக் கிடையிலான உள்ளார்ந்த உறவுநிலைகளையும் எமது கட்சிக் காங்கிரஸ் சுட்டிக்காட்டி நின்றமை குறிப்பிடக் கூடிய அம்சமாகும்.

மாக்சிச லெனினிச வாதிகளாகிய நாம் ஆரம்பம் தொட்டே தேசிய இனப் பிரச்சினைக்குப் பிரிவினை பரிகாரம் அல்லவென்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறித் தமிழ் மக்கள் மத்தியில் எமது கருத்தை முன்வைத்திருந்தோம். ஏகாதிபத்தியமும் பிராந்திய மேலாதிக்கமும் எவ்வாறு தேசிய இனப்பிரச்சனையைப் பயன்படுத்திக் கொள்ளும் ஆபத்தையும் தொடர்ச்சியாக எச்சரித்து வந்துள்ளோம். இவற்றை யெல்லாம் இன்றைய சூழலில் வைத்து நோக்குவது பயன் தருவதாகும்.

நாம் என்றும் எமக்குரிய வர்க்கப் போரட்ட நிலைப்பாட்டிலிருந்து விலகியது கிடையாது. பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தைக் கடைப்பிடித்து பேரினவாதத்தை எதிர்க்க முடியாது மௌனித்து நின்ற பழைய இடது சாரிகள் போல் நாம் நடந்து கொள்ளவில்லை அவ்வாறே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தய போது வெறும் ஆயுதக் கவர்ச்சியால் அந்த இயக்கங்களின் பின்னால் மாக்சிச லெனினிச வாதிகள் இழுபட்டுச் செல்லவும் இல்லை. சில தனிநபர்கள் தத்தமது அகவிருப்பு வெறுப்பு அடிப்படையில் தேசியவாதப் பரப்பில் வர்க்க சக்திகளை வளர்த்தெடுக்கலாம் எனநம்பிச் சென்று இறுதியில் தங்களையே இழந்தனர். அதற்கு அப்பாலும் தமிழ்த் தேசியவாத நீரோட்டத்தை வர்க்கப் போரட்டப் பாதைக்குத் திருப்பலாம் என்ற யதார்த்தமற்ற வழிகளில் சென்றதன் மூலம் சில குறிப்பிட்ட இயக்கங்கள் பெயரளவிலேயே மடிந்து சீரழிந்தும் போக வேண்டி ஏற்பட்டன. அவை உச்சரித்த மாக்சிச லெனினிச சொற்றொடர் கூடஅர்த்தமற்றவை யாகிக் கொண்டன. இவர்களது இடது தேசிய வாதம் இருந்த இடம் காணாது தொலைந்த தொன்றாகிக் கொண்டது.

எனவே பேரினவாத பெருமுதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளைப் பிரதான எதிரிகளாகவும் அவற்றின் ஒடுக்கு முறைகளை எதிர்த்து சுயநிர்ணய உரிமைப் போராடத்தை முன்னெடுக்கும் தமிழ் மக்களின் பக்கத்தில் மாக்சிச லெனினிச வாதிகளாகிய நாம் உறுதியாக நின்று வந்துள்ளோம். இதில் எச்சந்தர்ப்பத்திலும் வர்க்க சமரசமோ விட்டுக் கொடுப்போ இன்றி இருந்து வந்துள்ளோம். பல்வேறுபட்ட வெகுஜன இயக்கங்களையும் போராட்டங்களையும் அவ்வப்போது முன்னெடுத்து வந்துள் ளோம். தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமன்றி தெற்கில் சிங்கள மக்கள் மத்தியில் பேரினவாத ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்த்தும் அரசியல் தீர்வை வற்புறுத்தியும் வந்துள்ளோம். சிங்கள மக்கள் மத்தியில் சமாதானத்திற்கான பிரசாரத்தையும் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் அவசியத்தை முன்னெடுக்கும் இயக்கம் வலுப்பெற எமது மாக்சிச லெனினிசக் கட்சியானது தனியாகவும் ஏனைய நேர்மையான இடதுசாரி

தொடர்ச்சி 12ம் பக்கம்..

---

## "இன்னோர் உலகிற்காய் எழுவோம்"

~ இ. முருகையன் ~

I

இன்னோர் உலகம் செய்வதற்காய்
எழுவோம்! என்றோர் குரல் கேட்க
இது யார் குரலோ என வியந்தே
எட்டுத் திக்கும் நோக்குகிறோம்
என்ன பிழையாம் இன்றுள்ள
இந்த உலக ஒழுங்குக்கு?
யாவும் இன்பம் ~ இன்பமயம்
என்று சிலபேர் நினைப்பதுண்டு
பொன்னும் மணியும் பூண்டபடி
பூவும் பழமும் அனுபவிப்போர்
பூலோகத்தைச் சொர்க்கம் எனப்
பூரிப்புடனே போற்றிடலாம்
இன்னற் கடலுள் வீழ்ந்தலறி
இழுபட்டுழலும் மாந்தரெலாம்
இன்னோர் உலகம் செய்வம் என
எழுச்சி கொண்டு பொங்காரோ?

II

சண்டித்தனத்தார், அடாத்தர்கள்
தாமே எல்லா நலன்களையும்
தட்டிப் பறிக்கத் துணிந்து நிற்கும்
துட்டப்பதர்கள், பிறபேரை
மிண்டிப் பெயர்த்து விழுத்திடவும்
மிரட்டித் துவைத்து மசித்திடவும்
விரட்டி அடித்து நொருக்கிடவும்
வேட்டை ஆடி ஒழித்திடவும்
துண்டு படுத்தி உறவுகளைத்
துகளாய் இடித்துத் தூசாக்கித்
தொலைந்து வெருட்டிக் குலைக்க எனத்
துணித்து கொடிய செயலெடுப்போர்
அண்டிக் கெடுக்க வழி தேடி
அணாப்பி அளாப்பிக் குழி தோண்டி
அதற்குள் விழுத்த முனைந்திடுவார்:
அதை நாம் என்ன, அறியோமோ?

III

பகட்டுக் காட்டி மயக்கிடுவோர்,
பசப்பிப் பூசி மெழுகிடுவோர்,
பரப்பித் திருட்டு வலைவிரித்துப்
பட்டப் பகலிற் கொள்ளையிட
முகட்டைப் பிரிக்கத் துணிகின்ற
மூர்க்கர் ஆளும் உலகிதனை
முழுதும் கழட்டிப் பூட்டாமல்
முடியாதையா, நலம் காணல்!
சகட்டு மேனியாய் எதையும்
தருமம் என்று காட்டுகிற
சனியன் பிடிச்ச போக்குகளைத்
தட்டிக் கேட்க வேண்டாமோ?
இகத்திற் பொதுமைச் சமன்பாட்டை
இயற்றிக் காட்ட வேண்டாமோ?
இவற்றை முறையாய்ச் சாதிக்க
இன்னோர் உலகு யாம் காண்போம்

IV

வல்லார் வகுக்கும் வாய்க்கால்கள்
வளைந்து நெளியும்
கொடுங்கோல்கள்
மனித மாண்பைக் குழிதோண்டி
மறைத்துப் புதைக்கும் வழிமுறைகள்
பொல்லாக் குள்ளச் சூதர்களின்
பொந்து நிறைந்த பொக்கணைகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கனடாவிலிருந்து கே. டானியல் நினைவுமலர்


செப்றெம்பர் 2003ல் கனடாவிலிருந்து சி.பாலசுப்பிரமணியம், தருமராசா, சிவம் ஆகியோர் தொகுத்து வெளியிட்ட மேற்படி நூல் கே.டானியல் நினைவு விழாக் குழுவினதும் டானியல் குடும்பத்தினரதும் ஒத்துழைப்புடன் வெளியாகியுள்ளது. இந் நூல் டானியலின் பங்களிப்புப் பற்றிய ஒரு ஆவணமாகவும் சாதியத்துக்கு எதிரான வெகுசனப் போராட்டங்களின் பதிவாகவும் தொகுக்கப்பட்டுள்ளது.

இந் நூல் நினைவு நூல் என்ற வகையில் இதில் பல கட்டுரைகள் டானியல் பற்றிய நினைவுக் குறிப்புக்களாக இருப்பது இயல்பானதே. டானியலைப் பற்றிய விமர்சனமாக இல்லாது இவரது பங்களிப்பின் சமூக முக்கியத்துவமே விவரிக்கப் பட்டுள்ளது. எனினும் இது வரலாற்று முக்கியம் வாய்ந்த பல நிகழ்வுகளின் பயனுள்ள ஆவணப்படுத்தல் என்பது பற்றி மறுபேச்சுக்கு இடமில்லை.

சில கட்டுரைகள் டானியலை நன் கறிந்த நண்பர்கள் சிலர் உயிருடன் இல்லாமையாலும் வேறுசிலரிடம் வேளைக்குக் கட்டுரைகளைப் பெற இயலாமையாலும் இங்கு மறு பிரசுரமாகி யுள்ளன 'புலம் பெயர் வாழ்வில் சாதியம்' என்ற சி.சிவசேகரத்தின் கட்டுரை புலப் பெயர்வின் பின்பும் நிலைத்து நிற்கும் சாதியத்தின் மீதான விமர்சனம் என்ற வகையில் மற்றையவற்றினின்று வேறுபடுகிறது. 'யாழ்ப்பாணச் சாதியக் கொடுமுடிச் சரித்திரத்தின் கண்ணாடி டானியல்' என்ற கு.மார்க் எழுதிய கட்டுரையும் 'சாதியத்துக்கு எதிரான போராட்டங்களும் அவற்றின் வரலாற்றுப் படிப்பினைகளும்' என்ற சி.கா.செந்திவேலின் கட்டுரையும் 'ஆறுமுக நாவலரும் சாதியமும்' என்ற செ.கணேசலிங்கனின் கட்டுரையும் 'ஆலய நுழைவுப் போராட்டங்ளும் சாதியமும்' என்ற த.சிவபாலுவின் கட்டுரையும் சாதியமும் அதற்கெதிரான எழுச்சிகளும் பற்றிய பயனுள்ள ஆய்வுகளாகவும் அமைகின்றன.

டானியல் என்ற போராளி பற்றியும் அவரது இலக்கியப்பணி பற்றியும் எம்.ஏ.சி. இக்பால் கணேச லிங்கன், தெணியான், கா.சிவத்தம்பி, வி.ரி. இளங்கோவன், நா.சண்முகதாசன், கே.பி.லிங்கம், எம்.சி.சுப்பிரமணியம், இ.திருநாவுக்கரசு, க.கிருஷ்ணபிள்ளை, செ. திருநாவுக்கரசு, க.கந்தசாமி, செல்வா இலங்கையன், த.சிவபாலு, ம. செல்வராசா ஆகியோரது கட்டுரைகளும் கோவைநேசனின் வதிரி என்ற கவிதையும் பயனுள்ள பண்பான பங்களிப்புக்கள்.

செ.யோகராசா தனது கட்டுரையில் மார்க்ஸிய நோக்குடைய ஏனைய நாவலசிரியர்களது குறைபாடுகளிலிருந்து டானியலும் விடுபட்டவரல்லர் என்று கூறியிருப்பதன் மூலம் மார்க்ஸியப் படைப்பாளிகளின் இலக்கியப் பார்வை பற்றிய தனது நீண்டகால அறியாமையை மீண்டும் நினைவூட்டி யுள்ளார். பிரசாரப் பண்பு செயற்கைப்பாங்கு கலைத்துவக் குறைவு என்பன அவர் மார்க்ஸிய எழுத்தாளர்களது நாவல்கள் பற்றிய குறைபாடுகளாகக் காண்பவை. நேரடி அனுபவம் முற்று முழுதான உண்மைக்கு உத்தரவாதம் என்பதும்



யோகராசாவின் இலக்கிய வாய்ப்பாடுகளும் ஒன்றாகிறது.

திரிபுவாதிகள் மார்க்ஸியத்தை மட்டுமே திரிப்பவர்கள் என்று நினைத்திருப்பவர்கட்கு அவர்களுட் சிலர் உண்மைகளைத் திரிப்பதில் அதிலும் மிக வல்லவர்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாகப் பிரேம்ஜி எழுதியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் நடந்த சாகித்திய விழாவில் இடம்பெற்ற அசம்பாவிதத்துக்கு அன்று முழுப்பொறுப்பையும் ஏற்ற(?) இ.மு.எ.ச சார்பாக விளக்கம் எழுதுகிற போது பழியை டானியல் மீது சுமத்துவதற்கு பிரேம்ஜி தயங்கவில்லை. 1975ல் இ.மு.எ.ச நடத்திய தேசிய ஒருமைப்பாடு மாநாட்டைப் பற்றி எழுதுகிற பிரேம்ஜி அந்த மாநாடு பற்றித் தமிழ் மக்கள் என்ன நினைத்தார்கள் என்பதை மறந்து அதற்கு எதிராக 'டானியலும் அவரது தோழர்களும்' திருகோணமலையில் நடத்திய மாற்று மாநாட்டைக் கண்டிருக்கிறார்.

தேசிய இனப் பிரச்சினையில் திரிபுவாதிகள் செய்த துரோகத்தைப் பற்றிப் பேசும் போது மட்டும் எல்லா இடதுசாரிகளையும் சேர்த்துத் தவறிழைத்தவர்களாகப் பேசுகிற பிரேம்ஜி க்கு அவரது கட்சி 1966ல் இனவாதிளுடன் ஊர் வலம் போனபோது அதைக் கண்டித்தவர்கள் பற்றி நினைவிராது தான். டானியலும் தேசிய இனப் பிரச்சினையில் சரியான நிலைப்பாட்டை எடுக்கத் தவறியதற்கான பழியையும் 'அவர் சார்ந்திருந்த அரசியல் இயக்கத்தின்' மீது சுமத்தும் போது பிரேம்ஜி தனது நேர்மை யீனத்தை நன்றாகவே அடையாளங் காட்டிக் கொள்ளுகிறார்.

லெனினுக்குப் பின்பான தனிநபர் வழிபாட்டுப் பகைப்புலத்தில் ஏற்பட்ட தவறுகளைப் பற்றிப் பேசுகிற பிரேம்ஜி அந்தத் தனிநபர் (ஸ்ற்றாலின்) போன பிறகு தலை தூக்கிய திரிபுவாதம் உலகக் கம்யூனிசத்தை எப்படி உருக்குலைத்தது என்று அறிய மாட்டாதவரா?

இந்த நூலின் மிக நேர்மைக் கேடான பங்களிப்பு பிரேம்ஜி யுடையது. எனினும் டானியல் தனது ஒருநாவலுக்கு எழுதிய ஒரு முன்னுரையும் முன்பு வெளிவராத அவரது சில ஆக்கங்களும் முன் குறிப்பிட்ட பல கட்டுரைகளும் மொத்தத்தில் இந்த நூலை பயனுள்ள வரவாக நமக்கு வழங்கியுள்ளன என்று துணிவாகக் கூறுவேன்.

- தி. கோணாமலை. -

புலையும் கொலையும் சரி என்று
புரட்டிக் காட்டும் வக்கணைகள்
எல்லாம் ஒழிக்க வேண்டாமோ?
இயற்கை நீதி வேண்டாமோ?
இரந்தும் கரந்தும் உயிர் வாழும்
இழிவை ஒழிக்க வேண்டாமோ?
செல்லாக் காசோ சமநீதி?
தில்லு முல்லுக் காரர்களின்
திருகுதாளம் ஒழிவித்துச்
செய்வோம், இன்னோர் உலகினை நாம்

*V*

உலகமயத்தைப் பூசித்தால் ~
ஓம் ஓம் என்று கோஷித்தால்
ஊமை வாயராய் இருந்தே
ஒத்தை ஊதி யாசித்தால்
தலையை ஆட்டி அநீதிகளைச்
சரிதான் என்று சாதித்தால்
தாளம் போட்டுத் தோத்திரித்துச்
சந்தி தோறும் போதித்தால்
நிலைமை எதையும் சரியான
நியாயம் கண்டு பகுத்தாய்ந்து
நிதானியாமல் அலட்சியமாய்
நேரம் தொலைக்க முற்பட்டால்
கலகக்காரச் சூதர்களின்
காலித்தனத்தை எடைபோட்டுக்
கண்டிக்காமல் விட்டுவிட்டால்,
கயமை பெருகி விளையாதோ?

*VI*

வலிந்து வந்து தலையோட்டி
மக்கள் கழுத்தைத் திருகிடுவோர்
வாலை ஒட்ட நறுக்காமல் ~
மாய்மாலத்தை மழுக்காமல்
குனிந்து பணிந்து போய்விட்டால்,
குழைந்து நெளிந்து கும்பிட்டால்,
குடைந்து நுழைய இடம்விட்டால்,
கொடியோர் கொட்டம் பெருகாதோ?
மலர்ந்து புதிய சமஞானம்
மற்றும் புதிய நல நேயம்
வாழ்வில் மானம் ~ சுயமதிப்பு
வளர்ந்து மலர்ந்து விரிவதற்காய்,
தெளிந்த புத்தி, ஆய்வு நெறி
செயலில் நேர்மை, உறுதிவவு
சேர்ந்த புதிய உலகொன்றைச்
செய்ய முயல வேண்டாமோ?

*VII*

பொன்னே போன்ற பொதுமை நெறிப்
புதிய பூமி காண்பதற்காய்,
புத்திசாலித்தனமாக ~
புரட்சிகரமாய் நாம் எழுவோம்
முன்னோர் கண்ட நீதிகளும்
மூத்த பொய்கள் தேய்ந்தொழித்த
முத்துப் போன்ற கொள்கைகளும்
முனைப்புப் பெற்ற விழுமியமும்
பின்னே இனிமேல் வரவுள்ள
பீடும் உரிமைப் பெருமிதமும்
பிறரை மதித்தே உறவாடும்
பிசகில்லாத பெருமனமும்
என்னே, என்னே, என வியக்க
எழும்பி மின்னி ஒளி வீசும்
இன்னோர் உலகைக் காண்பதற்காய்
எழுவோம் வருக, உலகீரே.

**06. 07. 2003 அன்று யாழ். நகரில் இடம் பெற்ற 'இன்னோர் உலகிற்காய் எழுவோம்' தலைப்பிலான கவியரங்கில் இக்கவிதை படிக்கப்பட்டதாகும்**

# பேராசிரியர் கைலாசபதி இன்றும் எதிர்க்கப்படுவதற்கு காரணம்

## அவரது மாக்சிச அரசியல் நிலைப்பாடேயாகும்

பேராசிரியர் கைலாசபதி மறைந்து 21வருடங்கள் ஆகின்றன. அவரது நினைவு வருடாவருடம் நினைவு கூரப்படுகின்றது. இங்கே தேசிய கலை இலக்கியப் பேரவை ஏற்பாடு செய்துள்ள இந் நினைவு நிகழ்விலே இளம் தலைமுறையினர் கருத்துரை வழங்குவதும் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொள்வதும் நம்பிக்கை தருவதாக உள்ளது. ஏனெனில் கைலாசபதியின் கருத்துக்கள் காலத்தால் வாழ்பவை மட்டுமன்றி சமூகப் பங்களிப்பை வழங்கிய வல்லமை கொண்டவையுமாகும்.

கைலாசபதி இறந்து இருபத்தியொரு ஆண்டுகள் ஆகியும் அவரை எதிர்ப்பவர்களும் கல்லெறிபவர்களும் தொடர்ந்து தமது செயலைச் செய்து கொண்டே இருக்கிறார்கள். இந்த இடத்திலே ஒரு விடயத்தை சற்று ஆழமான கேள்வியாக்கிக் கொள்வது அவசியமாகிறது. ஏன் கைலாசபதிக்கு எதிராக இத்தகையோர் தொடர்ந்து எழுதியும் பேசியும் தூற்றியும் வசைபாடியும் வருகின்றார்கள் என்பதாகும். அதற்கான விடை கைலாசபதி தெளிவான மாக்சிச உலக நோக்கைக் கொண்டிருந்தமையும் அதன் அடிப்படையில் உறுதியான அரசியல் பார்வையை முன்னிறுத்தி தனது கல்வி இலக்கியப் பணியினை சமூகப்பயன்பாடுள்ளதாக முன்னெடுத்தமையுமேயாகும்.

இத்தகைய தெளிவான பார்வையை அவர் கொண்டிருந்தமையால் ஒவ்வொரு விடயத்தையும் வரலாற்றுணர்வோடும் முன்னுக்குப்பின் முரண் இன்றியும் தான் கூறவந்தவற்றை வாசிப்போருக்கும் கேட்போருக்கும் எளிதாக விளங்கக் கூடியதாகவும் முன்வைத்து வந்தார். அது அவரது கல்வி இலக்கியத்துறைப் பங்களிப்பின் சிறப்பு என்று கூறலாம். அதேபோல தான் ஏற்கனவே கூறியவற்றை வேறொரு சந்தர்ப்பத்தில் மறுப்பது போல் பேசுவதோ எழுதுவதோ கைலாசபதி கடைப்பிடித்த நடைமுறையல்ல. அவ்வாறு ஏதாவது ஒன்றை மாற்றிக் கூறவோ எழுதவோ சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தால் அதற்கான காரணத்தையும் சூழலையும் அவர் எடுத்துரைக்கத் தவறியதில்லை. கைலாசபதி தவறுகளே செய்யாத அதற்கு அப்பாற்பட்ட மனிதர் என யாரும் கொள்ளமுடியாது. அவரைத் தவறற்றவர் என்று கூறமுற்படுவது அவர் இறுதிவரை கடைப்பிடித்து வந்த மாக்சிச உலக நோக்கிற்கு எதிரான ஒன்றாகும். அவரது கல்வி இலக்கியத் துறைத் தவறுகள் நிகழ்ந்திருந்தால் அவை கைலாசபதி என்ற தனி மனிதரின் விருப்பு வெறுப்பு காரணமாக எழுந்தவையல்ல. அன்றைய சமூக அரசியல் இலக்கியச் சூழலினதும் அவர் பங்கு கொண்டிருந்த மாக்சிச லெனினிச இயக்கத்தினதோடும் சம்மந்தப்பட்டவை என்பதை புரிந்து கொள்ளல் வேண்டும்.

ஆதாலால் கைலாசபதியின் பங்களிப்பும் அவர் விட்டுச் சென்ற பணியும் சமகாலத்தில் மேலும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டியதாகும். அதற்கு இளம்தலைமுறையினர் உற்சாகமாக முன்வந் திருப்பது வரவேற்கப்பட வேண்டியதாகும்.

இவ்வாறு கடந்த டிசம்பர் 8ம் திகதி (கைலாசபதியின் மறைவுதினம் 6-12-1982) கொழும்பு இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் கைலாசபதியின்ன21வது ஆண்டு நினைவு தினக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றும் போது பேராசிரியர் சி.சிவசேகரம் கூறினார். மேபற்படி நினைவுதினக் கூட்டத்தில் கைலாசபதியின் மூன்று நூல்கள்



பற்றிய கருத்துரைகள் வழங்கப்பட்டன. இலக்கிய சிந்தனைகள் நூலினை ஸ்ரீ.கிருபானந்தும் பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும் நூலை பொ.கோபிநாத்தும் அடியும் முடியும் நூலினை திருமதி வானதி காண்டீபனும் சிறப்பான கருத்துரைகளாக முன்வைத்தனர். பெருந்தொகையான இலக்கிய சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் தவப்பயன நாடக அரங்காற்றுகை சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெற்று பார்வையாளர்களால் பெரிதும் வரவேற்புக்கு உள்ளாகியது. சோ.தேவராஜா நன்றியுரையும், வ.சிவசோதி அறிவிப்பையும், மாவை வரோதயன் வரவேற்புரையையும் வழங்கினார்.

## சிறையுண்ட

பங்களிப்பை அடக்கியே வாசித்திருக்கின்றன. இது மிகவும் சோகமானதாகும் ஆனால் இந்நூல் அக்குறையை நீக்கி இளைய தலைமுறைக்குத் தோழர் எஸ்.ரி.என் சம்பந்தமான கணிசமான தகவல்களைத் தந்திருப்பது அனைத்துத் தாழ்த்தப்பட்ட சமூகங்களையும் திருப்திப்படுத்துமெனக் கூறலாம்.

சாதிய எதிர்ப்பு, மாக்சியப் பரம்பல் என்பனவற்றில் தாமே ஆதிமூலமாக இருந்ததென இன்று சில சீறுவாணங்கள் இளையதலைமுறைக்குப் பொய் முகம் காட்டி வருகையில், பேராசிரியர் க. கைலாசபதி இ.முருகையன், நீர்வை பொன்னையன் என்.கே.ரகுநாதன் ,கே.டானியல், செ.யோகநாதன் ,இளங்கீரன், க.தணிகாசலம், செ.கணேசலிங்கன், சுபத்திரன், சில்லையூர் செல்வராசன், பெனடிக் பாலன், ஆகியோர் மார்க்ஸ், லெனின், மாஒசேதுங் ஆகியோரது பொதுவுடமைத் தத்துவாச்சாரியார்களது சிந்தனைகளடங்கிய மக்கள் இலக்கியங்களைப் படைத்தது மட்டுமன்றிய போராட்டக் களங்களிலும் முன்னின்று தம்மை போராளிகளாகச் காட்டினரெனவும் நிறுவப்பட்டுள்ளது. இவைகளை வாசித்தபின் நிச்சயமாக சமூக அக்கறைமிக்க வாசகர் ஒரு முறை சிலிர்த்து நிமிர்வர்!

வாசக நெஞ்சத்தை தூண்டுவதற்காகவன்றி ஆழ்ந்து சிந்திக்கும் பொருட்டும் இந்நூலில் சுவார்சியமான குறிப்புக்கள் காணப்படுகின்றன. அதில் ஒன்று மறைந்த பொதுவுடமைவாதியென அறியப்பட்ட வி.பொன்னம்பலம் பற்றியதாகும். அவரது சீரழிந்த பிற்கால அரசியல் வாழ்வில் ஏற்பட்ட சரிவுக்கு ஒரு உதாரணம் சுவாரிசமான சம்பவம் மூலம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இன்னொரு சுவையான குறிப்பு அடங்காத் தமிழரான சி.சுந்தரலிங்கம் தமிழகத்துச் சைவச் கோயிலொன்றிற்கு வழிப்படச் சென்றாராம். இவரது உயர்ந்த கரிய தோற்றத்தைக் கண்ட கோயில் முகாமையாளர்கள் இவரை ஆதித்திராவிடர் (தாழ்த்தப்பட்டவர்) எனக்கூறி ஆலயத்திற்குள் பிரவேசிக்க விடவில்லையாம்! இதே கணித மேதை சுந்தரலிங்கம்தான் மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலுக்குள் பஞ்சமரை விடக் கூடாதெனச் சன்னதமாடியவர். நீதிமன்றம் வரை சென்றும் பஞ்சமரிடம் தோற்றவர். தன்னை-எதைச் கூறித் தமிழகத்தில் சிறுமைப் படுத்தினரோ அதையே கூச்சமின்றி ஏவி பஞ்சமரை மல்லுக்கு இழுத்த இதயம் தான் எப்படிபட்டதோ!

1953 ஆம் ஆண்டு வேலை நிறுத்தத்தில் மிரண்டு போன டட்லிசேனநாயகாவின் மந்திரிசபை கடலில் தரித்து நின்ற வெளிநாட்டுக்கப்பலில் கூட்டம் நடத்தியதாகவும், வியட்நாம் போரை நியாயப்படுத்தும் வகையில் ,யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அமெரிக்கத் தூதுவருக்கு பொதுவுடைமைக் கட்சி கூழ்முட்டை வீசியதாகவும் வியப்புறு தகவல்களை ஆசிரியர் தனது மனப்பதிவுகளிலிருந்து வெளிப்படுத்தி இருக்கின்றார். இவைகள் சுவையான புதிய தகவல்கள் தானே! நிறைவாக இந்நூலின் ஆசிரியர் சி.கா.செந்திவேல் பல பிரயத்தனத்தோடு தனது மனப்பதிவுகளைக் கிளறி இருப்பெடுப்பைச் செய்ததின் மூலமாக காலத்தின் தேவையொன்றைப் பூர்த்தி செய்துள்ளார். வடபுலத்துப் பொதுவுடைமைக் கட்சியின் பரிணாமம் அதன் முற்போக்கு புரட்சிகர நடவடிக்கைகள் அத்தோடு தோழர் மு.கார்த்திகேசன் அவரின் வழிவந்தவர்களின் அரசியல் ஈடுபாடு என்பவற்றை தொடரப்போகும் புதிய தலை முறையினர்அறியச் செய்வதற்கு வடபுலத்து பொதுவுடமைகள் இயக்கமும் தோழர் கார்த்திகேசனும் என்ற இந்நூல் அரிய சாதனமாகின்றது. அத்தோடு சில பொதுவுடமைவாதிகள் எனப்பட்டவர்களால் விதைக்களப்பட்ட பொய்மைகளையும் இனங்காட்டியுள்ளது! மாக்சிஸ், லெனினிச சிந்தாந்தங்கள் உயிர்ப்புடன் மேலும் முன்செல்ல உதவுகின்ற இந்நூலை இளைய தலை முறையினர் தவறாது படித்து பயன் பெற வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுதலாகும்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 11 | ஜனவரி 2004 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 65

## கியூபாவின் 45வது தேசிய தினம்



கியூபாநாட்டு மக்கள் விடுதலை பெற்ற 45வது வருட தினம் ஜனவரி முதலாம் திகதி 2004 ஆகும். புரட்சிகர தலைவரும் இன்று வரை அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு விட்டுக் கொடுக்காது தமது நாட்டையும் மக்களையும் வழி நடாத்திச் செல்லும் தோழர் ஃபிடல் காஸ்ரோவின் தலைமையிலான கியூபா நாட்டிற்கும் மக்களுக்கும் எமது புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பால் மக்கள் அவதி
# தடுத்து நிறுத்த முடியாது இருப்பது ஏன்?

கடந்த வரவுசெலவுத்திட்டம் மிக மோசமான மக்கள் விரோத அம்சங்களைக் கொண்ட ஒன்றாகவே பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது. அதன் எதிர் விளைவுகள் மக்களை நோக்கி விலை அதிகரிப்பு களாகவும் கட்டண உயர்வுகளாகவும் வரி அறவிடுதல்களாகவும் தமது அசுரப்பற்களைக் காட்டி நிற்கின்றன. ஒரு சில பொருட்களுக்கு விலை அதிகரிப்பு இடம் பெறும் போது அந்த அதிகரிப்பானது சகல அன்றாட அத்தியாவசியப் பாவனைப் பொருட் களின் விலைகள் மீதும் சத்தமின்றியே அதிகரிப்பை ஏற்படுத்தி வருவதையே மக்கள் எதிர் கொள்கின்றனர்.

அண்மைய நாட்களில் எரிபொருட்கள், கோதுமை மா என்பனவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. ஆனால் அரிசி முதல் தேங்காய் வரை அல்லது மீன்முதல் மரக்கறிகள் வரை தாமாகவே விலை அதிகரிப்பைக் கொண்டிருந்தன. இவை நாளாந்த நிகழ்வுகளாகும். இத்தகைய விலை அதிகரிப்புகளால் கட்டண உயர்வு களால், வரிஅதிகரிப்பு அறவிடுதல் களால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வருவது சாதாரண தொழிலாளர்கள் விவசாயிகள் அரசாங்க தனியார் ஊழியர்கள் உள்ளிட்ட ஏகப் பெரும் பான்மையான மக்களேயாவர்.

இவ்வாறு ஒரு புறத்தால் வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்லும் அதேவேளை சம்பள உயர்வு வெறும் ஏமாற்றாகவே வழங்கப்பட்டது. 1250 ரூபா அல்லது சம்பளத்தின் 10வீத அதிகரிப்பு என்பது கூட அரசாங்க ஊழியர்களுக்கு மட்டுமே இம்மாதத்தி லிருந்து வழங்கப்பட உள்ளது. ஆனால் தனியார் துறையில் பணி புரியும் சுமார் அறுபது லட்சம் தொழிலாளர்கள் ஊழியர்களுக்கு எவ்வித சம்பள உயர்வும் வழங்கப்பட நடவடிக்கையும் இல்லை.

இவ்வாறு தத்தமது துறைகளில் சம்பள உயர்வு, சம்பள முரண்பாடு, சம்பள நிலுவைகள் என்பனவற்றை முன் நிறுத்தி வேலை நிறுத்தங்கள், வேலைப் பகிஷ்கரிப்பு, மறியல் போராட்டம், கறுப்புப்பட்டி அணிந்து எதிர்ப்புத் தெரிவித்தல் எனப் பலமுனைகளிலும் போராட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.

இவ்வாறு விலை அதிகரித்துச் செல்வதற்கான அடிப்படை இன்றைய அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வரும் தாராள தனியார்மய பொருளாதாரக் கொள்கைகளேயாகும். சொந்த உற்பத்திகள் படிப்படியாகச் சீரழிந்து கைவிடப்படச் செய்த அதே வேளை அந்நிய பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடின்றி அனுமதிக்கப்பட்டது. அவ் அந்நிய இறக்கு மதி மீது முற்றிலும் தங்கி இருக்கும் நிலை உருவாக்கப் பட்டது. எனவே அந்நியர்களும் அவர்களது உள்நாட்டு முகவர்களான தரகு முதலாளிகளும் தான் பொருட் களின் விலைகளைத் தீர்மானிப்பவர் களாகி நிற்கின்றனர். இவர்களது நலன் பேணும் அரசாங்கம் என்பதில் அந்தகைய விலை உயர்வுகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

அரசாங்கம் வரி அறவீடுகளையும் வர்த்தகப் பெரும் புள்ளிகள் கொள்ளை லாபத்தையும் பெற்றுக்கொள்வதற்கு மக்களின் அன்றாட அத்தியாவசியப் பொருட்கள் மீதே தமது கைவரிசை யினைக் காட்டுகின்றனர். ஏனெனில் அதன் மூலமே தமது பண வருவாயைத் தேடிக் கொள்ள முடியும் என்பதாலாகும்.

எனவே மக்களுக்கு எதிரான மிகப் பெரும் வாழ்க்கைச் சுமையான விலை அதிகரிப்பை, கட்டண உயர்வை, வரி அதிகரித்தல்களை பாராளுமன்ற எதிர்க் கட்சியானது தமது அரசியல் லாபத்தி ற்கு அப்பால் வீதியில் இறங்கி எதிர்ப்ப தில்லை. காரணம் அவர்களும் தமது ஆட்சியின் போது இதையே தான் செய்தவர்கள். எதிர்காலத்தில் ஆட்சிக்கு வந்தாலும் அதையே தான் செய்வார்கள்.

எனவே பொருளாதார நிலைமைகளின் உண்மையான தன்மைகளை அரசியல் ரீதியாகக் கண்டு சரியான உறுதியான எதிர்ப்பு இயக்கங்களையும் போராட்டங் களையும் பரந்த அடிப்படையில் மக்கள் மத்தியில் முன்னெடுப்பதே சரியான வழிமுறையாகும்.

## பலாலி விமான நிலையம் இந்திய ராணுவப் பிடியில்

வடபுலத்தில் அமைந்துள்ள பாரிய ராணுவ முகாம் பலாலி விமான நிலையத்தை உள்ளடக்கிய பாதுகாப்பு வலயம் எனவும் கொள்ளப்படுகின்றது. இத்தகைய விமான நிலையத்தை தத்தமது கைகளில் கொண்டுவந்து விடுவதற்கு அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் உள்ளார்ந்த போட்டி நிலவி வந்தது. ரணில் அரசாங்கம் பதவிக்கு வந்ததும் அமெரிக்க உயர் கட்டளைத் தளபதி உட்பட ராணுவ ஆலோசகர்கள் பலாலிக்கு நேரடி யாகச் சென்று பல்வேறு நிலைக் கண் ணோட்டங்களைச் செலுத்தி வந்தனர்.

இதனை மிக உன்னப்பாக அவதானித்த இந்திய ராணுவக் கொள்கை வகுப்பாளர்கள் இலங்கையை மிரட்டி நிர்ப்பந்திக்கத் தொடங்கினர். புலிகள் இயக்கத்தின் ராணுவ வல்லமையைக் காட்டி இலங்கை அரசாங்கத்தையும் அதன் உயர் ராணுவ பீடத்தையும் தம்வழிக்கு கொண்டு வருவதில் வெற்றியும் பெற்றுக் கொண்டனர்.

அதன் விளைவானதே பலாலி விமான நிலையத்தை திருத்தி அபிவிருத்தி செய்வதை இந்தியா கையேற்றிருக் கிறது. அண்மையில் இந்தியாவிற்குச் சென்ற இலங்கை ராணுவத் தளபதி பலாலி விமான நிலையத்தை ராணுவ ரீதியில் திருத்தவும் அபிவிருத்தி செய்யவும் இணக்கம் தெரிவித்துத் திரும்பியுள்ளார். இதன்படி 50 கோடி இந்திய ரூபாய்களைச் செலவு செய்ய இந்திய ராணுவத் தரப்பு இணங்கி யுள்ளது. திருத்தத்துடன் ஆரம்பித்து விமான நிலையம் பாரிய அளவில் விஸ்தரிக்கப்படலாம் என்பதில் ஐயமிருக்க முடியாது.

இவ் விமான நிலையத் திருத்தத்துடன் பலாலியில் புகுந்து கொள்ளும் இந்தியா குத்தகை அடிப்படையில் இலங்கைப் படைகளை ஏற்றி இறக்க ஹெலி கொப்ரர்களை வழங்கவும் இணங்கி யுள்ளது. இவ்வாறு படிப்படியாக பலாலி விமான நிலையத்தை மட்டுமன்றி பாதுகாப்பு ஆலோசனை என்ற பெயரில் ராணுவ விவகாரங்களையும் இந்தியா கையாளவே செய்யும், அதன் பின்பு பலாலி இந்திய விமான நிலையங்களில் ஒன்றாக மாற்றப்படும். நாட்டின் இறமை சுயாதிபத்தியம் பற்றி வாய் கிழியக் கத்தும் பௌத்த பேரின வாதிகள் இது பற்றி எதுவுமே பேசாது இருப்பது தான் விந்தையானது இத்தகைய செயற்பாடுகளையே இந்திய பிராந்திய மேலாதிக்க விஸ்தரிப்பு என நாம் தொடர்ந்து எடுத்துக் கூறி வருகின்றோம்.

## வடபுலத்தில் காணாமல் போனோர் பற்றி பதில் கூறவேண்டியவர்கள் யார்?

அண்மையில் கொழும்பு மாநகரில் நீதி அமைச்சு, ஜனாதிபதி செயலகம், மனித உரிமை ஆணையகம் என்பவற்றுக்கு முன்னால் காணாமல் போனோரின் தாய்மார்கள் சகோதரிகள், உறவினர்கள் என்போர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு தமது ஆழ்ந்த கவலைகளையும் கோரிக்கை களையும் வெளிப்படுத்தினர். இதனை வடபுலத்திலிருந்து வந்த அன்னையர் முன்னணியினரும், காணாமல் போனோர் சார்பான சங்கத்தினரும் ஏற்பாடு செய்திருந்தனர். இவர்கள் ஜனாதிபதியை சந்திக்க எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை. ஜனாதிபதி அதற்கு நேரம் ஒதுக்க முடியாது எனக் கூறியதாகவும் கூறப்படுகின்றது.



**வடபுலத்தில் காணாமல் போனோரின் உறவினர்கள் நீதிமன்ற வளாக அருகாமையில் நீதி அமைச்சின் முன்பாக மறியல் போராட்டம் நடாத்தினர்.**

1996ம் 97ம் ஆண்டுகளில் வடபுலத்தில் ராணுவ நடவடிக்கைகளின் உச்சக் கட்டத்தில் பல நூற்றுக் கணக்கானவர் கள் ராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல் போயினர். அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு என்ன நடைபெற்றது என்பதை அவர்களின் பெற்றோர் மனைவிமார் குழந்தைகள் உறவினர்கள் இன்றுவரை அறிய முடியாதவர்களாகவே இருந்து வருகின்றனர். கைது செய்யப்பட்ட வர்கள் மறைத்து வைக்கப்பட் டுள்ளனரா? சிறைகளில் உள்ளனரா? அல்லது கொல்லப்பட்டனரா? இக்கேள்விகளுக்குப் பதில் கேட்டே கடந்த ஏழு எட்டு வருடங்களாக தாய் தந்தையர் மனைவி பிள்ளைகள் மற்றும் உறவினர் பல்வேறு இயக்கங்களை நடாத்தி வந்த போதிலும் அவற்றுக்கு யாரும் பொறுப்போ பதிலோ கூற முடியாத நிலையே இருந்து வருகிறது.

கடந்த இருபது வருடகால யுத்தத்தில் ராணுவம், ஆயுத இயக்கங்கள் என்பன வற்றால் பல நூற்றுக்கு மேற்பட்டோர் வடக்கு கிழக்கில் காணாமல் போகினர். இவ்வாறானவர்களின் கதிக்கு சம்மந்தப்பட்ட எவருமே பொறுப்பும் பதிலும் கூறவில்லை. இதனால் நாளாந்த மன ஏக்கம், கவலை அவை சார்ந்த நோய்கள் என்பனவற்றுட னேயே காணாமல் போனோரை இழந்து நிற்போர் நடைப்பிண வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

இவற்றுக்கு ஜனாதிபதியோ பிரதமரோ ராணுவத்தலைமை அதிகாரிகளோ பதில் கூறுவார்கள் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் அடக்குமுறை யந்திரத்தின் தலைமையாளர்களே இவர்களாக இருக்கும் போது அவர்கள் உரிய பதில்களை எவ்வாறு தருவார்கள். இருப்பினும் உரிய பதிலை அவர்கள் காணாமல் போனோரின் பெற்றோர் மனைவிமார் குழந்தைகள் உறவினர்களுக்கு வழங்கியே தீரவேண்டும். அதற்கான நடவடிக்கை களை ஆளும் தரப்பினர் செய்தே ஆகவேண்டும். அதற்கு தொடர்ந்தும் அன்னையர் முன்னணியினர் காணாமல் போனோர் சங்கத்தினர் எடுக்கும் நடவடிக்கைகளுக்கும் கோரிக்கைகளை வலியுறுத்தும் இயக்கங்களுக்கும் மனிதநேயம் மிக்க அனைத்து அமைப்புகள், அரசியல் கட்சிகள், மக்கள் பரந்த நலன் பேணுவோர் ஆதரவை வழங்க வேண்டும். தென்னிலங்கையில் முன்பு காணாமல் போனோருக்கு எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் நஷ்டஈடு மற்றும் சட்ட நடவடிக்கைகள் போன்று வடக்கு கிழக்கில் காணாமல் போனோருக்கும் பாரபட்சமின்றி செய்யப்படல் வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றோம்.

### தேசிய இனப்...

10ம் பக்க தொடர்ச்சி.....

ஜனநாயக சக்திகளுடன் இணைந்து செயல்பட்டும் வந்துள்ளது.

நாம் புலி எதிர்ப்பு புலி ஆதரவு என்ற சட்டகத்திற்கு அப்பால் பேரின வாத ராணுவ ஒடுக்கு முறையை அடிப்படையாக வைத்தே நமது கொள்கை நிலைப்பாடு வகுத்து முன்னெடுக் கப்பட்டு வந்துள்ளது. வெறுமனே அரசியல் இருப்புக்கான அகவிருப்பு வெறுப்பு என்பதற்கு அப்பால் புறநிலை யதார்த்தம் ஏற்படுத்திநிற்கும் உண்மைகளின் அடிப் படைகளை நமது மாக்சிச லெனினிச அணுகு முறைகளின் ஊடாக நோக்கியே நமது நிலைப்பாட்டை முன்னெடுத்து வந்துள்ளோம் என்பதை இவ்வேளையில் சுட்டிக் காட்டுவது தேவையாகின்றது.

மாக்சிச லெனினிசவர்க்கப் போராட்ட அணுகு முறை என்பது வரட்டுத் தனமானதொன்றோ அன்றி விறைப் பான தொன்றோ அல்ல. அது நாட்டின் நிலவி வரும் சமூகக் கட்டமைப்பையும் அதன் இயங்கு சக்திகளான வர்க்கங்களின் வளர்ச்சிப் போக்கையும் ஆய்வுக்குட்படுத்தியே நமது கொள்கை கள் வகுக்கப்படுவதாகும். எனவே தேசிய இனப்பிரச்சனையில் மாக்சிச லெனினிச நிலைப்பாடு என்பது அப்பிரச் சினையின் வரலாற்று வளர்ச்சியை உரியபடி கண்டு கொள்வதன் மூலமே உருவாக்கிக் கொள்ள முடியும்.

இன்றைய சூழலில் தேசிய இனப் பிரச்சினை புதிய சவால்களையும் உள்நாட்டு வெளிநாட்டு அபாயங் களையும் சந்தித்து நிற்கும் கட்டத்தினுள் பிரவேசித்து நிற்கின்றது. அவை பற்றிய விரிவானதும் ஆழமானதுமான மாக்சிச லெனினிசநோக்கு அவசியமாகின்றன. அவை பற்றிக் தொடாந்து விவாதிப்போம்.

### சமாதான

1ம் பக்க தொடர்ச்சி..

எதிர்பார்ப்பதற்கு என்ன இருக்கிறது. தொடர்ச்சியாக இலங்கை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு எதிராக எடுத்து வந்த நடவடிக்கைகளை கைவிட்டு இந்தியா திருந்திவிட்டதா? இலங்கையில் எத்தகைய சமாதானத்தை இந்தியா விரும்புகிறது.

இந்திய ஆளும் வர்க்கம் நம்நாட்டு சமாதான நடவடிக்கைகளை குழப்பா மல் இருக்க இரண்டு வழிகள் இருக் கின்றன. ஒன்று மீண்டும் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தையும், தமிழ்மக்களின் தேசிய அபிலாஷை களையும் இந்தியாவிடம் தாரைவார்த்து விடுவது. இரண்டு இந்தியா வின் குழப்பங்களுக்கு மேலாக உறுதியான சமாதான நடவடிக்கை களை எடுப்பது.

உறுதியான சமாதான நடவடிக்கை களை எடுப்பதன் மூலம் இந்திய மேலாதிக்கத்திடமிருந்து இலங்கையின் இறமையைப் பாதுகாத்துகாத்துக் கொள்ள முடியும் அதற்கு இலங்கைத் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வது அவசியமான தாகும்.

### திலங்க சுமதிபால

1ம் பக்க தொடர்ச்சி..

தினத்தன்று அவர் மேலதிக நீதவான் ஒருவர் முன்னிலையில் சரணடைந்த பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். அம்மேலதிக நீதவான் சட்டத்திற்கு முரணாக நடந்து கொண்டார். என்ற குற்றச்சாட்டின் பேரில் சேவையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுமுள்ளார்.

திலங்க சுமதிபால மேன்முறையீட்டு நீதிமன்றில் சமர்ப்பித்திருந்த பிணை விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட் டுள்ளது. இவ்வாறிருந்த போதும் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஜனவரி 8ம் திகதி ஆஜராக வேண்டு மென்று அவருக்கு அறிவிக்கப்பட் டுள்ளது.

சாதாரண மனிதன் பொலிசாரை முறைத்துப் பார்த்தாலே அடி, உதை யுடன் விளக்கமறியல் மட்டுமன்றி உயிர் குடிப்பது வரை எல்லாம் இலகுவாகவே நடந்துவிடுகிறது. நீதிமன்ற தண்டனையை விட சிறைச்சாலைகளில் வேறு விஷேடமாக அடி, உதைகள் சித்திரவதைகள் கிடைக்கும்.

கிரிக்கட்டை போர்வையாக வைத் திருக்கும் பணம் படைத்தவரை அசைக்க முடியாமல் இருப்பது கிரிக்கட் ஜெண்டில்மன் விளையாட்டு என்பதற் காகவல்ல. அவரின் பணம், அவரின் வர்க்கம் என்பவற்றால் அவர் பாதுகாக்கப் படுகிறார் என்பதேயாகும். இதே திலங்க சுமதிபாலா தான் இலங்கையின் மிகப்பெரிய அந்நிய - உள்நாட்டு கூட்டு நிறுவனமான ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் தலைவராக வும் விளங்கி வருகிறார். அவர் நாடெங்குமுள்ள பல நூற்றுக் கணக்கான குதிரைப் பந்தய முகவர் நிலையங்களுக்கு சொந்தக்காரராவர். பொலீஸ் உயர் அதிகாரிகள், உயர் அரசியல் புள்ளிகள், பாதாள உலகம் என்பனவற்றின் கயிறுகள் எவர்களது கைகளில் இருந்து வருகின்றன என்பதைச் சற்று விரிவுபடுத்திச் சிந்தித்தால் அவற்றின் உள்ளார்ந்தம் புரியும் சட்டத்தின் முன் சகலரும் சமம் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A, K. சிறில் சி. பெரேரா மாவத்தை, கொழும்பு 13.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்